
# தமிழரசு

பிப்ரவரி 16-29, 2000 ரூ. 5







# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
மாசி
பிப்ரவரி 16-29, 2000
மலர் : 31 இதழ் : 16
விலை ரூ.5

*இந்த இதழில்...*

- சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதலமைச்சரின் பட்டமளிப்புப் பேருரை -- 2
- விளக்குகள் ---------- 6
- தந்தையோடு ஒரு சொல் ---------- 7
- கிங் மருத்துவ நிலைய நூற்றாண்டு விழா ---------- 9
- இளநீர் இனிய மருந்து ---------- 12
- உழவர் சந்தைகள் – கிராமப் பொருளாதாரத்தில் ஒரு புரட்சி ---------- 15
- திருவள்ளுவர் தீபம்; தீப்பந்தம் ---------- 17
- பன்னாட்டுச் சுற்றுலா ---------- 21
- தமிழகம் முழுவதும் கணினி மயமாக வேண்டும் ---------- 24
- கீர்த்தி ---------- 26
- சிறுசேமிப்பும் வருமான வரிச்சலுகையும் ---------- 34
- கூடி வாழ்ந்தால் கோடி நன்மை ---------- 37
- தொலைதூர வனப்பகுதிகளில் மனுநீதி நாள் ---------- 39
- வேளாண்துறையின் சவால்களும் சாதனைகளும் ---------- 41
- உடல் உழைப்புத் தொழிலாளர் நலத்திட்டம் ---------- 45

---

## திருக்குறள்

*மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்*
*கற்றா ரனைத்திலர் பாடு.*

கற்றவர் என்ற பெருமை, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டைப் போக்கிவிடும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*





# ஆற்றும் பணிகள் அத்தனையிலும் நீவிர் குவித்திடும் வெற்றிகள், வரும் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் வரலாறாய் விளங்கிடும்!

*சென்னைப் பல்கலைக்கழகத்தின் 142ஆவது பட்டமளிப்பு விழாவில் 18-2-2000 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.*

*இந்தியத் திருநாட்டின் புகழ் பூத்த மூத்தப் பல்கலைக்கழகங்களில் ஒன்று சென்னைப் பல்கலைக்கழகம். இந்தப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா உரைகள், 1857—ஆம் ஆண்டு முதல் 117 ஆண்டுகளாக ஆங்கிலத்தில் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்தன. அந்த நெடிய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக 118—வது பட்டமளிப்பு விழா உரையை 20.9.1975 அன்று முதன் முதலாகத் தமிழில் நிகழ்த்தியவன் நான் என்பதை இவ்வேளையில் நினைவூட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.*

**"பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின், நாடு நிலை குலையும், எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே, மனக்குழப்பம், கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலகம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது.**

**குறிக்கோள் தெளிவாக அமைந்திடின், மாணவர்களிடம் மாண்புமிகுச் செயலினை எதிர்ப்பார்க்க முடியும்"**

— என்று **பேரறிஞர் அண்ணா** அவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையில், பட்டம் பெறும் மாணவர்களுக்குக் குறிக்கோள் அவசியம் என்பதை வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறிக்கோளை நீங்கள் தேர்வு செய்திடும் வேளையில், வருங்கால வாழ்வுக்கு வளம் சேர்க்கும் தொழில், அதைத் தேர்வு செய்தல், அதில் வெற்றி பெறுதல் — வளம் பெறுதல் என்பது ஒரு புறம்.

அதன் மறுபுறம், நமது சமூகப் பண்பாட்டு வரலாறு. அந்த வரலாற்றில் காணப்படும் மேடு பள்ளங்கள், அவற்றைக் கடந்து நாம் இன்று கண்டுள்ள முன்னேற்றம் — இந்த முன்னேற்றம் தொடர்ந்து நீடிக்க, மேலும் நமது சமுதாயம் நலம்பெற உங்கள் பங்கு என்ன? கடமை எது? — என்ற அடிப்படையிலும், உங்களுடைய குறிக்கோள் அமைந்திட வேண்டும் என்று விரும்புகிறேன்.

**தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்வீர்**

இருபதாம் நூற்றாண்டு, உலகில் பல புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கி உள்ளது. இக்கால கட்டத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் நீவிர் சீர்தூக்கி ஆராய்ந்திட

வேண்டும். நலிந்த சமுதாயம் எழுச்சிப் பெறத் தேவையான அடித்தளங்கள் பல எழுப்பப்பட்டுள்ளன இந்த நூற்றாண்டில்.

அத்தளங்களின் மீது மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் அமைக்க வேண்டியப் பொறுப்பும், கடமையும் உங்களுக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

*1901*—ஆம் ஆண்டில் தமிழகத்தில் வாழ்ந்தவர்களில் கல்வியறிவுப் பெற்றோர் 6 விழுக்காட்டினர் மட்டுமே. *1991*—ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி *63.72* விழுக்காட்டினர் கல்வியறிவு பெற்றிருந்தனர். இன்றைய நிலையில் அந்த எண்ணிக்கை ஏறத்தாழ 80 விழுக்காடு அளவுக்கு உயர்ந்திருக்கக்கூடும்.

உயர் கல்வியில் தமிழகம் இந்திய மாநிலங்களில் முன்னணியில் உள்ளது. இந்த வளர்ச்சிக்குக் காரணம் — தமிழகம் முழுவதும் பரவலாகக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் — கல்வி நிறுவனங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் உரிய எண்ணிக்கையில் இடம் பெறக்கூடிய வகையில் இடஒதுக்கீடு உரிமைகளைத் திராவிட இயக்கம் அவர்களுக்குப் பெற்றுத் தந்தமை தான் மிக முக்கிய காரணம் என்பதை எவராலும் மறுத்திட முடியாது; மறைத்திடவும் இயலாது.

### ஆட்சி அதிகாரங்களில், அலுவலகப் பணிகளில் அடித்தட்டு மக்கள்

இன்று அதன் பயனாகக் காலங்காலமாய்ச் சமுதாயத்தின் அடித்தட்டுகளில் முட்டி மோதிக் கொண்டு கிடந்த பாமர மக்களெல்லாம் — மேல்தட்டினை நோக்கித் தட்டுத் தடுமாறி — மெல்ல, மெல்ல முன்னேறி — ஆட்சி அதிகாரங்களில், அலுவலகப் பணிகளில் இடம் பிடித்து, ஏற்றம் பெற்று வரும் அரிய காட்சிகளைச் சமுதாயத்தில் இன்று நாம் காண முடிகிறது.

இந்த மாற்றத்தை உருவாக்கியதில் திராவிட இயக்கத்திற்கும், பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர், டாக்டர் நடேசனார், முத்தையா முதலியார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருக்கும், அவர்களைத் தொடர்ந்து இன்றைய தமிழக அரசுக்கும் முக்கியப் பங்குண்டு என்பதை நாடறியும்.

இந்த வரலாற்றை இன்றைய இளைஞர்கள் அறிந்து, தெளிவது அவர்கள் தங்கள் கடமைகளை வகுத்துக் கொள்ள வழி பிறக்கும்.

ஏழை, எளியோர், நலிந்தோர், மெலிந்தோர் ஏற்றம் பெற அணி திரண்டு உழைப்பது உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள்களில் ஒன்றாய் அமைந்திட வேண்டும்

### தீண்டாமைக் கொடுமை அகற்றிடுவீர்

நமது சமுதாயத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்திடும் தீண்டாமைக் கொடுமைகளை அகற்றிடப் பாடுபட வேண்டியதும் நம் கடன்களில் ஒன்றாய் அமைந்திடல் வேண்டும் என்பது என் கருத்தாகும்.

தீண்டாமை என்பது மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட ஓர் அவமானச் சின்னம். அது நமது நாட்டுச் சட்டத்தின்படி அகற்றப்பட்டு விட்டது. ஆயினும் நமது மக்களின் மனங்களிலிருந்து இன்னும் அது அகன்றிடவில்லை. அதனை அகற்றும் பொறுப்பும், கடமையும் உமக்குண்டு.

எந்தப் பெரியார் இந்த நாட்டிலே சாதி ஒழிய வேண்டும் என்பதற்காகத் தம்முடைய தள்ளாத வயதிலும் பாடுபட்டாரோ, அவர் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு கூட, சென்னையில் தியாகராய நகரில் நடைபெற்றக் கூட்டத்தில் எவ்வளவு உறுதியோடு, அழுத்தம் திருத்தத்தோடு, சாதி ஒழிப்புக் குரலை அன்றைக்கு உயர்த்தினாரோ, அந்தப் பெரியார் உலவிய இந்த மண்ணில், அந்தப் பெரியாரின் குரல் கேட்காத பட்டிதொட்டிகள் இல்லை என்று சொல்லக் கூடிய இந்த மண்ணில், இன்றைக்கு அந்தப் பெரியார் இல்லை. அவர் இல்லை என்பதால் அவரின் கொள்கையும் இல்லாமல் போய்விடுகிறதோ என்ற ஏக்கம் தான் என்னை அலைக்கழித்துக் கொண்டு இருக்கிறது.

### மனிதனை மனிதன் அழித்திடும் மாபெரும் அவலம்

சாதிகளின் பெயரால், மதங்களின் பெயரால், பகைமையை வளர்த்துக் கொண்டு, மனிதனை மனிதன் அழித்திடும் மாபெரும் அவலம் இந்த மண்ணில் இனியும் நிகழ்ந்திடலாமா? இன்னும் எத்தனை காலத்திற்கு இந்தக் கொடுமைகள் தொடர்ந்திட வேண்டும்?

இளைஞர் சமுதாயம் நினைத்தால் இக்கொடுமையைக் கிள்ளி எறிந்திடல் எளிதாகும் என்பது என் நம்பிக்கை.

நாட்டு முன்னேற்றம் கருதும் நல்லோர் தம் தோளிற்குத் துணையாக — தூய தோழனாக இளைஞர் சமுதாயம் அணி திரண்டிட வேண்டும். அதற்கு உங்களின் தொண்டு துணை நிற்க வேண்டும் என உங்களை அன்போடு அழைக்கிறேன்.

அண்மைச் சில நாட்களுக்கு முன் ஓர் ஆங்கில நாளிதழில் இடம் பெற்றச் செய்தி ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதில் நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன்.

### உலகையே குக்கிராமமாகச் சுருக்கி விட்ட தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பம் இன்று உலகையே ஒரு குக்கிராமமாகச் சுருக்கி விட்டது. தகவல் தொழில்

நுட்பத் துறையில் அமெரிக்கா போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புகள் மிகுந்துள்ளன. அங்குத் தேவைப்படும் மனித ஆற்றல் இந்தியாவிலிருந்து, குறிப்பாக, நமது தமிழகத்தின் சென்னை மாநகரிலிருந்து அதிகமாகச் செல்கிறது என்னும் பெருமைப்படத்தக்க செய்தியை அந்த நாளேடு குறிப்பிட்டுள்ளது.

**1998 அக்டோபர் முதல் 1999 செப்டம்பர் வரை சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் 21,371 பேருக்கு விசா வழங்கியுள்ளது.**

**அந்த எண்ணிக்கையில் பாதிக்கும் குறைவாக மும்பை 9,734 விசாக்களை இக்காலக் கட்டத்தில் வழங்கியுள்ளது. புதுடெல்லி 5,460 பேருக்கும், கல்கத்தா 1,367 பேருக்கும் இத்தகைய விசாக்களை வழங்கியுள்ளன.**

**கடந்த ஆண்டிலும், முந்தைய ஆண்டிலும் சென்னை வாழ் தமிழ் இளைஞர்களே அதிகம் பேர் விசா பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்க நாட்டுக்கு விசா பெறுவோர் எண்ணிக்கையை நோக்கினால் மற்ற நகரங்களுக்கும், சென்னைக்கும் உள்ள இடைவெளி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது'.**

– என்று குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளது அந்த நாளேடு.

தாம் பெற்ற கணிப்பொறி ஆற்றல் மூலம் நமது இளைஞர்கள் தமிழகத்திற்குத் தேடித் தந்துள்ள பெருமை இது.

இத்தகைய பெருமைகள் தமிழகத்திற்குத் தொடர்ந்திட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த ஆட்சியில், தமிழகத்தில் தகவல் தொழில் நுட்பத்துறை புதிதாகத் தொடங்கப்பட்டு, தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் பெருகிடத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கணினிப் புரட்சியில் தமிழ்ச் சமுதாயம் பின்தங்கி விடக்கூடாது.**

டைடல் பார்க், டானிடெக் போன்ற நிறுவனங்களும், சென்னையிலிருந்து செல்லும் மாமல்லபுரச் சாலை நெடுகிலும் தகவல் தொழில்நுட்பத் தொழில் பூங்காக்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. நிகழ்ந்து வரும் கணினிப் புரட்சியில் தமிழ்ச் சமுதாயம் பின்தங்கி விடக்கூடாது என்பதற்காக மேல்நிலைப் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்கள் அனைவரும் கணினியில் ஆற்றல் பெற்று வெளிவர வேண்டும் என்பதனை ஒரு கொள்கையாக் கொண்டுள்ளது தமிழக அரசு.

இந்த அடிப்படைதான் இந்த ஆண்டில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 112 கோடி ரூபாய் செலவில் கணினி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் எஞ்சிய அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசுக் கல்லூரிகளிலும், இத்திட்டம் விரிவுப்படுத்தப் படவுள்ளது.

உலக அளவில் வாழும் தமிழர்கள் அனைவரும் கணினியில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயம் பயன் பெறும் எனும் உணர்வுடன் கணினியில் தமிழ் மொழி இடம் பெறச் செய்வதற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**உலகத் தரத்திற்கு இணையாகத் தமிழ் விசைப் பலகை**

அதற்காகவே தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு சென்னையில் நடத்தப்பட்டு, உலகத் தரத்திற்கு இணையாகத் தமிழ் விசைப்பலகை வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ் வரி வடிவக் குறியீடு தரப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதிலும் சமுதாய இணைய மையங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. இவையெல்லாம் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் தமிழகம் மேன்மைபெறத் தமிழக அரசு எடுத்துவரும் முக்கிய நடவடிக்கைகளில் சிலவாகும்.

இத்தகையப் பணிகள் தொடரவும், இவற்றை மேலும் வளர்த்திடவும், இத்திட்டங்களின் வளர்ச்சியில் இயன்ற வழிகளில் எல்லாம் உங்களுடைய பங்கு அமைந்திடவும் வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

**காலத்தால் கருதிச் செய்யும் செயல்கள் ஞாலத்தை உங்கள் கைப்படச் செய்யும்**

இப்படி எத்திசைச் சென்றால் அத்திசையில் அறிவாற்றலை வளர்க்கலாம், நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை மேம்படச் செய்யலாம் என்று தோன்றுகின்றதோ அவ்வழிகள் அனைத்திலும் உங்கள் கவனங்கள் செல்லட்டும்.

காலத்தால் இடத்தால் கருதிச்செய்யும் செயல்கள் இந்த ஞாலத்தையும் உங்கள் கைப்படச் செய்யும் என்பதை நீவிர் மறந்திட வேண்டாம். அதே நேரத்தில், மற்றொன்றையும் இவ்வேளையில் உங்களுக்கு நினைவுப்படுத்திட விரும்புகிறேன்.

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு.**

**கற்றோர்க்கு எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் சிறப்பு என்கிறபோது, ஒருவன் சாகும் வரையில் கற்காமல் காலம் கழிப்பது ஏனோ?**

***– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...***

**“சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச் செல்வங்கள் யாவுங்கொணர்ந்திங்கு சேர்ப்பீர்”**

– என மகாகவி பாரதியார் கூறியதை மனம் கொள்வீர்.

எத்திசை நோக்கி – எந்த நாடு நோக்கி நீவிர் சென்றிடினும், அந்தந்தத் திசைகளில் எல்லாம் – அந்தந்த நாடுகளில் எல்லாம் உங்கள் ஆற்றலையும், அறிவையும் நிலைநாட்டிப் புகழ் ஈட்டிடுவதுடன், தாய்நாட்டிற்குத் திரும்பி வந்து உங்களுடைய உழைப்பின் பயனை உங்களைப் பெற்றெடுத்தத் தாய், தந்தையரும், வளர்த்து ஆளாக்கி வாழ வைத்தத் தமிழ் மண்ணும், தாயகமும் பெருமை கொள்ளும் வகையில் பயன்படுத்திட வேண்டும் எனும் உணர்வு உங்கள் குருதியோடு ஒன்றிட வேண்டும் என்பதனை வலியுறுத்திட விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அறிவாயுதங் களாக வெளிக்கிளம்பும் செறிவார்ந்த என்னருமை மாணவச் செல்வங்களே!

மீண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிய மொழிகளை எடுத்துரைத்து – வாழ்த்துக்களை மொழிந்து உங்களை வழியனுப்பிட விரும்புகிறேன்.

அண்ணா கூறினார்:

**"Dear Brother,**

**Go to the People.**
**Live among them.**
**Learn from them.**
**Love them.**
**Serve them.**
**Plan with them.**
**Start with, what they know.**
**Build on, what they have."**

**“அன்பு உடன்பிறப்பே,**

**மக்களிடம் செல்**
**அவர்களுடன் சேர்ந்து வாழ்**
**அவர்களிடமிருந்து அறிந்துகொள்**
**அவர்களிடம் அன்பு செலுத்து**
**அவர்களுக்குத் தொண்டு செய்**
**அவர்களுடன் திட்டமிடு**
**அவர்களுக்கு எது தெரியுமோ,**
**அதிலிருந்து தொடங்கு**
**அவர்கள் எதைக் கொண்டுள்ளார்களோ**
**அதைப் பயன்படுத்தி அவர்கள்**
**முன்னேறப் பாடுபடு”**

– இது **அண்ணா** கூறிய அறிவுரை.

இதையே அமெரிக்க அதிபராகத் திகழ்ந்த உட்ரோ வில்சன் என்பாரும் இப்படிக் கூறுகிறார்.

**"Nations are renewed from the bottom not from the top.... real wisdom of human life is compounded out of the experiences of ordinary men",**

**“சமுதாயச் சீரமைப்பு என்பது கீழ் மட்டத்திலிருந்து தொடங்கப்பட வேண்டுமே தவிர, மேல் மட்டத்திலிருந்து அல்ல! சாதாரண சராசரி மனிதனது எண்ணங்களையும், வாழ்க்கை அனுபவங்களையும் எண்ணி உணர்ந்து இணைத்துச் சிந்தித்துச் செயலாற்றிட வேண்டும். அதுதான்** மனிதத் **தன்மை மேம்பட்ட அறிவு ஆற்றல் என்பது”**

– **என்று உட்ரோ வில்சனும்** கூறினார்.

எனவே சாமானியர்களது எண்ணங்களின் அடிப்படையில் எழும் மனிதத் தன்மையை ஆற்றலை, அறிவை உங்களது ஆடைகளாய் அணிமணிகளாய்க் கொள்வீர்களாக!

**“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்க முடையா னுழை”**

**“உறுதியான ஊக்கம் உடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, உயர்வு அவர்களிடம் போய்ச்சேரும்”**

– என **அய்யன் திருவள்ளுவன்** உரைத்த மாணிக்க மொழிகளை மனம் கொள்வீர். இவை உமக்கு ஏணிப்படிகளாய் அமைந்து ஏற்றம் தரல் திண்ணம். ஊக்கமுடன் செயல்படுவீர்.

**“இளந்தமிழா, கண்விழிப்பாய்!**
**இறந்தொழிந்த**
**பண்டைநலம் புதுப்புலமை**
**பழம்பெருமை அனைத்தையும்நீ**
**படைப்பாய்! இந்நாள்**
**தொண்டுசெய்வாய்! தமிழுக்குத்**
**துறைதோறும் துறைதோறும்**
**துடித்தெ ழுந்தே!”**

– எனப் புரட்சிக் கவிஞர் புகன்ற மொழிகளைப் பொன்போல் போற்றிடுவீர்!

ஆற்றும் பணிகள் அத்தனையிலும் நீவிர் குவித்திடும் வெற்றிகள் தாய்த் தமிழகத்திற்கும் – இந்தியத் திருநாட்டிற்கும் இணையற்ற பெருமைகளாய் இலங்கிடும்! அவை வரும் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் வரலாறாய் விளங்கிடும். இது உறுதி.

வாழ்க நீவிர்.
வெல்க நீவிர். ★

# விளக்குகள்



☐ கவிஞர் அப்துல் ரகுமான்

விளக்குகளே! விழிகளின் விழிகளே!

நீங்கள் இரவின் புன்னகைகளா?
இல்லை, கண்ணீர்த் துளிகளா?

நீங்கள் இரவின் நினைவுகளா?
இல்லை, கனவுகளா?

நீங்கள் இரவின் ஆபரணங்களா?
இல்லை, ரணங்களா?

நீங்கள் சூரியனின் எச்சில் துளிகளா?
இல்லை, நிலவின் வியர்வைத் துளிகளா?

நீங்கள் இருள் மலரை மொய்க்கும்
மஞ்சள் வண்டுகளா?
இல்லை, பறக்காத மின்மினிகளா?

நீங்கள் வெறி தணிந்த சாதுக்களா?
இல்லை, இருட்டை மதம் மாற்றச்
சுடர் நாவால் உபதேசிக்கும் பாதிரிகளா?

நட்சத்திரங்களால்
கடவுள் எழுதும் பதில் கடிதத்திற்கு
மனிதன் எழுதும் பதில் கடிதத்தின்
எழுத்துக்களா நீங்கள்?

கறுப்புச் சந்தையில் மட்டும்
செலாவணி ஆகும் நாணயங்களோ நீங்கள்

விட்டில்கள் தம் உயிரையே
பரிசமாகத் தந்து மணம் முடிக்கும் அளவுக்கு
உங்கள் காதலில் அப்படி என்ன பேரின்பம்?

எரிவதிலும் சுகமுண்டோ?

காதல் பள்ளியறையில்
பாடங்கள் கண்களால் படிக்கப்படுவதில்லை
அதனால்தான் அங்கே
உங்களை அணைத்துவிடுகிறார்கள்



ராத்திரி ரகசியங்களுக்கு
நீங்கள் சாட்சிகளாக இருந்தாலும்
உங்கள் நாவோ பேசுவதில்லை
அப்படி இருந்தும்
விடியலில் உங்கள் நாவு ஏன்
துண்டிக்கப்படுகிறது?

திருடர்கள் இருட்டில் திருடுகிறார்கள்
நீங்களோ இருட்டையே திருடுகிறீர்கள்

உங்கள் சுடர்
கும்பிடும் கை போல் இருப்பதால்தானோ
ஆலயங்களில் உங்களுக்கு ஆஸ்தானம்?

ஆயிரம் ரூபங்கள் உங்களுக்கு
ஆனாலும் நீங்கள் பேசும் உண்மை
ஒன்றுதான்

இருட்டு என்ற ராட்சஸ எதிரியை
அஞ்சாமல் எதிர்த்துப் போராடும்
சின்னஞ்சிறு வீரர்களே!
உங்கள் போராட்ட குணத்தை
எங்களுக்கும் கற்றுக்கொடுங்கள்

எரியவும் எரிக்கவும் எங்களுக்குத் தெரியும்
ஆனால் உங்களைப் போல்
ஒளி கொடுக்க மட்டும் தெரியவில்லையே!

*– சாகித்திய அகடமி விருது பெற்ற*
*'ஆலாபனை' நூலிலிருந்து*

*வெளியீடு : கவிக்கோ பதிப்பகம்*
*20, முதல் ஸீவார்டு சாலை சென்னை – 41.*



# தந்தையோடு ஒரு சொல்


**சிற்பி**

காவல் தெய்வம்
கன்னியா குமரி
கண் பார்த்திருக்கும்
தென் திசைக் கடலில்

தாய் நிலம் நோக்கி
நிற்கும் எம் தந்தையே...

உன்னைச் சுற்றிலும்
ஓயாது ஒழியாது
ஆர்ப்பரிக்கின்றது கடல்
நீ - ஆழம்காண விரும்பிய
மானிட வாழ்க்கை போல்...

ஒன்றுடன் ஒன்றாய்
ஒன்றிக் கலந்து
கை கோத்துக் கொள்கின்றன



முப்பெரும் கடல்கள்.
ஒப்பரும் உன் பேரறிவு ஆய்ந்த
அறம் பொருள் இன்பங்கள் போல்...


வைகறை ஒவ்வொன்றிலும்
முதல் கிரணங்கள்
உனக்கு வைர முடி சூட்டுகின்றன
வெளிச்சத்தின் தூதுவன்
நீ என்பதால்.

கடைசிக் கிரணங்களுக்கும்
நீயே விடை கொடுத்தனுப்புகிறாய்
இருண்ட கண்டங்களில்
தேனொளி தூவ...
உன் குறள் ஞாயிறுகளின்
திருப்பணி அதுதானே!

நிலவும் நட்சத்திரங்களும்
கனவுகள் மின்னும்
நெடிய இரவுகளில்
திசைகளைத் துழாவும்
உன் விழிகள்
சிந்தனையில் மூழ்கி விடுகின்றன
புதிய குறள் ஒன்று
புனைவது போல...

ஆடும் கடல் நடுவே
அசைவற்று நிற்கும் உன் கம்பீரம்
'செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்'
என்ற வரிகளை நினைப்பூட்டுகின்றது
எனினும்





குறுகிய சொற்களுக்குள்
கோடிப்பொன் விதைத்தபடி
உன் பாதக் குறடுகள்
ஒவ்வொரு தலைமுறையின்
தாழ்வாரங்களிலும்
நடைபோடும் ஓசை
கேட்டுக் கொண்டே இருக்கிறது

சங்குகளும் கிளிஞ்சல்களும்
புதைந்த மணல் வெளியில் நின்று
உன் 'பால்மடி' நூலெனப்
பரந்து கிடக்கும் கடலையும்
எழுதிய குறட் சுவடி போல்
கலைந்து விரியும் அலைகளையும்
அந்தி மயக்கத்தில்
கண்டு நிற்கையில்
வானமும் பூமியும்
விளிம்புகள் தேய்ந்து கரைந்திருந்தன

உன்னை
உலகத்துக்குத் தந்து விட்டோம்
என்ற பாரதி வாசகம்
எனக்குள் உறைத்தது

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'
என்று ஞாபகப்படுத்தும்
உன் உயரத்தை
விம்மிதத்தோடு பார்த்துப் பார்த்து
வியந்து நிற்கையில்
ஓ! விடியல் வந்து விட்டது!

தமிழ் பூமியைத் தாய்மை விழிகளால்
வருடும் உன்னோடு
வாழ்க்கையின் அர்த்தங்கள் பேச
அடங்காத ஆசையை ஒத்தி வைக்கிறேன்

இது
விழாக்களின் வேளை
இன்னொரு நாள் வருகிறேன்.

# நோய் தடுப்பு கிங் மருந்து நிலைய நூற்றாண்டு விழா

என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன் ஒரு வித்தியாசமானக் கருத்தை விளக்கிட விரும்புகிறேன். இன்று நடைபெறும் விழா ''கிங் இன்ஸ்டிட்யூட் ஆப் பிரிவென்டிவ் மெடிசின்'' என்ற நிறுவனத்தின் நூற்றாண்டு விழா. ஆங்கிலத்தில் சொல்லும் போது இது பொருத்தமாக உள்ளது. இதனைத் தமிழிலே எப்படி மொழி பெயர்த்து அழைப்பிதழிலேயும், பத்திரிகைகளிலும் திறப்பு விழா பலகையிலும் வெளியிட்டிருக்கின்றார்கள் என்றால்– கிங் நோய் தடுப்பு மருந்து நிலைய நூற்றாண்டு விழா என்று. ''கிங் நோய்'' என்று எந்தவிதமான நோயும் கிடையாது. எய்ட்ஸ் நோய் தடுப்பு என்பதைப் போல கிங் நோய் தடுப்பு மருந்து நிலையம் என்ற பெயரை முதலில் நான் ஆட்சேபிக்கிறேன்.

சில நேரங்களில் மொழி பெயர்ப்பு இப்படிப்பட்ட ஆபத்தான நிலைகளை உருவாக்கி விடும். ஒரு வேடிக்கையான துணுக்குப் படித்திருக்கிறேன். பெரும் மழை பொழிந்தது. மறுநாள் தமிழ் பத்திரிகையிலே செய்தி வந்தது. ஆங்கிலத்திலே அந்தச் செய்தியை அனுப்பியவர் ஒரு ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் – நூறு ஸ்லீப்பர்ஸ் வாஷ்டு அவுட் – என்று ஆங்கிலத்திலே செய்தி அனுப்பினார். அதை தமிழிலே மொழி பெயர்த்தவர், ரெயில் தண்டவாளத்திலே தூங்கிக் கொண்டிருந்த நூறு பேர் மழை வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டு இறந்து விட்டார்கள் என்று செய்தி வெளியிட்டு விட்டார்.

ஸ்லீப்பர்ஸ் என்று செய்தி அனுப்பியவர் குறிப்பிட்டது, தண்டவாளத்திற்கு அடியிலே இருக்கின்ற குறுக்குச் சட்டங்களேயாகும். அந்தச் சட்டங்கள் தான் மழை வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டது. ஆனால் ஸ்லீப்பர்ஸ் என்பதற்குத் 'தூங்கிக் கொண்டிருந்தவர்கள்' என்று பொருள் எடுத்துக் கொண்டு செய்தி வெளியாகி விட்டது. அதைப் போல கிங் இன்ஸ்டியூட்டை 'கிங் நோய் தடுப்பு' என்றால் ''கிங் நோய்'' என்பது ஒரு நோயாகவும், அதைத் தடுக்கின்ற நிலையம் இது என்றும் வித்தியாசமான பொருள் வந்து விடும் என்பதற்காக நான் சொல்கிறேன்.

### நோய் தடுப்பு கிங் மருந்து நிலையம் என்று பெயர் வைக்க வேண்டும்

எனவே தயவு செய்து இனிமேலாவது இந்த நிலையத்தை 'நோய் தடுப்பு கிங் மருந்து நிலையம்' – என்று பெயர்வைக்க வேண்டும். மருத்துவ நிலையங்களிலே கிங் ஆக இருக்கிறது. எதிலே என்றால் நோயைத் தடுப்பதில் கிங் ஆக இருக்கிறது என்ற அளவில் இந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். ஆங்கிலத்தில் அப்படியே இருக்கலாம். அதிலே பொருள் கெடவில்லை.

கிங் என்பவரால் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இதே வளாகத்திலே ஆரம்பிக்கப்பட்ட சிறிய கட்டடம் இங்கே இருக்கின்றது. அதனுடைய பெரும் வளர்ச்சிதான் இன்றைய தினம் நாம் காணுகின்ற இந்த நிறுவனமாகும். தொற்று நோய்கள், பயங்கரமான நோய்கள் – இவைகளையெல்லாம் தீர்க்கவே முடியாது, இதெல்லாம் கடவுள் இட்ட கட்டளை, என்று மக்கள் கருதிக் கொண்டிருந்த காலம் ஒன்று உண்டு. ஹார்ட் அட்டாக் [இதய நோய்] வந்தால் கூட இருதயம் வெடித்து இறந்து விட்டால் கூட, இரவு காட்டுப் பகுதியிலே போய் கொண்டிருந்தான், அங்கே மதுரை வீரனோ, முனியனோ அடித்து விட்டான். அதனால் ரத்தம் கக்கிச் செத்து விட்டான் என்று எண்ணிக் கொண்டிருந்த காலம் கிராமப் பகுதிகளிலே ஒன்று இருந்தது.

### எந்த நோய் என்று கண்டுபிடிக்கின்ற விஞ்ஞான காலம்

இன்றைக்கு எந்த முனியனும் பேயும் பிசாசும் பூதமும் அடிக்கவில்லை, இது இதய நோய் என்று கண்டுபிடிக்கின்ற விஞ்ஞான காலம் முகிழ்ந்திருக்கின்ற நிலையை நாம் பார்க்கிறோம்.

அதைப் போலவே காலரா என்றால் காளியம்மன், பெரியம்மை என்றால் மாரியம்மன் என்பார்கள். இன்னும் சொல்லப் போனால் கோவை பகுதியிலே பிளேக் என்ற பயங்கரமான நோய் ஒன்றுண்டு. பிளேக் மாரியம்மன் என்று இப்போதும் வட கோவை காந்தி மைதானத்தில் ஒரு கோவில் இருக்கிறது.

1945–ஆம் ஆண்டு நான் கோவையிலே சிங்காநல்லூரிலே குடியிருந்தேன். என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதே கோவையில் சிங்காநல்லூருக்குப் பக்கத்தில் இராமனாதபுரம் என்கிற ஒரு சிறிய பகுதியிலே வாழ்ந்து கொண்டிருந்தார். அப்போது பிளேக் நோய் சிங்காநல்லூரிலே அதிகமாகப் பரவியது.

காலையிலே எழுந்து வெளியே சென்றால் கோயில்களுக்குக் காவடிகள் செல்வதைப் போல, பாடைகள் சென்று கொண்டே இருக்கும். அந்த அளவிற்கு பிளேக் நோயினால் மக்கள் இறந்து கொண்டே இருந்தார்கள். அந்த பிளேக் கிருமி மக்களுடைய முழங்காலுக்கு கீழே தான் அவர்களைத் தாக்கும். எலியிலிருந்து உற்பத்தியாகின்ற கிருமி, முதலில் எலிகளுக்கு அந்த நோய் வந்து, எலிகள் இறந்து போய், இறந்த எலிகளின் உடலிலிருந்து இலட்சக்கணக்கான அளவிற்கு கிருமிகள் உற்பத்தியாகி, அந்தக் கிருமிகள் கால் உயரத்திற்கே பறக்கக் கூடிய சக்தி பெற்றவை என்பதால் மனிதர்களைக் கால்களிலே தாக்கும். பிளேக் உருவாகும். அந்த நோய் வந்த மனிதன் ஒரு நாள்

*நோய் தடுப்பு கிங் மருத்துவ நிலைய நூற்றாண்டு விழாவில் 27–2–2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

அல்லது ஒன்றரை நாளுக்கு மேல் உயிரோடு இருக்க மாட்டான்.

## பிளேக் நோய் இன்றைக்கு அறவே கிடையாது

இப்படிக் கொள்ளைநோயாக பிளேக் நோய் கோவையிலே வந்தபோது தான், சிங்காநல்லூரிலே இருந்த நான் எம்.ஜி.ஆருடைய வலியுறுத்தலின் பேரில் அவருடைய வீட்டிலே சென்று இரண்டு மூன்று மாத காலம் இருவரும் ஒன்றாக வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது தான் அவரை நான் கட்சி மாற்றினேன். பிளேக் நோய் அந்த வகையிலே அன்றைக்குப் பயன்பட்டது. அதுவரை கதராடையோடும் உத்ராட்ச மாலையோடும் இருந்தவர் எம்.ஜி.ஆர். அந்த எங்களுடைய சந்திப்பிற்குப் பிறகு தான் கட்சி மாறினார். இப்போது அவர் இல்லை என்பதற்காகச் சொல்லுகின்ற செய்தி அல்ல இது. அவருடைய சுயச் சரித்திரத்தில் அவரே இதைச் சொல்லியிருக்கிறார். அது பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. அந்த பிளேக் நோய் இன்றைக்கு அறவே கிடையாது.

காளியம்மன் கோவில் எல்லா ஊர்களிலும் இருக்கிறது. ஆனால் காலரா நோய் இப்போது கிடையாது. காளியம்மன் ஒரு கரண்டி எண்ணெய் கொடுத்துவிட்டாள், அதனால் காலரா வந்தது என்று சொல்லுகின்ற காலம் ஒன்று இருந்ததை நாம் மறந்துவிட முடியாது. அதைப்போல பெரியம்மை வார்த்தால், பிழைத்தவர்கள் மிக மிகக் குறைவு. ஆனால் இன்றைக்கு பெரிய அம்மை என்ற நோயே இல்லாமல் அதை அகற்றியே விட்டோம்.

அப்படிப்பட்ட சாதனையை மருத்துவ உலகம், குறிப்பாக விஞ்ஞான உலகம், அறிவு உலகம் இன்றைக்குச் செய்து முடித்திருக்கின்ற காட்சியை, இன்றைக்கு நாம் காணுகிறோம். அதன் காரணமாகத் தொத்து நோயால், கொள்ளை நோயால் கொள்ளை கொள்ளையாக ஆயிரம், இரண்டாயிரம் பேர் சாகின்ற நிலை இப்போது மாறியிருக்கின்றது.

## விழா மலரில் எமனுக்கு எமன் கதை

இன்றைக்கு வெளியிடப்பட்ட மலரை மேடையிலே இருந்தவாறு படித்துப் பார்த்தேன். அதிலே ஒரு சிறு கதை எழுதியிருக்கிறார்கள். டாக்டர் நளினிஹரி என்ற பெண் டாக்டர் அதை எழுதியிருக்கிறார். ‘எமனுக்கு எமன்’’ என்ற தலைப்பிலே அது எழுதப்பட்டுள்ளது.


நூற்றாண்டு விழா நடக்கின்ற நேரத்திலே எமன் இங்கே வந்து இந்த வளாகத்திலே இறங்குகிறான். என்ன நடக்கிறது என்று விசாரிக்கிறான். நூற்றாண்டு விழா நடக்கிறது என்கிறார்கள். எமன் வந்த விவகாரம் என்னவென்றால் சில பேர் சாகாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பிடிக்க வேண்டுமென்று தான் பாசக்கயிறோடு எருமை வாகனத்திலே ஏறி வந்திருக்கிறான். நான் இன்னின்னாரை குறித்துக் கொடுத்திருந்தேனே, அவர்கள் எல்லாம் என்ன ஆனார்கள்? நாய் கடிக்கப்பட்ட நாகலிங்கம் என்ன ஆனான்? பாம்பு கடித்த பரமசிவம் என்ன ஆனான்? காலராவால் தாக்கப்பட்ட காமாட்சி என்னவானாள்? என்று கேட்கிறான்.

இப்படி அடுக்குச் சொற்களையெல்லாம் பார்க்கும்போது எங்கள் ஆள் தான் யாரோ எழுதியதைப் போல் இருக்கிறது. அவன் அவ்வாறு கேட்டதற்கு அவர்கள் எல்லாம் தப்பித்துக் கொண்டார்கள். கிங் இன்ஸ்டிட்யூட்டிலே எல்லாவற்றுக்கும் மருந்து கண்டுபிடித்து விட்டார்கள், அதனால் தப்பித்துக் கொண்டார்கள் என்று பதில் சொல்கிறார்கள். திடீரென்று எருமை மாட்டைக் காணோம். எங்கே என்று எமன் கேட்கிறான். அது சாலையில் யார் மீதோ முட்டி விட்டது. அதனால் அவனுக்குக் காயம் ஏற்பட்டுவிட்டது என்கிறார்கள். உடனே எமன், அப்படியா சபாஷ், மாடு தாக்கியவனாவது சாவான் அல்லவா என்கிறான். அவனும் சாகமாட்டான். அவனுக்கு கிங் இன்ஸ்டிட்யூட்டிலே கண்டுபிடித்த ‘‘டெட்டனஸ்’’ ஊசி போட்டு விட்டார்கள் என்று பதில் கூறுகிறார்கள். உடனே எமனுக்குக் கோபம் வந்து, மேல் உலகத்திற்குச் சென்று சபையைக் கூட்டச் சொல்லித் தேவர்களையெல்லாம் வைத்துக் கொண்டு தான் ராஜினாமா செய்வதாகக் கூறுகிறான். எனக்கு இப்போது வேலையே இல்லை. கிங் இன்ஸ்டிட்யூட்டில் எல்லாவற்றையும் தடுத்து விட்டார்கள் என்று கூறி எமன் செய்த ராஜினாமாவைப் பற்றி, ஒரு அழகான கதை இந்த மலரிலே வெளி வந்திருக்கின்றது.




## கொள்ளை நோய்களைத் தடுக்கக்கூடிய நல்ல சூழ்நிலை

இது ஒன்றும் வேடிக்கையல்ல. உண்மையிலேயே இப்படிப்பட்ட பயங்கரக் கொள்ளை நோய்களைத் தடுக்கக் கூடிய அளவிற்கு நல்ல சூழ்நிலை இன்றைக்கு அமைந்திருக்கின்றது. இந்த ஆராய்ச்சியிலே ஈடுபடுகிற வர்கள் எல்லாம் என்னுடைய வாழ்த்துக்கு உரியவர்கள், பாராட்டுக்கு உரியவர்கள். இங்கே நல்வாழ்வுத் துறை அமைச்சரும், மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலுவும், மாநகராட்சி மன்றத்தின் மேயரும் பேசும் போது குறிப்பிட்டார்கள். ‘வருமுன் காப்போம்’ என்பதுதான் நம்முடைய குறிக்கோள். நம்முடைய இலட்சியம். அதற்காக இந்த அரசினால் தொடங்கப்பட்டுள்ள ஒரு திட்டம், மக்களை நோக்கி மருத்துவ முகாம்கள் செல்வது இப்போது நகர்ப்புறங்களிலே, மாநகர் பகுதிகளிலே மக்களுக்கு நோய் வந்தாலோ அல்லது வருவதற்கு முன்போ தடுத்துக் கொள்ள வேண்டுமென்று அக்கறை இருக்கிறது. ஆனால் கிராமப்புற மக்களுக்கு அந்த அக்கறை அவ்வளவாக இருப்பதில்லை.



கிராமப் பகுதிகளிலே கூட அங்குள்ள ஆண்கள் தப்பித் தவறி நகர்ப்புறங்களுக்குச் செல்லும்போது டாக்டரைப் பார்த்து விட்டுச் செல்வோமே என்று செல்கிறார்கள். ஆனால் பெண்கள் அதிகமாக நகர்ப்புறங்களுக்கு வராமல் கிராமங்களிலேயே இருக்கின்ற காரணத்தால் அவர்கள் டாக்டர்களைப் பார்ப்பதே அரிது. அதையெல்லாம் யோசித்துத்தான் ஒரு பெரிய திட்டத்தை இந்த அரசு ஆரம்பித்து 29.11.1999 இல் அதனைத் தொடங்கி, 'வருமுன் காப்போம்' என்ற அந்தத் திட்டத்தின்படி இந்த ஓராண்டிற்கு மாத்திரம் கிட்டத்தட்ட 8,400 முகாம்கள் நடத்துவதாக இருக்கிறோம். இதில் 25.2.2000 அன்று வரை 1,070 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

### மக்களுக்குத் தோழனாக உள்ள கால்நடைகளுக்குப் பாதுகாப்புத் திட்டம்

அந்த முகாம்களுக்கு எல்லாச் சாதனங்களோடு எல்லா துறை நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களும் சென்று கிராமங்களிலேயே முகாமிட்டு அங்கே வருகின்ற ஆயிரக்கணக்கான கிராமப்புற மக்களைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான யோசனைகளைச் சொல் கிறார்கள். மருந்துகளைத் தருகிறார்கள். சிகிச்சைகளைச் செய்கிறார்கள்.

இதுவரை அப்படி நடத்தப்பட்ட முகாம்கள் 1,070. அவைகளிலே பரிசோதிக்கப்பட்ட நபர்கள் 12 இலட்சம் பேர்.

இவர்களில் சிலருக்கு நோய் முற்றிப்போய் இருந்தால், அவர்களுக்குத் தொடர்சிகிச்சை செய்யப்பப்பட வேண்டும் என்பதற்காக நகர்ப்புறங்களுக்குப் பெரிய மருத்துவ மனைகளுக்குப் பரிந்துரையோடு அனுப்பி வைக்கப் பட்டவர்கள் மாத்திரம் 82,912 பேர்.

இந்த முகாம்களிலே நோயாளிகளுக்கு இதுவரை இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு 49 இலட்சத்து 8 ஆயிரத்து 930 ரூபாய்.

மக்களுக்கு மாத்திரமல்ல, மக்களுக்குத் தோழனாகத் துணையாக இருக்கின்ற கால்நடைகளுக்குக் கூட கால்நடை பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை விவசாயிகளுக்கு உதவியாக ஒரு திட்டத்தை ஜனவரி 18-ஆம் தேதி திருக்கழுக்குன்றத்திலே தொடங்கி, இதுவரை 270 முகாம்கள் நடைபெற்றுள்ளன.

இந்த 270 முகாம்களில் பயன் பெற்ற கால்நடைகள், 2,42,433 மாடுகள்; 42,655 எருமைகள்; 2,88,595 செம்மறியாடுகள்; 1,67,552 வெள்ளாடுகள்; 1,58,379 கோழிகள்; 4,949 இதர வகைக் கால்நடைகள்- ஆக மொத்தம் 9 இலட்சத்து 4 ஆயிரத்து 563 கால்நடைகள் 23.2.2000 வரையிலே பயன்பெற்றிருக்கின்றன.

மக்களுக்காக மாத்திரமல்லாமல், மக்களுக்குத் துணையாக இருக்கின்ற கால்நடைகளுக்காகவும் பாடுபடுகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி தன்னுடையச் சாதனைகளைச் செய்து கொண்டிருக்கின்றது, விரிவாக்கிக் கொண்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்லி இவைகளுக்கெல்லாம் மிக மிக முக்கியம், அது ஆடாக இருந்தாலும், மாடாக இருந்தாலும், மனிதனாக இருந்தாலும் நோய் வருவதற்கு முன் தடுப்பதுதான் முக்கியம். அப்படித் தடுப்பதற்கான ஒரு நிலையம் மருந்துகளைத் தயாரிக்கின்ற ஒரு நிலையம் காலஞ்சென்ற, என்றைக்கும் மறைந்தும் மறையாமல் இருக்கின்ற புகழ் வாய்ந்த கிங் அவர்களுடைய பெயரால் அமைந்துள்ள இந்த மருந்து நிலையத்தினுடைய நூற்றாண்டு விழாவிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதிலே பெரு மகிழ்ச்சி அடைந்து இந்த நிலையம் மேலும் மேலும் புகழ் பெற்று வாழ்க வாழ்க என்று வாழ்த்தி என் உரையை நிறைவு செய்கிறேன்.

"கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே"

– என்று வள்ளலார் பாடியுள்ளார். எல்லோரும் விரும்பிப் பருகும் இளநீர் பல பிணிகளைத் தீர்க்கும் வல்லமை பொருந்தியது. கோடைகாலத்தில் அதிகமாக குளிர்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து, இளநீர் அருந்துவது உடலுக்கு நல்லது. இரத்தத்தைச் சுத்தமாக்கும் நல்லவிதமான இரசாயனப் பொருட்கள் நிறைய இருக்கின்றன. அதற்காக இளநீரை அதிகமாகவும் அருந்தக் கூடாது.

அவ்விதம் அருந்தினால் உடலில் இருக்கும் நீர் அதிகமாக வெளியேற்றப்பட்டு உடல் பலவீனமாகிவிட வாய்ப்புகள் உண்டு. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு தானே?

# இளநீர் ஓர் இனிய மருந்து

இளநீர் மனித இனத்திற்கு இயற்கையின் விலைமதிப்பற்ற வரப்பிரசாதம். தாகத்தைத் தணிப்பது மட்டுமல்லாமல், மிக எளிதில் ஜீரணமாகிறது. ஜீரண உறுப்புகளை வேகப்படுத்தி, ஆகாரம் ஜீரண மாவதைச் சுலபமாக்குகிறது.

தீரும் பிணிகள்

உடல் சூடு, நீர்ச் சூடு, சிறுநீர், நீர்க் கடுப்பு, நீரிழிவு, ஆஸ்துமா, காமாலை, சொரி சிறங்கு, அம்மை போன்ற பிணிகள் மற்றும் காலரா, வாந்தி, பித்த வாத கப சம்பந்தமான பிணிகள், மூலநோய், டைபாய்டு, பேதி, இரணம், நச்சுத்தன்மை, பருவு, கரும்புள்ளி, தோல்நோய், அரிப்பு, கைகள், பாதங்களில் ஏற்படும் வெடிப்பு, ஹிஸ்டீரியா போன்ற பிணி, நரம்பு சம்பந்தமான பிணிகள் மற்றும் பல.

## பயன் முறை

எக்ஸிமா தோல் நிறமாற்றம், அரிப்பு, கைகள், பாதங்களில் ஏற்படும் வெடிப்பு

ஒரு கையளவு பச்சரிசியை எடுத்துப் புதிய இளநீரை வாங்கிச் சீவி அந்த இளநீரைக் காயிலிருந்து வெளியேற்றாமல் அதில் போட்டு ஊறவைக்கவும். நன்கு ஊறி, புளித்த வாசனை வந்த பிறகு எடுத்து தோல் நிறமாற்றம், அரிப்பு, கைகள், பாதங்களில் ஏற்படும் வெடிப்பு இவைகள்மேல் தொடர்ந்து பூசி வந்தால், நாளடைவில் வியக்கத்தக்க விதத்தில் நலமாகும்.

சொட்டுச் சொட்டாக நீர் போதல்...

இளநீர் வாங்கி, சீவி எடுத்து அதில் உள்ள இளநீரை ஒரு டம்ளரில் ஊற்றி ஆரஞ்சு ஜூஸ் அதில் கலந்து அருந்திவரும் பட்சம் நாளடைவில் சொட்டு, சொட்டாகப் போகும் சிறுநீர் நீங்கி தாராளமாக வரும்.

அம்மை நோயினால் ஏற்படும் தழும்புகள் மறைய...

மூன்று இளநீர் வாங்கி சீவி எடுத்து, அதற்குண்டான இளநீர் எடுத்துத் தடவினால் நாளடைவில் அந்தத் தழும்புகள் படிப்படியாக மறையும். இது அனுபவ முறை.

ஹிஸ்டீரியா என்ற பிணிக்கு...

தேவையான வாழைத்தண்டிலிருந்து எடுக்கப்பட்ட நீரை, இளநீரோடு கலந்து அருந்தி வரும்பட்சம் நாளடைவில் ஹிஸ்டீரியா போன்ற நரம்பு சம்பந்தமான பிணிகள் நீங்கி நலம் பெறும்.

உடலின் தோலின் மீது கொப்புளம், சொரி, சிறங்கு மற்றும் தோலில் காணும் வறட்சி, முகத்தில் காணும் சுருக்கங்கள், பரு, கரும்புள்ளிகள் நீங்க எளிய முறை...

தேவையான இளநீர்களை வாங்கி அருந்தி வந்தாலும், தினசரி முகத்தை இளநீரில் கழுவி வந்தாலும், பருவு கரும்புள்ளிகள் படிப்படியாக நீங்கி, மாசு மருவற்ற தோற்றத்தை அடைய இதுபெரும் சக்தியாக அமைகிறது.

குழந்தைகளுக்கு...

இந்த இளநீரில் சில அமினோ அமிலங்கள், அலனைன், ஆர்ஜுனைன், சிஸ்டைன், சிரைன் – பசும்பாலில் உள்ளதைவிட அதிகமாக இருப்பதால், குழந்தைகளுக்கு மிகவும் ஏற்றதாக அமைகிறது.

நீரிழிவு நோய் பீடிக்கப்பட்டவர்களுக்கும், ஜீரண உறுப்புக் கோளாறுகளால் வேதனைப்படும் குழந்தைகளுக்கும் இவை குணமாக...

தேவையான தேங்காய் நீக்கிய இளநீர்களை வாங்கி தினசரி குழந்தைகள் அருந்தி வந்தால், அவர்களது தாகத்தை எளிதில் தீர்க்கும். ஜீரண உறுப்புகளும் நன்கு இயங்கும் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கும் சிறந்த பானமாக இது அமைகிறது.

வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தியினாலும், காலராவினாலும் அவதிப்படுகிறவர்கள் குணமாக...

உடலில் நீர் வற்றிய நிலையில் குளுகோஸ் கொடுப்பதற்குப் பதிலாக இந்த இளநீரை அருந்தக் கொடுக்கலாம். நாளடைவில் மேற்கண்ட பிணிகள் நீங்கும்.

மூலநோய், பிராங்கைட்டீஸ், மலச்சிக்கல்

இளநீரோடு ஒரு மேஜைக் கரண்டி தேனை ஊற்றி அருந்திவந்தால் நாளடைவில் நோய்கள் நீங்கப் பலனை எதிர்பார்க்கலாம்.

மஞ்சட் காமாலைக்கு

சிறுநீர்க் காய்களில் இரத்த ஓட்டத்தை அதிகரித்து தாதுக்களில் ஏற்படும் விஷத் தன்மையை நீக்குகிறது. எனவே, மஞ்சட்காமாலைக்கு இளநீர் ஓர் வரப்பிரசாதம்.



உடலில் சூடு, குடலில் இரணம்,
வாந்தி இவைகள் நீங்க...

தேவையான இளநீர் வாங்கி அருந்துவதினால், உடலில் காணும் சூடு, குடலில் காணும் இரணம், வாந்தி இவைகள் நாளடைவில் நீங்கி நலம்பெறும்.

ஆஸ்துமா, டைபாயிட், சிறுநீர்க் கோளாறு, பேதி...

இளநீரைத் தொடர்ந்து அருந்துவது சாலச்சிறந்தது ஆகும். மேலும் பெரிய இரண சிகிச்சைக்குப் பிறகுகூட இளநீர் அருந்திவரும் பட்சம் இரணம் சீக்கிரமாகக் குணமாகிவிடும்.

உணவுக்கு முன் இளநீர் அருந்த வாதநோய் போகும். மாலையில் அருந்த மெய்யிற்பித்தம் போகும். காலையில் அருந்தக் கபம் அறும்.

உணவு உண்ட பின்பு இளநீர் அரை தம்ளர் உட்கொள்ள வாதம், பித்தம், சிலேத்துமம், கண்ணோய், பாண்டு போன்றவை தீரும் மற்றும் மலம் கழியும், நோய் அணுகாது.

இழந்த ஆரோக்கியத்தை மீண்டும் பெற...

இளநீர் மிக முக்கியமான ஒன்று. தேங்காயை எளிதில் ஜீரணிக்க முடியாத ஒருவருக்கு, இளநீர் ஒரு நல்ல பானமாகும்.

நிறைமாத கர்ப்பிணியாக உள்ள சிலருக்கு நீர் இறங்குவதற்கு உள்ள சிரமத்தைப் போக்க, தேவையான வெங்காயத்தைப் பொரித்துப் பொடி செய்து ஒரு வேளைக்கு 2 கிராம் அளவு எடுத்து ஒரு இளநீரில் கலந்து கலக்கிக் கொடுக்க 15 நிமிடங்களில் நீர் தாராளமாக இறங்கி உடல் நிலை நலமாகும்.

சிறுநீர் எளிதாக வெளிவருவதற்கு...

கதலி வாழைப்பழத்தை இளநீரில் ஊறவைத்துச் சாப்பிடுவது, சிறுநீர் எளிதாக வெளியேற்ற உதவும்.

கண்களுக்கு...

போதிய அளவு இளநீர் அருந்துவதினால், நாளடைவில் கண்களும் மிகுந்த பிரகாசத்தை பெறமுடியும்.

ஆரஞ்சு நிற இளநீர் -
ஏலக்காய்

குள்ளமான தென்னை மரத்தில் காய்க்கும் ஆரஞ்சு நிறமுள்ள இளநீர்க் காயை எடுத்து, அப்படியே நீரில் போட்டு, அது சிகப்பு நிறமாகும்வரை கொதிக்க வைத்து – பிறகு, இக்காயிலிருந்து இளநீரை எடுத்து சிறிது ஏலக்காய் பொடி சேர்த்துக் கலக்கி அருந்தி வரும்பட்சம் சிறு நீரும் மலமும் எளிதாக வெளியேறும்.

சூட்டைத் தணிக்க...

உடல், அளவுக்கு அதிகமாக சூடாகிவிட்டால், தேவையான இளநீரை எடுத்து அதில் சந்தனம் சேர்த்து அருந்த சூட்டைத் தணிக்கலாம்.

மது, புகையிலை ஆகியவைகளால் ஏற்படும் தீமையினால், இந்தப் பிணிகளை அகற்ற, காலையில் பல் துலக்கிய பிறகு ஒரு வாரம் தொடர்ந்து இளநீரை அருந்தி வர மேற்கண்டவையினால் ஏற்படும் தீமைகள் விலகும்.

இருதய நோய் உள்ளவர்கள் இளநீர் அருந்தக்கூடாது. மற்றும் இளநீர் அருந்திவிட்டு இளநீரில் உள்ள வழுக்கையாக இருக்கும் தேங்காயையும் சுரண்டி சாப்பிடக்கூடாது.

காரணம்? இதில் கொலஸ்டிரால் என்ற கொழுப்புச் சத்து அதிகம் இருக்கிறது. எனவே, இளநீர் அருந்திவிட்டு அவஸ்தைப் படுவதைவிட அருந்தாமலேயே இருந்துவிடலாம்.

நிக்கோபார் தீவில் இருக்கும் பழங்குடியினர் நோயுற்ற போதும், நோயிலிருந்து நலமாகி இருக்கும் போதுகூட அவர்கள் அதிகமான இளநீரை அருந்துகின்றனர்.

உலகப் போரின்போது கூட, போர் வீரர்களுக்கு, இளநீர் ஊசி மூலமாக உடலில் செலுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாக அறிக்கைகள் உள்ளன.

ஆயுர்வேத மருத்துவத்தில் கூட இளநீர் நீர்க்குழம்பு என்னும் லோஷன், பல மூலிகைகளை இளநீரில் கொதிக்க வைத்துத் தயாரிக்கப்படுகிறது. உடலில் சேரும் நச்சுத் தன்மையைச் சிறுநீர் மூலமாக வெளியேற்ற இந்த இளநீர் உதவுகிறது. மேலும், மீனினால் ஏற்படும் நச்சுத்தன்மை, கொதிக்கவைத்த இளநீரை அருந்துவதனால் முறிகிறது.

இந்தியா, இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகளில் காலராவினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இளநீரை ஊசி மூலம் செலுத்தி நோயைக் குணப்படுத்தியதாகத் தெரியப்படுத்தியுள்ளார்கள். இளநீரில் சலைன் ஆல்ப்யூமின்கள் போன்றவை இருப்பதால், காலரா நோயினால் ஏற்படும் வாந்தி தடுக்கப்படுகிறது.

## வினிகர் தயாரிப்பு

இளநீரில் வினிகர் தயாரிக்கப்படுகிறது. இளநீருடன் சம அளவு பழுப்புச் சர்க்கரை சிறிதளவு "பினிஸ்மேன் ஈஸ்ட்" சேர்த்து ஒரு பாத்திரத்தில் ஐந்து வாரம் வரை சேமிக்கப்படும்போது வினிகராக மாற்றம் அடைந்துவிடுகிறது. பிறகு இதன் பிரதான பிரிவு அதை வடிகட்டி சுத்தம் செய்து உபயோகப்படுத்தப்படுகிறது. இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இளநீரிலிருந்து வினிகர் வர்த்தக ரீதியில் தயாரிக்கப்படுகிறது.

அண்மையில் விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் இளநீரின் மருத்துவக் குணங்களைத் தமது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தி உள்ளார்கள். டைட்ராமைசின் என்று பொதுவாக அழைக்கப்படும் ஆக்சிடெட்ராசைக்ளின் என்னும் ஆண்ட்டிபயாடிக் மருந்தை இளநீரிலிருந்து மிக எளிதாக உற்பத்தி செய்ய முடியும் என்று பிலிப்பைன் தேச விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

குரும்பை கருவுற்றதில் இருந்து ஏழு மாதங்கள் கழித்து எடுக்கப்படும் இளநீரில் நல்ல தரமான நீர் கிடைக்கிறது. இதில் ஐந்து சதம் கரையும் உப்புக்கள் உள்ளன. ஏழு மாத காலத்தில் உள்ள இளநீரில் அதிக அளவில் சர்க்கரை உள்ளதால் அருந்துவதற்கு இனிப்பாக இருக்கிறது.

100 கிராம் இளநீரில் 17 கலோரி சத்துள்ளது. மேலும், இளநீரில் புரோட்டின் கொழுப்புச் சத்து, சோடியம், பாஸ்பரஸ், கந்தகம், குளோரின் போன்றவையும் பி, சி வகுப்பினைச் சேர்ந்த வைட்டமின்களும் உள்ளன. எனவே, இளநீருக்கு தகுந்த இனிப்பு, இளநீரிலுள்ள சர்க்கரைச் சத்தாலும், தாதுக்களாலும் ஏற்படுகிறது.

## பொதுப் பண்பு

இளநீரில் முக்கியமாகப் பெருவாரியாக இருப்பது சர்க்கரைச் சத்துக்கள் இளநீரை தினமொன்று அருந்துவதால், மஞ்சட்காமாலை, டைபாய்ட் மற்றும் அல்சர் என்று சொல்லப்படும் வயிற்று ரணம் முதலிய உபாதைகள் வர வாய்ப்பில்லை.

இளநீரில், வழுக்கை என்று சொல்லப்படும் முற்றாசிலேடையை எடுத்து, வறுத்து கசகசாவுடன் சேர்த்தரைத்து உண்டால் வாய் ரணம், நெஞ்செரிச்சல் முதலியவை நீங்கி நலமாகும்.

இளநீர் பருகிய பின் வெட்டிப் போட்ட ஓடுகள், மட்டைகளைக் குடிசை வாழ்மக்கள் அடுப்புக்கு எடுத்துச் செல்வதை நாம் பார்க்கிறோம்.

வீட்டுக்கொரு மரம் வளர்ப் போம். அது தென்னையாக இருப்பின் நன்மையாக இருக்குமே!

"தென்னைய பெத்தா – இளநீரு
பிள்ளைய பெத்தா – கண்ணீரு"

– என்பது கவியரசர் அமரர் திரு. கண்ணதாசனின் தத்துவப் பாடல்களில் ஒன்றல்லவா!

**– டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்**

## 'காக்கா' பிடித்தவர்களுக்கு நேர்ந்த கதி

ஒரு முறை அக்பரும் பீர்பலும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுடைய உரையாடல் எங்கெங்கோ சென்று, சாப்பாடு பற்றிய சங்கதியில் வந்து முடிந்தது.

உடனே பீர்பல் தாம் முன் தினம் நண்பர் ஒருவர் வீட்டில் சாப்பிட்டு வந்த விருந்தைப்பற்றி விமர்சனம் செய்தார். அக்பர் மிகச் சுவாரசியமாக அதைக் கேட்டுக் கொண்டிருந்தார். பீர்பல் விருந்தில் பரிமாறப்பட்ட ஒவ்வொரு பண்டங்களைப் பற்றியும் அவற்றின் சுவைகளைப் பற்றியும் விரிவாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது சேவகன் ஒருவன் வந்து சக்கரவர்த்தியிடம் ஏதோ கூறவே, சக்கரவர்த்தி எழுந்து சென்று விட்டார். சற்று நேரம் கழித்து பீர்பலும் அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

பிறகு அரசவையில் பீர்பலைப் பார்த்தபோதுதான் அக்பருக்குத் தாம் விருந்து பற்றிய பேச்சை இடையிலேயே நிறுத்திவிட்டு வந்தது நினைவுக்கு வந்தது. உடனே பீர்பலைப் பார்த்து, "அப்புறம் என்ன?" என்று கேட்டார்.

"அப்புறம் என்ன? பாயசம்!" என்றார், பீர்பல்.

உடனே சக்கரவர்த்தி தம் கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலை ஒன்றைக் கழற்றிப் பீர்பலுக்குப் பரிசாக அளித்தார்.

இதைப் பார்த்த பொறாமைக்காரர்களுக்கு வயிறு எரிந்தது. வெறும் 'பாயசம்' என்று சொன்னதுமே ஒரு முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்து விட்டாரே! நாம் உண்மையாகவே பாயசத்தைக் கொண்டு சென்று சக்கரவர்த்திக்குக் கொடுத்தால் நமக்கு நிறையப் பரிசுகள் கிடைக்கும்' என்ற கருத்துடன் பொறாமைக்காரர்கள் அனைவரும் அன்றே தத்தம் மனைவிமாரிடம் பாயசம் செய்து கொடுக்கச் சொல்லி அதை வாங்கிக் கொண்டு அரசரிடம் சென்றார்கள்.

"அரசே, தங்களுக்குப் பாயசம் மிகவும் பிடிக்கும் ..." என்று ஒருவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, சக்கரவர்த்தியின் முகத்தில் கோபம் தெறித்தது.

"யார் சொன்னது?" என்று கோபத்துடன் கேட்டார் சக்கரவர்த்தி.

"அன்று பீர்பல் பாயசம் என்று சொன்னவுடனே மகிழ்ச்சியுடன் முத்துமாலையைப் பரிசாக அளித்தீர்களே!"

"அதற்காகப் பாயசம் கொண்டு வந்து கொடுத்து, நிறையப் பரிசுகள் பெற்றுச் செல்லலாம் என்று வந்தீர்களா? பைத்தியக்காரர்களே, பீர்பலின் பேச்சு பாயசத்தைவிட இனிப்பாக இருந்தது! அதற்குத்தான் பரிசளித்தேன். முடியுமானால் நீங்களும் பீர்பலைப் போல் சாதுரியமாகப் பேசிப் பரிசுகள் பெறலாமே! அதைவிட்டு இது என்ன வேலை? பாயசம் கொண்டு வருவதும், வடை கொண்டு வருவதும்! முன்னே இவைகளையெல்லாம் தூக்கிக் கொண்டு ஓடிப்போங்கள். இல்லாவிட்டால் உங்கள் முகத்தில் தூக்கி ஊற்றுவேன்" என்று கடுமையாகக் கூறினார், அக்பர்.

இதற்கு மேலும் அங்கு நிற்க அவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா, என்ன? ஓடியே போய்விட்டார்கள்!

– பீர்பல் கதைகள்' தொகுப்பிலிருந்து...



# உழவர் சந்தைகள் - கிராமப் பொருளாதாரத்தில் ஒரு புரட்சி

□ முதலமைச்சர் கலைஞர்

இன்றைய தினம் 25-வது உழவர் சந்தை அருப்புக்கோட்டையிலும், 26-வது உழவர் சந்தை இராஜபாளையத்திலும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 100 உழவர் சந்தைகளைத் தமிழகத்திலே எல்லா நகரங்களிலும் உருவாக்குவது என்று உத்தேசித்து அதற்கான முயற்சிகளை விரைவுபடுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த உழவர் சந்தைகளைத் தொடங்கி வைக்கிற நிகழ்ச்சிகளிலே நானும், அமைச்சர் பெருமக்களும் கலந்துக் கொண்டு இன்றைக்கு நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் கிருஷ்ணன் அவர்களுடைய அரிய முயற்சியினால் மிகச் சிறப்பாக 2 உழவர் சந்தைகளுடைய திறப்புவிழா நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த உழவர் சந்தை உழவர் பெருமக்களுக்கு எவ்வளவு பயனுடைய ஒன்று என்பதை இங்கே என்னுடைய தம்பி வைகோ அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

கிராமப்புறத்தில் ஒரு புதிய பொருளாதார மாற்றத்தை இந்த உழவர் சந்தை ஏற்படுத்துகிறது என்பது என்னுடைய எண்ணம். இதை தொடங்கும் போது நானே கூட, இப்படிக் கருதவில்லை. திட்டமிட்டு தொடங்கப்பட்ட உழவர் சந்தை என்றாலும் கூட இவ்வளவு வெற்றிகரமாக நடைபெறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

**உழவர் சந்தை இந்த அளவிற்கு உருப்பெறும் என்று நான் கருதவில்லை**

நேற்று மதுரையிலே உள்ள செய்தித் தாள்களில் மதுரையிலே உழவர் சந்தை 100-வது வெற்றிகரமான நாள் என்று பெரிய திரைப்படங்களுடைய வெற்றியை 100-வது நாளிலே குறிப்பிடுவதைப் போல குறிப்பிட்டு விளம்பரங்கள் வந்திருந்த நிலையை நான் பார்த்தேன்.

இதைத் தொடங்கும் பொழுது இந்த அளவிற்கு உழவர்சந்தை உருப்பெறுமா என்று நானும் கருதவில்லை. அரசு அதிகாரிகளும், மாவட்ட ஆட்சியர்களும் கூடக் கருதவில்லை. தொடங்கிய பிறகு தான் தெரிகிறது உழவர்கள் எந்த அளவிற்கு இப்படி ஒரு நல்ல நிலைமைக்காகக் காத்துக் கிடந்தார்கள் என்ற உண்மை இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கூடத் தெரிகிறது.

கிராமப் பொருளாதாரத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னேன். கிராமங்களிலே உள்ள உழவர்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளை இடைத் தரகர்கள் மூலமாக வியாபாரிகளுக்கு விற்று அவர்கள் அதிக விலைக்கு அதிக இலாபம் வைத்து விற்ற

காரணத்தால் பொதுமக்களும் - அதை வாங்கிப் புசிக்கின்ற நுகர்வோர் எனப்படுகின்ற பொதுமக்களும் அதிக விலை கொடுத்துக் காய்கறிகளை வாங்க வேண்டியிருந்தது. ஆனால் இன்றைக்குக் கட்டுப்படியான விலைக்கு விவசாயிகள் தாங்கள் விளைவித்த காய்கறிகளை விற்பனை செய்கின்ற காரணத்தால் பொதுமக்கள் அதிக விலை தரவேண்டிய அவசியம் இல்லாமலே நியாயமான விலை தந்து காய்கறிகளைப் பெறமுடிகிறது.

அதே நேரத்தில் விவசாயிகள் இடைத்தரகர்கள் என்ற ஒரு தொல்லையிலே இருந்து விடுபடுகிறார்கள். ஒவ்வொரு உழவர் சந்தையிலும் விவசாயிகள் 5 பேர் அல்லது 7 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் அந்தக் குழுவினர் இன்றைக்குக் காய்கறி என்ன விலை விற்கலாம். வெண்டைக்காய் கிலோ என்ன விலை விற்கலாம்? கத்தரிக்காய் என்ன விலை விற்கலாம்? என்று அந்தக் குழுவினர் விலையை நிர்ணயம் செய்து அதன்படி விற்கப்படுகிறது. அதன்படி வாங்கப்படுகிறது.

அது மாத்திரமல்ல. இதிலே எந்தவிதமான தவறும் நடைபெறக்கூடாது என்பதற்காக தராசு, படிக்கல் இவை இரண்டையும் கூட அரசாங்கமே வழங்குகிறது. இல்லாவிட்டால் சில படிக்கற்கள் தானாக தேய்ந்துவிடும். சில தராசுகள் நாம் சரியாக கவனிக்காத நேரத்திலே ஒரு பக்கம் சாய்ந்துவிடும். அது எந்தப் பக்கம் சாயும் என்று உங்களுக்குத் தெரியும். எனவே அப்படியெல்லாம் தராசு சாயாமல், படிக்கல் தேயாமல் நல்ல படிக்கல்லாக, நல்ல தராசாக நல்ல உழவர்களாக அவர்களும் இருக்க வேண்டும். வாங்குகின்ற பொதுமக்களும் நல்ல மக்களாக இருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு இந்த ஏற்பாட்டை அரசாங்கம் செய்திருக்கின்றது.

அது மாத்திரமல்ல, விவசாயிகளுக்கும் மற்றொரு சலுகை இந்த உழவர் சந்தை இவ்வளவு நேர்த்தியாகக் கட்டிமுடித்து அவர்களுக்கு வழங்கும் போது அதிலே வாடகையும் கிடையாது. அவர்கள் வைத்து விற்பனை செய்கின்ற இடத்திற்கும் வாடகை கிடையாது. அங்கே காய்கறிகளைக் கொண்டு வருவதற்குக் கிராமத்திலே இருந்து அவர்கள் பேருந்துகளிலே வருவார்களேயானால் அவர்களுக்கு மாத்திரம் தான் கட்டணம். அவர்கள் கொண்டு வருகின்ற லக்கேஜ் என்று சொல்லப்படுகின்ற அந்தக் காய்கறி மூட்டைகளுக்கு அந்தக் காய்கறிச் சுமைக்கு அவர்கள் கட்டணம் கட்ட வேண்டிய அவசியம் கிடையாது. அது இனாம்.

இன்னொரு தொல்லை அவர்களுக்கு இன்றைக்கு நீக்கப்பட்டிருக்கிறது. காய்கறிகளை பஸ் ஸ்டாண்டிலே வந்து இறக்கும் பொழுது அங்கே நான் தூக்குகிறேன், நீ தூக்குகிறேன் என்று போட்டி போட்டுக் கொண்டு அதைத் தூக்குகின்ற கூலிகள் என்கின்ற பெயரால் சில பேர் வியாபாரிகள் வழியாக வந்து விவசாயிகளைத் துன்புறுத்துகின்ற சில நிலைமைகளும் நடைபெறுவதை பேருந்து நிலையங்களிலே கண்டு இருக்கின்றோம். அதைப் போல யாரும் வந்து ''நான் தூக்குகிறேன் இவ்வளவு கூலி கொடு'' என்று போட்டி போட்டுக் கொண்டு கேட்கின்ற அந்த நிலையும் இல்லாமல், கொண்டு வந்த காய்கறிகளை கொண்டு வந்த வியாபாரிகளை கொண்டுப் போய், தான் விற்க வேண்டிய இடத்திலே வைத்து விற்பனை செய்கின்ற அந்த நிலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வளவும் ஒரு அரசாங்கத்தினுடைய சலுகைகள், வசதி வாய்ப்புகள் மூலமாக விவசாயிகளுக்கு செய்துத் தரப்படுகிறது.

இது ஒவ்வொரு ஊரிலும் இன்றைக்கு இந்த நிலைமை என்றால் மதுரை மாநகரத்திலே தொடங்கி, நேற்று அல்லது நேற்று முன்தினம் வரையிலே ஏறத்தாழ 22 உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டதில் 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனை ஆகியிருக்கின்றது.

இதிலே ஒரே ஒரு முக்கியத்துவத்தைச் சொல்ல விரும்புகின்றேன். ஒரு சிறப்பைச் சொல்ல விரும்புகின்றேன். எல்லா சந்தைகளும், எல்லா மாவட்டங்களிலும் நல்ல முறையிலே விற்பனையானாலும் கூட எங்கள் திருவாரூர் மாவட்டத்தில் - எங்கள் என்று சொன்னதற்காக மன்னிக்கவும், நான் பிறந்த திருவாரூர் என்பதால் சொல்லுகின்றேன். அந்த மாவட்டத்திலே மாத்திரம் திருத்துறைப்பூண்டி என்ற நகரத்திலே அங்கே தான் விற்பனை குறைவு.

**விவசாயிகள் தோட்டப் பயிர்களை விளைவிக்க அரசாங்கமே செய்து தரும் ஏற்பாடு**

என்ன காரணம் என்றால் அந்த நகரத்தைச் சுற்றியிருக்கின்ற கிராமப் பகுதிகளில் நெல் விளைகிறது. வேறு வகையான தானியங்கள் விளைகிறது. தோட்டப் பயிர்கள் விளைச்சல் அதிகம் இல்லை. அதனால் அந்த உழவர் சந்தைக்கு வருகின்ற காய்கறிகள் கிலோ எடை குறைவு. அந்த எடை குறைவான காரணத்தால் வருகின்ற பொதுமக்களுக்குத் தேவையான காய்கறிகள் கிடைப்பதில்லை. ஆகவே அங்கே மாத்திரம் மற்ற இடங்களிலே பத்தாயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆகிறது என்றால், அங்கே ஐந்தாயிரம் ரூபாய்க்கு என்று விற்பனை ஆகிறது. அதனால் ஏற்பட்டுள்ள ஒரு பயன் என்னவென்றால் அங்குள்ள விவசாயிகள் இனிமேல் தோட்டப்பயிர்களை அங்கே போட்டு விளைவித்து அதை அந்தச் சந்தைக்குக் கொண்டு வருவது என்று முடிவு செய்திருக்கின்றார்கள். அதற்கும் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து, வசதிகளைச் செய்து தருவது என்று தீர்மானித்து அந்த உறுதியும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

எனவே கிராமப்புறத்திலே ஒரு சிறிய அளவிற்குக் கிராமப் பொருளாதாரத்திலே ஒரு புரட்சி ஏற்படுகின்ற நிலையை இன்றைக்கு இந்த உழவர் சந்தைகள் உருவாக்கியிருக்கின்றன என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

**- பரமக்குடி, இராமநாதபுரம், அருப்புக்கோட்டை மற்றும் இராஜபாளையம் உழவர் சந்தைகள் திறப்பு விழாவில் 22-2-2000, 23-2-2000 ஆகிய தேதிகளில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**

*கண்ணுக்குத் தெரியாமல் கசிகிறது*
*காற்றின் இரத்தம்;*
*வேலைக்காத்தான் முட்கள்.*

**- அறிவுமதி**



# திருவள்ளுவர் தீபம்; தீப்பந்தம்!

சேலை நெய்தும், வேட்டி செய்தும் சில வேளைகளில் மறைக்கமுடியாத தமிழர்களின் மானத்தைத் திருக்குறள் என்கிற ஒரு நூலால் மறைத்த நுண்மையாளர் திருவள்ளுவப் பெருமான்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டு வரலாற்று ஆசிரியர்களால் வரவு வைத்துக் கொள்ளப் பட்ட நூற்றாண்டு. இந்த நூற்றாண்டிலேதான் ஆரிய மதத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக, சராசரி மனிதர்களுக்கான சமரைத் தொடங்கினார் கௌதம புத்தர். ஆனந்தன் என்கிற சீடன் அவரை நோக்கி, "புத்தனே! ஞானம் பெறுவது எப்படி என்று கற்றுத் தருவாயா?" என்று கேட்டான். "உனக்கு நான் கற்றுத் தர இயலாது; ஆனால், நீ படித்துக் கொள்ளலாம்" என்று புத்தர் சொன்னார். இவ்வளவு அறிவு செறிந்திருந்த காலம் அது.

"இருளைப் பழிப்பதைவிட வெளிச்சம் ஏற்றுவது இனிமையானது" என்ற கன்ஃபூசியஸ் வாழ்ந்த காலம் அது. இதே காலத்தில்தான் "ஏன் என்ற கேள்வியை எதற்கும் கேட்பீர்; எவரிடமும் துணிவுடன் விளக்கம் கேட்பீர்" என்று கிரேக்கத்தின் தெருக்களில் சாக்ரட்டீஸ் பேசினார். இதே நூற்றாண்டிலேதான் யூதேயாவில் இறைவாக்கினர் தோன்றி மக்களுக்கு வர இருக்கிற காலத்தைக் குறித்து எச்சரிக்கை விடுத்தார்கள்.

இந்த நூற்றாண்டிலேயே தமிழர்களாகிய நமக்கு வாழ்க்கை இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் இருந்தது. அப்படிப்பட்ட மண்ணிலிருந்து திருக்குறள் என்கிற ஒளிப் பறவை, தனது வெளிச்ச அலகுகளால் உலகத்தின் இருட்காட்டைக் கிழித்தெறியப் புறப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் திருக்குறள் இயற்கை விதிகளுக்கு அப்பால், நின்று நிலைப்பதற்கு என்ன காரணம்?

விவிலியத்தில் ஒரு வரி வரும். "நோயாளிக்கே மருத்துவன் தேவைப்படுகிறான்". அதைப்போலவே வாழ்வில் இருள் சூழ்கிறபோது மனிதனுக்கு அகலாவது அவசியப்படுகிறது. திருக்குறள் தீபமாகவும், தீப்பந்தமாகவும் இருப்பதால் மனித வாழ்க்கைக்கு அது வழிகாட்டுகிற வேலையைத் தொடர்ந்து தொய்வின்றிச் செய்துவருகிறது. ஒரு நாட்டுக்கு, ஒரு மொழிக்கு என்று அது எழுதப்படவில்லை. நித்தியமான உண்மைகளைச் சொன்னது மாத்திரம் அல்லாமல், சொன்னது சென்று சேர்ந்ததா என்று பார்த்துக் கொண்டே சொல்லுகிறது. திருக்குறள் நிலைப்பதற்கான காரணங்களைப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். மற்றவைகளின் பார்வைகளிலிருந்தும் எப்போதும் வாழுகிற இலக்கியம் எப்படி வேறுபடுகிறது என்பதைப் பொறுத்தும் அதன் வாழ்க்கை இருக்கிறது. இந்த நுட்பத்தை வெளிப்படுத்துவதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

**"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்"**

*(அழுக்காறாமை –166)*

**வலம்புரி ஜான்**





எண்ணங்களை வெளிப்படுத்துகிறவர்களில் எழுத்தாளர்களும், பேச்சாளர்களும் இரு வகை. சிறந்த எழுத்தாளர் என்பவர் சொன்னது சென்று சேருமா என்று பார்த்துக் கொண்டே எழுதுகிறவர். மேலும் வேறு ஒருவர் அதைச் செப்பமாக்குவதற்கு இடமின்றி முழுமையாகச் சொல்லிவிடுகிறவர். சிலையில் மூக்கு வடிந்துவிட்டால் உளி ஓய்வெடுக்க வேண்டும் அல்லவா? அதுபோல. திருவள்ளுவப் பெருமானுக்கு இந்தக் கலை சிறப்பாகவே கைவந்திருக்கிறது.

இருந்தும், கொடுக்க மனம் இல்லாதவன் ஒரு வகை. பெற வருகிறவனைக் காயப்படுத்தி விட்டு காசு என்கிற களிம்பு போட்டு விடுகிறவன் ஒரு வகை. இழுத்தடித்து, பிறகு கொடுக்கலாம் என்று தெருமுனைகளைத் தேய வைக்கிறவன் ஒரு வகை. திருவள்ளுவர் இந்த இடத்தில் இவர்களைக் குறித்துப் பேசாமல் கொடுப்பதைக் கெடுப்பவனைக் குறித்துப் பேசுகிறார்.

கொடுக்க மறுக்கிறவனுக்கு வராத கெடுதல் கொடுப்பதைத் தடுக்கிறவனுக்கு வரும் என்று உறுதிபடப் பேசுகிறார். அவன் தானும் தரவில்லை, தருகிறவனையும் தர விடவில்லை. இந்த இடத்தில் உலகத்தில் பாய்ந்தாக வேண்டிய இரக்க வெள்ளத்திற்கு உலர்ந்துபோன சருகுகளால் அணை கட்டுகிறவர்களை, அமில நதியின் அனல் வீச்சோடு திருவள்ளுவர் பார்க்கிறார். கொடுக்க மறுக்கிறவனின் மீது அவருக்கு வராத கோபம் கொடுப்பதைத் தடுக்கிறவன் மீது படை நடத்திப் பார்க்கிறது.







ஆகவே, கொடுப்பதைத் தடுக்கிறவன், அதிலும் பொறாமை கொண்டு தடுக்கிற வனுக்கு என்ன நேரும் என்று சொல்ல வருகிறபோது 'உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்' என்று பேசுகிறார். இந்த வரிகளில் உண்ண இயலாமல் கெடுவான் என்பதை உண்பதற்கு ஒன்றும் கிடைக்காமல் கிடப்பான் என்றும் கொள்ளலாம். ஆனால், நுட்பம் அதுவல்ல.

உண்பதற்குக் கிடைக்காவிட்டால் இரந்தாவது வாழலாம். இரந்து வாழ்வதற்கு மானத்தை மறைக்கின்ற ஓர் ஆடையேனும் மனிதனுக்கு அவசியம். மானத்தை மறைத்துக் கொண் டல்லவா வீதியில் வந்து கையேந்த வேண்டும்? இங்கே 'உடுப்பதூஉம்' என்பதை முதலில் வைத்தார். அப்படியென்றால், உடுத்தவே ஒரு முழத் துணி கிடைக்காத ஒருவன் எவ்வாறு வெளியில் வர இயலும்? வந்தால் அல்லவா கையேந்துவது? ஆகவே, கொடுப்பதைத் தடுக்கிறவன் பிச்சை எடுக்கக் கூட வழியில்லாது கெட்டழிவான் என்பது திருவள்ளுவப் பெருமானின் ஆழ்ந்த கருத்து.

திருவள்ளுவப் பெருமான் வாழ்ந்த காலத்தில் சமண சமயம் தமிழ் மண்ணில் ஏறத்தாழ இருந்ததற்கான அடையாளங்கள் உண்டு. இவர்களில் சிலர் திகம்பரர்கள். இவர்கள் ஆடை அணியாதவர்கள். ஆனால், திருவள்ளுவப் பெருமான் 'உடுக்கை இழந்தவன்' என்று பேசுவதால் இந்த மரபிற்கு முற்றிலும் மாறானவர் என்பதை இந்த இடத்தில் நினைக்கவேண்டும்.

ஒரு மலரைப் பார்க்கிறபோது, இதைக் கசக்கிப் பிழிந்தால் எத்தனைத் துளிகள் அமுத மது கிடைக்கும் என்று எண்ணுவது ஒரு பார்வை. அந்த அழகின் சிரிப்பில் அகிலத்தையே முகம் பார்த்துக்கொள்ளுவது வேறு ஒரு பார்வை. பொருள் ஒன்றாக இருக்கலாம்; பார்வைகள் வெவ்வேறாக இருக்கலாம். திருவள்ளுவரைக் காலம்தோறும் நிலைக்கவைப்பது அவரது வேறுபட்ட பார்வையும் ஆகும்.

இதைப்போலவே,

*"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண் பில்லா தவர்"*

(பண்பு உடைமை - 997)

— என்று திருவள்ளுவர் பேசுகிறார்.



அறிவியல் வளர்ச்சி பெற்ற இருபத்தியோராம் நூற்றாண்டில் தாவரங்களைப் பற்றிய அறிவு முற்றிலுமாக மாறி வருகிறது. மரம் என்பது உயர்திணை என்று கவிஞர்கள் கற்பனை மாடங்களில் நின்றுகொண்டு கதைக்கிறார்களா என்றால், அதுதான் இல்லை. கற்பனையே கவிதையாக இருந்தது ஒரு காலம். அறிவின் ஊற்றிலிருந்து கவிதைப் பறவை சிறகு விரிப்பது வரவிருக்கிற நூற்றாண்டின் நுட்பமான அடையாளங்களில் ஒன்று.

அந்த வகையில் ஒரு மரத்திற்கு முன்பாக நிற்கிறபோது மரம் என்ன உணருகிறது என்பதை நீ அறியமாட்டாய்; ஆனால், நீ என்ன நினைக்கிறாய் என்பதை மரம் ஒரு வேளை உணர்ந்துகொள்ளுகிறதோ என்று அய்யப் படுகிற அளவிற்கு மனிதச் சிந்தனை இப்போது வளர்ந்திருக்கிறது. மரங்கள் அன்பு, ஆத்திரம் இவற்றைப் புரிந்துகொள்ளுகின்றன என்பது மெய்ப்பிக்கப்பட்ட உண்மை. நான் பயன்படவில்லை. ஆனால், மரம், நின்றால் மரம்; விழுந்தால் விறகு; எரிந்தால் கரி; புதைந்தால் வைரம். ஆகவே, எல்லா நிலைகளிலும் பயன்படுகிற மரத்தைப் பண்பில்லாதவருக்கு ஒப்பிடலாமா என்பது கேள்வி.

திருக்குறளை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டால், திருவள்ளுவப் பெருமான் தாவர உலகத்தைப் பற்றிய தனி அறிவும் பெற்றி ருந்தார் என்றே கொள்ள இடமிருக்கிறது. ஆகவே, இந்த இடத்தில் வேறு சொல் இன்மையால் மரம் என்று குறித்திருக்க வேண்டும். ராகுல சாங்கிருத்தியாயன் என்கிற பேரறிவாளர் பாலி மொழியில் தம்மம் என்கிற சொல் ஆறு பொருள்களில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது என்று பேசுகிறார். 'தரு' என்கிற வடசொல் வரவெல்லாம் பின்னால் நிகழ்ந்தது.

ஆங்கிலத்தில் இக்குறளைப் பெயர்த்தவர்கள் பலர், மரம் என்கிற சொல்லுக்கு Tree என்கிற



பதத்தையே பயன்படுத்தினார்கள். ஆனால், திருக்குறளை ஆங்கிலத்தில் பெயர்த்த போப்பையர் அவர்கள் இந்தக் குறளில் வருகிற மரம் என்கிற சொல்லுக்கு மாத்திரம் தனது மொழிபெயர்ப்பில் Wood என்று போட்டார். திருவள்ளுவரின் உள்ளத்தைத் தெரிந்தவர்களில் அவரும் ஒருவர். போப்பையர் அவர்கள் இன்று மொழி பெயர்த்திருந்தால் உயிரைப் பற்றிய இலக்கணம் முற்றிலுமாக மாறிப்போன இக்காலத்தில் கட்டை என்று கூட ஒரு சொல்லைப் பெய்திருக்க இயலாது. ஆகவே, இந்தக் குறளில் திருவள்ளுவர், மரம் என்று சொன்னது அவரது மரபுவழிச் சிந்தனையைக் காட்டவில்லை; அதற்கு மாறாகச் சில வேளைகளில் மொழிக்கு நேர்ந்து விடுகிற இயலாமையை மாத்திரமே அது சுட்டுகிறது.

> **குன்றின் மேலிட்ட விளக்கெனப் பொலியும் குறளினிடத்தே குற்றம் கண்டார் ஒருவரும் இல்லை; ஒருவரோடொருவர் முரண்பட்டார் அனைவரும் கூட தத்தம் கொள்கைக்குத் திருக்குறளையே எடுத்துக்காட்டாக எடுத்தாள்வர்.**
>
> **– வித்துவான் தெ. பொ. மீ.**

*"உண்ணற்க கள்ளை உணிலுஉண்க, சான்றோரான்*
*எண்ணப் படவேண்டா தார்"*

*(கள் உண்ணாமை–922)*

'உண்ணாதே கள்ளை' என்று உத்தர விட்டிருக்க வேண்டிய திருவள்ளுவர், 'உணில் உண்க' என்று ஏன் நீக்குப் போக்கோடு, நெளிவு சுளிவோடு பேச வேண்டும் என்று கேட்கிறார்கள்.


சான்றோர்கள் எப்போதுமே பார்த்துப் பார்த்துத்தான் பேசுவார்கள். மக்களைத் திருத்துவதற்காக அவர்கள் பேசுகிறவர்களாக இருந்தாலும், எப்போது பேசவேண்டும், எதை, எவ்வளவு என்கிற கணக்கையெல்லாம் பார்ப்பார்கள். பகவத் கீதைக்கு ஞானதேவர் எழுதிய உரையினைச் சிறந்த உரையாசிரியரான ஆச்சார்ய வினோபாபாவே 'என் மனத்தின் மகுடபதி' என்று வருணிக்கிறார். இதில் ஓரிடத்தில், "நீங்கள் சூரியனையும், சந்திரனையும் வழிபடுகிறீர்கள்; அவ்வாறு வழிபடுவதும் என்னையே சேருகிறது. எனினும் அது எப்படிப்பட்டது என்றால், ஒரு செடியின் வேரில் நீரூற்றாமல் அதன் இலையிலும், காயிலும் நீரூற்றுவதைப் போன்றது" என்று கிருஷ்ண பரமாத்மா பேசுவதாக வருகிறது.

இறைவன் படைக்கப்பட்டவைகளை வழிபடாதே என்று சட்டம் இயற்றமாட்டான். பார்த்துப் பார்த்துப் பேசுவான். பைபிளில் "மனம் வருந்துகிறவர்களுக்குக் குடிக்கக் கொடு. அவர்கள் தங்கள் வேதனைகளை மறந்திருக்கட்டும்" என்றே வருகிறது. என்றாலும், வேறு சில இடங்களில் குடிக்கிறவன் ஒரு போதும் தேறமாட்டான் என்றும் அழுத்தமாகச் சொல்லப்படுகிறது.

இதைப்போலவே இசுலாமியர்களுக்கான கட்டளைகளில் 'குடித்தால் தொழாதே' என்று முதலில் வந்தது. பிறகு 'குடிக்கவே குடிக்காதே' என்று கட்டளை பிறந்தது. சண்டாளச் சாதியைச் சார்ந்த பெண்ணைத் தனது சங்கத்தில் சேர்த்துக்கொள்ள முடிந்த புத்தரால் எடுத்த எடுப்பில் ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானம் என்று சொல்லிவிட இயலவில்லை. ஏனென்றால் அந்த அளவிற்குத்தான் அப்போதைக்கு அவரால் முற்போக்காக இருக்க முடிந்தது. ஆகவே, காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப மக்களின் மனநலத்தைப் பண்படுத்தவும் வேண்டும்; அதேநேரத்தில் பண்பட்ட நிலத்திலேதான் விதைகளை ஊன்றவும் வேண்டும் என்பதால் திருவள்ளுவரும் பார்த்துப் பார்த்துப் பேசுகிறார். இந்தக் குறள் திருவள்ளுவர் மரபுக்கு மரியாதை தருகிற அதே நேரத்தில், புதுமையையும் போற்றுகிறவர் என்று நமக்குக் காட்டுகிறது.

❖ ❖ ❖

# பண்பாட்டுச் சுற்றுலா




ஆலயத் திருவிழா, உறவினர்களின் இல்லங்களில் நடைபெற்ற விழாக்கள் போன்றவை பழங்காலத்தில் சுற்றுலாச் செல்ல காரணங்களாக அமைந்தன. இவை அக்காலத்தின் நிலைப்பாடு. அறிவியல் வளர்ச்சியில் கல்வி, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், செய்தித்தாள், இதழ்கள் மூலமாகத் தாங்கள் அறிந்ததை நேரில் காண வேண்டும் என்ற அவா. எனவே அதற்காகச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளப்படுதல். இவை இக்காலத்தில் நிலைப்பாடு.

பண்பாடு என்பது மக்களின் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்கப்படும் நிகழ்வு. எனவே இது எழுதாத சட்டம். நம் இல்லத்திற்கு வருகை தருகின்றவர்களை கைகூப்பி வரவேற்பது, கை கொடுத்து குலுக்குவது, இன்முகத்துடன் உரையாடுவது, நன்றாக விருந்தோம்புவது, நினைவுப் பரிசு வழங்குவது, விடை பெறும்போது வாயில் வரை வந்து வழி அனுப்புவது என்பதற்கெல்லாம் எந்த விதிமுறைகளிலும் கிடையாது. ஆனால் இவைகளை நாம் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்கிறோம். எனவே அவைகள் எழுதப்படாத சட்டமாகும்.




மனித வாழ்க்கையில் நடைபெறும் பல நிகழ்வுகள், அதாவது உறவு முறைகள், மண விழா நிகழ்ச்சிகள், பொழுது போக்குகள், இசை, ஓவியம், நாடகம், கைத்திறன்

காட்டும் கலைச்செல்வங்கள் என்பவை நமது பண்பாட்டு நிகழ்வுகளாகின்றன. மேலும் ஊருக்கு ஓர் சிறப்பு என்பதாகக் கூடச் சிலவற்றைக் கூறலாம்.



மணப்பாறை மாடு, மாயவரம் ஏரு, மதுரை ஜில்லா ஆளு, பொள்ளாச்சிச் சந்தை, விருதுநகர் வியாபாரி என்றும், தஞ்சைக் கதம்பம், கும்பகோணம் கொழுந்து வெற்றிலை, சேலத்து மாங்கனி, காஞ்சிப் பட்டு, மதுரை சுங்கடி என்று கூறிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் அன்றாட வாழ்க்கை வகைப்பாடுகள்.

பண்பாட்டில் ஆலயங்களுக்கு மிகவும் முக்கிய இடமுண்டு. இந்து மதமோ, புத்த மதமோ, இஸ்லாமிய மதமோ, கிருஸ்துவ மதமோ, எதுவாகிலும் அதற்குரிய வழிப்பாடுகள், விழாக்கள் நிலைப்பெற்றுள்ளன. ஓய்வு நேரங்களில் தங்களது பொழுது போக்கிற்காகப் பலவிதமான இசை, நாட்டியம், நாடகம் போன்றவை எழுச்சி பெற்றன. அவையே இன்றைக்கு நமது பண்பாட்டை எடுத்துச் சொல்லும் சிறப்பானதொரு விளம்பரச் சாதனங்களாகும்.

மேலும் நமது இலக்கியங்களில் தமிழகத்தின் நிலப்பரப்பையே குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பிரித்து ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய பழக்கவழக்கங்கள், வாழ்க்கை நெறிமுறைகள் சிறப்பித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது மிகவும் சிறப்பானதொரு சான்றாகும்.

தமிழகத்தின் பண்பாடு நமது பாரம்பரியத்தின் தொடர்ச்சியான பயணத்தின் சிறப்பான பகுதியாகத் தொடர்கிறது. இவைச் சுற்றுலாவின் மேன்மைமிகு கூறுகளாகும். தமிழகத்தில் பல்வேறுப் பகுதிகளை ஆண்ட மன்னர்கள் மாபெரும் ஆலயங்கள், கோட்டைகள், கொத்தளங்கள், அரணமனைகள், நினைவாலயங்கள், வழிபாட்டுச் சின்னங்கள், ஏரிகள், ஆறுகள் போன்றவற்றை அமைத்து அவர்களின் மன ஈடுபாட்டை வெளிப்படுத்தினர். இவைகள் நமது பண்பாட்டினை பிரதிபலிப்பதாக உள்ளன. இது போன்ற பலவகைப்பட்ட கலைத்திறன்கள், விழாக்களைப் பார்க்கும் போது நாம் மட்டுமல்ல அயல் நாட்டினரே வியக்கின்றனர்.

இயற்கை அள்ளித் தெளித்த எண்ணற்ற சிதறல்களும், நமது பாரம்பரியத்தின் அழகும் தமிழகத்தைச் சுற்றுலாவின் சொர்கபூமியாக ஆக்கியுள்ளன. ஆகவே பன்னாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து நமது பண்பாட்டைக் கண்டு மகிழ்கிறார்கள்.

தற்போது நமது பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் சில இடங்களையும்,கோயில்களையும், விழாக்களையும் பார்ப்போம்.

"ஆயிரம் கோயில்கள் நகரம்" எனும் பெருமைக்குரியது காஞ்சிபுரம். இந்தியாவின் ஏழு புனித நகரங்களில் ஒன்று. பல்லவர்களின் தலைநகரம். ஏகாம்பரேஸ்வரர் கோயில், வரதராஜசாமி கோயில், வைகுண்டப்பெருமாள் கோயில், கைலாசநாதர் கோயில், காமாட்சியம்மன் கோயில் போன்றவை பண்பாட்டுச் சின்னங்களாக உள்ளன.

பல்லவ மன்னர்கள் சிற்பக் கலைக்குச் செழுமைச் சேர்த்த இடம் மாமல்லபுரம். எட்டாம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட இணையற்ற கடற்கரைக் கோயில். அர்ஜுனன் தபசு, ஐந்து ரதம், புலிக்குகை போன்ற சிறப்பு மிக்கச் சிற்பங்கள் காண்போரை மெய்மறக்கச் செய்கின்றன.

இராசராச சோழனால் எழுப்பப்பட்ட மிகப் பெரிய பிரகதீஸ்வரர் ஆலயம், கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக் கலைகள் காண்போரை வியக்கச் செய்கின்றன.

ஆனந்தக் கூத்தாடும் தில்லை நடராசனின் அழகிய கோயில் உள்ள நகரம். நாட்டியத்திற்கு இலக்கணம் வகுத்த அபிநயங்கள் 108–ம் இங்கே காணலாம். இவை நாட்டிய உலகின் மிகப் போற்றுதற்குரியவையாகக் கருதப்படுகின்றன.

இதைப்போல திருவரங்கம், மதுரை, தாராபுரம், கங்கைகொண்ட சோழபுரம், நெல்லையிலுள்ள காந்திமதி நெல்லையப்பர் ஆலயம், கிருஷ்ணாபுரம் சிற்பங்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் நமது முன்னோர்களின் பண்பாட்டுச் சின்னங்களாகும். அவைகளை எப்படியேனும் பாதுகாப்பதே நமது தலையாயக் கடமையாகும்.

இவ்வரிய ஆலயங்களில் அக்கால நாட்டியச் சிறப்பை எடுத்து இயம்பும் வண்ணம் பல விழாக்கள் நடத்தப்படுகின்றன. மாமல்லபுரத்தில் பண்பாட்டு விழா (டிசம்பர்–ஜனவரி), சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா (பிப்ரவரி–மார்ச்), தஞ்சையில் கலை மற்றும் இசை விழா (நவம்பர்–ஜனவரி), மதுரையில் சித்திரைத் திருவிழா (ஏப்ரல்–மே), குமரியில் குமரிமுனைத் திருவிழா, பொங்கல் சுற்றுலா விழா எனப் பல விழாக்கள் நடத்தப்படுகிறது.

நமது மக்களின் கலைத்திறன்கள் வெளிப்படுத்தும் கற்சிலைகள், ஐம்பொன் சிலைகள், தஞ்சை கலைத்தட்டு, மர வேலைப்பாடுகள், ஓலைச்சுவடிகள், சித்தன்னவாசலில் ஓவியங்கள் எனப் பலவகை கைத்திறன்கள் மிக்கது.

கிராமியக் கலைகளான பொய்க்கால் குதிரையாட்டம், கோலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், கும்மி, ஒயிலாட்டம், தேவராட்டம், தப்பாட்டம், சிலம்பாட்டம், பொம்மலாட்டம், கழைக்கூத்து, தெருக்கூத்து என்பன அக்கால மக்களின் பொழுதுப் போக்கு நிகழ்வாக இருந்தவை.

வீர விளையாட்டுகள், எருது தழுவுதல் (ஜல்லிக்கட்டு), ரேக்ளா ஓட்டம், சிலம்பம், மற்போர், வாள்போர் எனப் பலவகை வீர விளையாட்டுகள் அக்காலத்து மக்கள் வீர உணர்வுடன் கூடிய உடல் வலிமை மிக்கவர்களின் வீர தீரச் செயல்களாக காணப்பெறுகின்றன.

இவ்வாறு எல்லா வகைகளிலும் சிறப்பு மிக்க நமது பண்பாடு தான் இன்றைய சுற்றுலா வளர்ச்சிக்கு ஆணி வேர். எனவே இப்பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் பாதுகாக்கவும், அவற்றை வெளி உலகத்திற்கு மேலும் உணர்த்தவும் உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

உலகில் வளர்ந்து வரும் பொருளாதாரச் சந்தையில் தெற்காசிய நாடுகளின் பண்பாட்டு மீது வெளிநாட்டு மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இந்திய நாட்டின் பண்பாட்டு முறையைக் கண்டு அறிந்து கொள்ள பேரார்வம் காட்டுகின்றனர். ஏனெனில் இந்தியா முக்கியமாகக் பண்பாட்டுச் சுற்றுலாவுக்கான நாடாகவேக் கருதப்படுகிறது. அந்தப் பண்பாட்டு எழுச்சியின் ஓர் அங்கம் தான் தமிழ்நாடு.

சுற்றுலா மக்களின் வாழ்க்கை முறையில் ஓர் அம்சமாக மாறி வருகிறது. ஆகவே அம்மக்களை ஈர்க்க இங்கே வரலாற்று நினைவிடங்கள் சிறப்புமிகு ஆலயங்கள், கல்வெட்டுக்கள், கைத்தொழில் திறன்கள், கலைத் திறன்கள், ஓவியங்கள், குகைக் கோயில்கள் என தடுக்கி விழுகின்ற இடமெல்லாம் நமது பண்பாட்டு படிவங்கள் தான். எனவே தமிழகமே ஓர் பண்பாட்டுச் சுற்றுலா மையமாக காண்போரது சிந்தையைக் கவரும். இதை நாம் எந்நாளும் போற்றிப் பாதுகாப்போம்.

— ந. பாலுசாமி, துணை இயக்குநர்,
சுற்றுலா இயக்ககம்.

❖❖❖❖❖❖❖❖❖❖ ———— ❖❖❖❖❖❖❖❖❖❖

## மூன்று கேள்விகள்

அக்பருடைய அரசவையில் காஜாஸாரா என்று ஒருவன் இருந்தான். அவன் பீர்பல் அடைந்து வரும் செல்வாக்கைக் கண்டு பொறாமைப்பட்டான். பீர்பலை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் எவராலும் பதில் சொல்ல முடியாத மூன்று கேள்விகளை அக்பரிடம் சொல்லி, அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருந்தான்.

அக்பரும் பீர்பலை அழைத்து, "பூமியின் நடு மையம் எது? வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன? உலகத்தில் உள்ள மக்கள் தொகையில் சரியாக ஆண்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? பெண்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? பீர்பல் காஜாஸாராவின் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல், பார்ப்போம்" என்றார்.

பீர்பல் உடனே ஒரு பெரிய கழியை எடுத்து நிறுத்தி வைத்து, "அரசே! இந்தக் கழியின் மேல் முனைதான் பூமியின் மத்திய பாகம். வேண்டுமானால் காஜாஸாராவை ஆகாயத்திலிருந்து பூமியை அளந்து பார்க்கச் சொல்லுங்கள்" என்றார்.

அடுத்தபடியாக ஒரு செம்மறி ஆட்டை இழுத்து வந்து, "அரசே! இந்த ஆட்டிற்கு எத்தனை ரோமங்கள் உள்ளனவோ அத்தனை நட்சத்திரங்கள்தான் வானத்தில் இருக்கின்றன. சந்தேகமாயிருந்தால், காஜாஸாராவைத் தம்முடைய ஓய்வு நேரத்தில் எண்ணிப் பார்க்கச் சொல்லுங்கள். மூன்றாவது கேள்விக்குப் பதில் சற்று சிரமம். நான் விடை அளிப்பதற்குள் பல புதிய ஜீவன்கள் உலகில் பிறந்து விடக்கூடும். எனவே, உலகிலுள்ள ஆண், பெண் அத்தனை பேரும் கொல்லப்பட்டுவிட்டால் சரியான ஜனத்தொகையைச் சுலபமாகச் சொல்லிவிடலாம்" என்றார், பீர்பல்.

பீர்பலின் சாமர்த்தியமான பதில்களைக் கேட்ட அக்பர் சிரித்தார். காஜாஸாராவின் முகத்தில் அசடு வழிந்தது!

– 'பீர்பல் கதைகள்' தொகுப்பிலிருந்து–

❖❖❖❖❖❖❖❖❖❖ ———— ❖❖❖❖❖❖❖❖❖❖

# தமிழகம் முழுவதும் கணினி மயமாக வேண்டும்

– முதலமைச்சர் கலைஞர்

"திருவையாற்றில் நடைபெறுகின்ற இந்த இனிய விழா நிகழ்ச்சியில் 3 கோடியே 14 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 295 புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ள. 2 கோடியே 48 இலட்ச ரூபாய் செலவில் 53 திட்டப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. 1 கோடியே 7 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் 2062 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

**ரூ.6.9 கோடியில் கட்டடங்கள்**
**திட்டப்பணிகள் தொடக்கம்**

20 இலட்ச ரூபாய் செலவில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களைக் கணினிமயமாக ஆக்குகின்ற திட்டம் தொடங்கி வைக்கப்படுகின்றது. ஆக 6 கோடியே 89 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடங்களும், திட்டப் பணிகளும் இந்த விழாவில் தொடங்கப்படுகின்றன என்ற நற்செய்தியை உங்களுக்கெல்லாம் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக புதுமையாக கணினி மயமாக வட்டாட்சியர் அலுவலகங்களை ஆக்குகின்ற ஒரு முயற்சி இன்றைக்கு இந்த மாவட்டத்திலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரை நான் பெரிதும் பாராட்ட விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் இரண்டு மாவட்டங்களில் தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் இந்த கணினி வட்டாட்சியர் அலுவலகம் வரையிலே பரவுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்த பெருமை நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் டாக்டர் ராஜாராம், இ.ஆ.ப. அவர்களுக்கும், அதைப் போல திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் சாரும்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் முனைப்பாக பணியாற்றி எல்லா வட்டாட்சியர் அலுவலகங்களும் கணினி மயமாவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்த வட்டாட்சியர் அலுவலகங்கள் கணினிமயமாக ஆக்கப்படுவதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையிலே தஞ்சை மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் உள்ள கணினிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே உள்ள தலைமை கணினியோடு மிகுவிரைவுப் பிணையம் (High Speed Network) இணைக்கப்பட்டுச் செய்தி மற்றும் தகவல் பரிமாற்றம் இப்பொழுது நடைபெறுகிறது. இவ்வாறு அமையப்பெறும் மிகுவிரைவுப் பிணையம் நேரடியாகச் செயற்கைக்கோள் (Satellite) உதவியோடு, உயர் தகவல் பரிமாற்றச் சாதனங்களோடு இணைக்கப்படுவதால் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களும் இணைய இன்டர்நெட் வசதியையும் பெறுகின்றன என்ற ஒரு நிலையும் ஏற்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் மிகுவிரைவுப் பிணையம்

இத்தகைய மிகுவிரைவுப் பிணையம் வட்ட அளவில் இந்தியாவிலே முதல் முறையாகத் தஞ்சாவூர் மாவட்டத்திலே தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது என்னுடைய மாவட்டம் என்பதால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று யாரும் கருதக்கூடாது. மாவட்டத்துக்கு அமைகிற ஆட்சித் தலைவர்கள் அப்படி, அதற்கு நான் என்ன செய்ய முடியும், இந்த மிகு விரைவுப் பிணையத்தை நிர்மாணித்து, இயக்கி, கண்காணித்துச் செயல்படுத்த மாவட்டத் தகவலியல் மையத்தில் (National Informatic Centre) இரு தொழில்நுட்ப அலுவலர்கள் மாவட்ட ஆட்சியரின் கீழ்ப் பணியாற்றி வருகின்றார்கள். வட்டாட்சியர் அலுவலகக் கணினியிலே பின்வரும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

ஒன்று நிலப் பதிவேடுகளில் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா கணக்குகள், இரண்டு நில ஆக்கிரமிப்பு அடங்கல், பட்டா மாற்றம், நில ஒப்படை மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட பணிகள், பிறகு முதலமைச்சருடையச் சிறப்புக் குறை கேட்கும் மனுக்கள் என்ற அந்தத் திட்டமும் இந்தக் கணினியினால் பயன் பெறுகின்றன. முதியோர் உதவித் திட்டத்திற்கும் இந்தக் கணினி பயன்படுத்தப்படுகிறது. மனுநீதி நாள் மனுக்களின் மீதான நடவடிக்கை எடுக்கவும், இந்தக் கணினி பயன்படுத்தப்படுகின்றது. முக்கியமாகப் பொது விநியோகத் திட்டத்திற்கும் இந்தக் கணினி பயன்படுத்தப்படுகிறது. சம்பளப் பட்டியல் தயாரித்தல், பணியாளர்களுடைய பணிப் பதிவேடுகள், இவைகளுக்கும் பயன்படுகிறது. இப்பணிகளுக்கான

> **"ஏழை, எளிய மாணவர்கள், கிராமப்புறத்து மாணவர்கள், கணினிப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு எனக்கே புல்லரித்து போய்விட்டது."**

மென்பொருள்கள் மாவட்ட தேசிய தகவல் மையத்தினால் தயாரிக்கப்பட்டு, கடந்த சில ஆண்டுகளாக மாவட்டத் தகவல் மையத்திலே செயல்படுத்தப் பட்டு வருகின்றன. தற்போது இப்பணியானது வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி மய மாக்குதல் திட்டத்தின் அடிப்படையில் வட்டாட்சியர் அலுவலகங்கள் விரிவுப்படுத்தப்பட்டு இன்று தொடங்கி வைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 906 கிராமங்களிலும் கணினி மூலம் பணிகள்

இன்னொன்று தமிகத்திலேயே தஞ்சை மாவட்டத்தில் தான் மாவட்டத்திலே உள்ள அனைத்து 906 கிராமங்களிலும் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா கணக்குகள் கிராம வாரியாகப் பதிவுச் செய்யப்பட்டு, பட்டா மாற்றம் மற்றும் சிட்டா நகல் வழங்குதல் போன்றப் பணிகள் முழுவதும் கணினியிலேயே செயல்படுத்தப் படுகின்றன.

இது வரையிலே இதற்காக அலைந்து கொண்டிருந்த பொதுமக்கள், கிராமப்புறத்து மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இனி அலையத் தேவையில்லை. அதற்காக இடையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட நாட்கள் மிக மிகக் குறைந்து உடனடியாக நீங்கள் கோருகின்ற விவரங்களை வட்டாட்சியர் அலுவலகத்திலேயே பெற முடியும் என்கின்ற அந்தச் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. எனவே தமிழக முழுவதும் கணினிமயமாக ஆகவேண்டும் என்ற குறிக்கோளோடு இந்த அரசு செயல்பட்டு வருகின்றது. அப்படியானால் இன்னும் பணிகள் விரைவிலேயே முடியும் என்பதை நானும் உணர்கிறேன். கணினிப் பற்றிய விவரம் தெரிந்த அனைவரும் உணர்கிறார்கள்.

### 1200 மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிப் பயிற்சி அளித்திட திட்டம்

இதை ஒரு பெரிய பயிற்சியாக ஆக்கி மாணவர்கள் எதிர்காலத்திலே படிப்பை முடித்தவுடன் இப்பொழுது உள்ள மாணவர்களைப் போல திடீரென்று வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு முயற்சி எடுப்பார்களே யானால் அவர்கள் கணினி படிக்காமல் சென்றால் அந்த வேலை வாய்ப்புக்களைப் பெறுவது கடினமாக ஆகிவிடும். எனவே தான் தமிழ்நாட்டில் 1200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பயிற்சியைத் தொடங்குவது என்று அறிவித்து முதல் கட்டமாக 666 பள்ளிகளில் 112 கோடி ரூபாய் அரசின் செலவில் இந்த ஆண்டு கணினிப் பயிற்சி தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த கணினிப் பயிற்சியை நடத்தித் தருகின்றவர்கள் தனியார்களாக இருந்தாலும், அதற்கானத் தொகையை அரசு தான் அவர்களுக்குத் தருகின்றது. அவர்கள் மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சியை நடத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விருப்பப்பட்ட மாணவர்கள் அதற்கான தொகையைச் செலுத்தி இந்தப் பயிற்சியைப் பெற்று வருகிறார்கள்.

நான் பல இடங்களிலே சுற்றுப் பயணம் செய்யும் பொழுது யாருக்கும் அறிவிக்காமலேயே, ஆனால் ஒரே ஒரு அதிகாரிக்கு மட்டும் அறிவித்து, திடீரென்று மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சென்று பல பள்ளிகளைப் பார்த்தேன். சேலம் மாவட்டத்தில், திருவள்ளூர் மாவட்டத்தில், நான் பல மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சென்றுப் பார்த்தேன். அங்கெல்லாம் மிக அருமையாக, ஆர்வத்தோடு, அக்கறையோடு கிராமப்புறத்து மாணவர்கள் கணினிப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

முதன் முதலாக சென்னைக்கு அடுத்துள்ள பூவிருந்தவல்லிக்குத் திடீரென்று ஒரு நாள் பகல் 3 மணிக்கு யாருக்கும் சொல்லாமல் சென்றுக் கணினிப் பயிற்சி நடப்பதைப் பார்த்தேன். எவ்வளவு ஆர்வத்தோடு ஏழை, எளிய மாணவர்கள், கிராமப்புறத்து மாணவர்கள், அந்தப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு எனக்கேப் புல்லரித்து போய்விட்டது. அவர்களைக் கேட்டேன், நீ யாருடைய மகன் என்று கேட்டால் யாரோ ஆறுமுகம், குப்புசாமி என்று சொல்லுகிறார்கள். உங்கள் அப்பாவுக்கு என்ன வேலை என்று கேட்டால் அவர்கள் விவசாயி, தோட்ட வேலை என்று சொல்லுகிறார்கள். பையன் படிக்கிறான், படித்து விட்டுப் பள்ளியிலிருந்தோ அல்லது கல்லூரியிலிருந்தோ வெளியேறும் போதுக் கணினிக் கற்றவனாக வெளியே வந்தால் அவனுக்காக வேலைவாய்ப்புக் காத்துக் கொண்டிருக்கிறது.

### கணினி முறையைப் பரவலாக்கித் தமிழகத்தின் நிலையை உயர்த்திடுவோம்

இந்தியாவிலிருந்து ஆயிரக் கணக்கானவர்கள் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்கிறார்கள். கணினிப் பயிற்சிப் பெற்றவர்கள், மென் பொருள் பயிற்சிக் கற்றவர்கள், இன்டர்நெட்டில் பயிற்சிப் பெற்றவர்களெல்லாம் இன்றைக்கு அமெரிக்காவுக்குச் சென்று, அங்குக் குவிந்துக் கிடக்கின்ற வேலை வாய்ப்புக்களைப் பகிர்ந்துக் கொள்வதற்காகச் செல்கிறார்கள். நான் உங்களுக்குப் பெருமையோடுச் சொல்கிறேன், அப்படிச் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்திலே தான் அதிகம் என்பதை நான் பெருமையோடுச் சொல்லிக் கொள்கின்றேன். அதன் மூலமாக நமக்குக் கிடைக்கின்ற அன்னியச் செலாவணி கூட மிக அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

எனவே கணினியை மேலும், மேலும் வளர்த்து, பரவலாக்கி, விரிவாக்கி, விரைவாக வளர்த்து, நம்முடைய மாணவச் செல்வங்கள் எதிர்காலத்திலே ஒளிமயமான வாழ்வைப் பெறுவதற்கும், தமிழகத்தினுடைய நிலையை உயர்த்துவதற்கும் பயன்பட வேண்டுமென்ற வாழ்த்துக்களோடு இன்றைக்கு நான் இந்த வட்டாட்சியர் அலுவலகங்களைக் கணினி மயமாக்குகின்ற நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்திருக்கின்றேன் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

திருவையாற்றில் 20–2–2000 அன்று நடைபெற்ற அரசு விழாவில் **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.



# கீர்த்தி

கீர்த்திவாசன் கைக்கடிகாரத்தை ஒரு முறை உற்றுப் பார்த்துக் கொண்டு மதில் மீது இருந்து கீழே குதித்தான். அவனை இடித்தபடி உட்கார்ந்திருந்த சுந்தரம் சட்டையைப் பிடித்து மேலே இழுத்தான்.

"கொஞ்சம் வேல இருக்கு, போகணும்" என்றபடி கீர்த்திவாசன் முன்னே ஓரடி எடுத்து வைத்தான்.

"எங்க? நாய் மாமா வீட்டுக்கா?" என்று முன்னே வந்தான் லோகநாதன்.

"டேய், இவன் நாய் மாமாகிட்ட நல்லா மாட்டிக்கிட்டான். நாய் மாமா தன் கிட்ட இருக்கற ஒரு சொர்ணரேகாவை இவனுக்குக் கட்டி வச்சிடப் போறார்."

கீர்த்திவாசன் திரும்பி சுந்தரத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு முன்னே காலெடுத்து வைத்தான்.

"கீர்த்தி, மறந்து போயிடுச்சா. இது மயிலு வர்ற நேரம்."

"ஆமாண்டா, மயிலு இன்னைக்கி சால்வார் கம்மீஸ் மாட்டிக்கிட்டு ஜெகஜெகன்னு வந்திருக்கு" என்று சொல்லிவிட்டு மதில் மீது தாவி ஏறி உட்கார்ந்து கொண்டான் லோகநாதன்.

"கீர்த்தி, திங்கக்கிழம நீ இல்ல. மயிலு சுத்திச் சுத்திப் பார்த்துட்டுப் போச்சி ... டேய், நிஜமா மயிலு உன்னத்தான்டா சையிட் அடிக்குது"– சுந்தரம் மதில் மேல் இருந்து இறங்கி வந்து இவன் தோள் மீது கை வைத்தான்.

இவன் பார்வை சிவப்பாய் பூத்துக் குலுங்கும் குல்மோகர் மரத்தைத் தாண்டி பெண்கள் மேல்நிலைப் பள்ளிப் பக்கம் சென்றது. மயில் என்று இவர்கள் பெயர் சூட்டியிருக்கும் சித்ரா மீது இவனுக்கு ஒரு கண் தான். ஆனால் அவளோ இவனைப் பார்த்ததும் பயந்தது மாதிரி தலையைக் கவிழ்த்துக் கொண்டு ஓடிப் போய்விடுகிறாள்.

ஒரு நாள் மயில் தன்னந்தனியாக மாட்டிக் கொண்டாள். இவன் அவள் பின்னாலேயே நடந்தான்.



☐ சா. கந்தசாமி

இரண்டு தெருக்கள் இவனைப் பார்க்காதது மாதிரி சென்றவள், திடீரென்று நின்று ஒரு சிரிப்புச் சிரித்தாள். சந்தோஷத்தில் இவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்படியே நின்று கொண்டிருந்தான். சாலையில் இரண்டு மூன்று பஸ்கள் சென்றன. அப்புறம் திடீரென்று சாலை வெறுமை ஆனது. மயிலைக் காணோம். பஸ் ஏறிப் போய்விட்டாள் போலும் என்றபடி மெது மெதுவாக நடந்தான்.

கடற்கரை வந்தது. நிழல் பரப்பிக் கொண்டு இருந்த ஒரு பூவரசு மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்து நோட்டுப் புத்தகத்தை எடுத்து எழுத ஆரம்பித்தான். எழுத எழுத வார்த்தைகள் சரசரவென்று வந்து கொண்டே இருந்தன. எழுத எழுத நெஞ்சுக்குள் மயில் டக்டக்கென்று நடப்பது மாதிரியும், தலையாசைத்துச் சிரிப்பது மாதிரியும் இருந்தது.

கீர்த்திவாசன் ஒன்றும் பெரிய படிப்பாளி இல்லை. தட்டுத் தடுமாறித்தான பள்ளிக்கூடப் படிப்பை முடித்தான். அவன் வாங்கிய மார்க்கைப் பார்த்ததுமே அம்மா கலங்கிப் போய்விட்டாள். அன்றிரவு முழுவதும் அவளுக்குத் தூக்கமே வரவே இல்லை. புரண்டு புரண்டு படுத்தாள். கொஞ்ச நேரத்திற்கு அப்புறம் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். மனத்தில் என்னென்னவோ யோசனைகள் எல்லாம் உதித்துக் கொண்டிருந்தன. விடியும் நேரத்தில் அவளுக்குத் திடீரென்று வக்கீல் மாமா நினைவுக்கு வந்தார்.

வக்கீல் மாமா நாராயணசாமி முதலியார் அவன் வீட்டிற்கு நான்காவது வீடு. அந்தத் தெருவிலேயே அது தான் பெரிய வீடு. வீட்டின் முன்னே இரண்டு வேப்ப மரங்கள். காம்பௌண்டைச் சுற்றி உயர உயரமான தென்னை மரங்கள். மாமா ஐந்தாறு வருஷத்திற்கு முன்னாலேயே கோர்ட்டிற்குப் போவதை விட்டு விட்டார். ஆனால் அவரிடம் யோசனை கேட்க வக்கீல்கள் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

வக்கீல் மாமா வீட்டில் ஏழெட்டு நாய்கள், இரண்டு கறவைப் பசு, ஒரு சமையல்காரன், இரண்டு தோட்டக்காரர்கள், ஒரு காவல்காரன், ஒரு கார் – எல்லாம் உண்டு. ஆனால் அவர் வீட்டு நாய்கள்தான் பிரசித்தி. உயரமான, குட்டையான, குண்டான, கருப்பான, வெளுப்பான என்று வித்தியாசமான நாய்கள். வித்தியாசமான நாய்களில் வித்தியாசமே இல்லாதது, எல்லாம் பொட்டை நாய்கள் என்பதுதான். எப்பொழுது பார்த்தாலும் ஒரு நாய் இரண்டு மூன்று குட்டிகளோடு அலைந்து கொண்டே இருக்கும்.

மாமா தன் வீட்டு நாய்களுக்கெல்லாம் சொர்ணமோகினி, சொர்ணசுந்தரி, சொர்ணகலா, சொர்ணரேகா, சொர்ணலதா, சொர்ணசொரூபி என்று பெயர் வைத்திருந்தார். காலைப் பொழுதில் மாமா தனது சொர்ண சுந்தரிகளோடு வெள்ளை பனியனும் கருப்புப் பேண்ட்டும் போட்டுக் கொண்டு வேக வேகமாக நடந்து செல்லுவார். குளிர், மழை, வெயில் என்று ஒன்றையும் பார்க்க மாட்டார். காலை ஆறு மணிக்கு ஆரம்பித்து ஏழரை மணிக்குள் இரண்டு தெருக்களைச் சுற்றி வந்துவிடுவார். அந்த நடை நாய்களுக்கா இல்லை மாமாவுக்கா என்று சந்தேகப்பட்டவர்கள் கூட உண்டு.

புதிதாக பத்மநாபபுரத்திற்குக் குடிவந்த ஜானகி அம்மாள் காலைப் பொழுதில் நாய்களோடு நடந்து போகும் மாமாவைப் பார்த்து பயந்து போய்விட்டாள். இரண்டு நாட்கள் கழித்து இவன் அம்மாவிடம், "யார் மாமி அது? எமதர்மன் மாதிரி விடியக் காலத்திலே இருபது முப்பது நாய இழுத்துக்கிட்டு திரியறது" என்று கேட்டாள்.

"அப்படிச் சொல்லாதீங்கோ மாமி. இவர் பெரிய லாயர். இந்திராகாந்திக்கு எல்லாம் அட்வைஸரா இருந்தவர். இந்தப் பகுதியே அவா தாத்தா பெயரில தான் பத்மநாபபுரமென்று இருக்கு. நம்ப தெருவில வக்கீல் மாமா இருக்கறது நமக்கெல்லாம் பெருமை மாமி." என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு கீர்த்திவாசன் அம்மா சொன்னாள்.



'யார் அம்மா, நம்ப நாய் மாமாவா?" என்று கீர்த்தி முன்னே வந்து நின்றான்.

"போடா தடியா." அம்மா அவனை அடிக்க கையை மேலே தூக்கினாள். அவன் குனிந்து பின்னால் ஓடினான்.

"பார்த்தா பெரிய மனுஷன் மாதிரிதான் தெரியுது. ஆமாம் மாமா பெயரு என்ன சொன்ன."

"நாராயணசாமி முதலியார்."

"மெட்ராஸ் முதலியா? பொண்டாட்டி புள்ள ஒண்ணும் இல்ல."

"மூணு வருஷத்திற்கு முன்னால தான் மாமி தவறிப் போயிட்டா. ரெண்டு பையன்கள். அமெரிக்காவில் இருக்கா. பொண்ணு ஆஸ்திரேலியாவில"

"இவ்வளவு ஜனம் இருந்துமா கிழம் தனியா இருக்கு. ஏன் – யாரும் கூட்டிக்கிட்டு போக மாட்டேன்னுட்டாங்களா?"

"இல்ல மாமி ... மாமாதான் போக மாட்டேன்னுட்டார்."

"ஏன்? எதுக்காம்?"

"பொறந்து வளர்ந்த ஊர விட்டுட்டு கடைசி காலத்தில புத்தி உள்ள மனுஷன் வேற நாட்டுக்குப் போவானானுட்டார் மாமி!"

"ஏன் சரோஜா? மனுஷன் என்ன கொஞ்சம் கிறுக்கா?"

"மாமி, மாமா காதுல விழுந்தா, நாய விட்டுத் தான் உங்களக்கடிக்க விடுவார்" என்றபடி அவசர அவசரமாக உள்ளே சென்றாள்.

ஏழு ஆண்டுகளாக சரோஜா பத்மநாபபுரத்தில் குடியிருந்து வருகிறாள். வக்கீல் மாமாவைப் பற்றி இப்படியொருத்தி சொல்லி அவள் கேட்டதே இல்லை. வக்கீல் மாமா என்றால் எல்லோருக்கும் பயம் கலந்த ஒரு மரியாதை. எதிரே அவரைப் பார்க்க நேர்ந்த போது கூட தலை குனிந்தபடி வேக வேகமாகப் போய் விடுவார்கள். அவசியம் என்று வீட்டிற்குப் போனால் மாமா தன்னால் ஆனது என்றுதான் இல்லை – ஆகாது என்று சொல்லாமல் செய்து எதையும் முடித்து விடுவார் என்று சொல்லிக் கொள்வார்கள்.

அவள் வக்கீல் மாமாவைத் தேடிக் கொண்டு இரண்டு முறை சென்றாள். முதல் முறை அவள் கணவன் சங்கரநாராயணன் ஞாயிற்றுக்கிழமை நாடக ஒத்திகை பார்த்துவிட்டு ஸ்கூட்டரில் வரும்போது, அண்ணா சாலையில் பஸ்ஸில் அடிபட்டு போய்விட்டான். டி.வி.யில் தமிழ்ச் செய்தி கேட்டுக் கொண்டு இருக்கும்போது ராயப்பேட்டை மருத்துவமனையில் பாடி இருக்கிறது என்று ஒரு போலீஸ்காரன் வந்து சொன்னான். ஒரு நிமிஷம் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. பூமியே காலுக்குக் கீழே இறங்குவது மாதிரி இருந்தது.

கீர்த்திவாசன் கையைப் பிடித்துக் கொண்டு சப்தமே இல்லாமல் அழுதாள். கொஞ்ச நேரத்தில் செய்தி தெரு முழுவதும் பரவி விட்டது. ஒவ்வொருவராக துக்கம் விசாரிக்க வந்து கொண்டே இருந்தார்கள்.

எதிர்வீட்டு சுந்தரமூர்த்தி அவள் பக்கமாக வந்து, "பாடிய எடுத்தாற என்னம்மா ஏற்பாடு பண்ணியிருக்க?" என்று மெதுவாக விசாரித்தார்.

" .... ... ..."

"போலீஸ் கேஸ். நம்ப சார் வேற குடிச்சிட்டு இருந்து இருக்கார். அதெ சொல்லியே நாலு பக்கமும் பணம் புடுங்கப் பார்ப்பாங்க ..... யாராவது போலீஸுக்கு தெரிஞ்ச ஆளு இருந்தா காரியம் சுலபமா நடக்கும்".

".... போலீஸில நமக்கு யாரைத் தெரியும்" அம்மா முந்தானையை எடுத்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"அம்மா, நம்ப வக்கீல் மாமாவுக்கு போலீஸில ஏகப்பட்ட செல்வாக்கு ... மாமா ஒரு வார்த்தைச் சொன்னா போதும் ..."

" .... ... ..."

"நமக்கும் மாமாவுக்கும் நாய் விஷயத்தால ஒரு சின்ன தகராறு ... ரெண்டு வருஷமா பேச்சு வார்த்தை இல்லை ...."



அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"நீங்கள் மாமாகிட்டப் போனா, காரியம் செத்த நேரத்தில முடிஞ்சிடும்"

அம்மா கீர்த்திவாசன் கையைப் பிடித்துக்கொண்டு நாராயணசாமி முதலியார் வீட்டிற்குச் சென்றாள். இவர்களைப் பார்த்ததும் நாய்கள் வொள் வொள் என்று குரைத்தன. அம்மா பயந்து போய் நின்றாள். அவன் முன்னே ஓரடி எடுத்து வைத்தான். எட்டி அம்மா அவன் கையைப் பிடித்தாள்.

நாய்களுக்கு மத்தியில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி படித்துக் கொண்டிருந்த மாமா எழுந்து வந்தார். குரைத்த நாய்களை அதட்டி அமைதிப்படுத்தினார்.

"... எல்லாம் கேள்விப்பட்டேம்மா."

அம்மாவுக்குத் தன் துயரத்தைத் தாள முடியவில்லை. முந்தானையை எடுத்து முகத்தை மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

மாமா ஓரடி முன்னே வந்து கீர்த்தி கையைப் பிடித்து இழுத்து தன்னோடு அணைத்தபடி, "அழாதேம்மா ... நீ இந்த வயசில ரொம்ப கஷ்டப்பட்டுட்ட... பகவான் எதுக்குத்தான் இப்படி உன்ன சோதிக்கிறானோ தெரியல" என்றார்.

அவள் ஒன்றும் பதில் சொல்ல முடியாதவளாக சுவரோடு சுவராகச் சாய்ந்து கொண்டாள்.


"பாடி ஆஸ்பத்திரியிலதானே இருக்கு?"


" ... ... ..."

"ஆஸ்பத்திரியில இருந்து நேரா பரியல் கிரெவுண்ட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போறீங்களா? இல்ல வீட்டுக்கு வருதா?"

"... வீட்டுக்கு வந்துட்டுப் போகட்டும்'.

"சரி ... அதுதான் சரி, காலையில் பாடி வந்துடும் ...





அந்த வேலையை எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... அப்புறம் யாருக்கெல்லாம் தகவல் சொல்லணும்... போன் இருக்கு... இந்த போனிலேயே சொல்லிடலாம்".

கீர்த்தி அம்மாவையும் மாமாவையும் மாறி மாறிப் பார்த்தபடி இருந்தான்.

'இரு' என்பது மாதிரி மாமா கையைக் காட்டிவிட்டு உள்ளே சென்றார். அம்மா கண்களைத் துடைத்துக் கொண்டாள். படுத்துக்கிடந்த சொர்ணரேகா என்ற பெரிய நாய் எழுந்து முன்னே வந்தது.

"சொர்ணா" என்று நாயின் தலையில் ஒரு தட்டுத் தட்டி பின்னால் அனுப்பிவிட்டு கீர்த்தியிடம் ஒரு சின்ன பையைக் கொடுத்தார். அவன் தடவிப் பார்த்தான்.

"அவசர செலவு இருக்கும். அதுக்கு இருக்கட்டும் அம்மா."

"இல்ல மாமா ....அவர் தன் கடைசி செலவுக்குன்னு கொஞ்சம் பணம் வச்சிட்டுப் போயிருக்கார்."

"இருக்கட்டும்... இருக்கட்டும் அம்மா."

இரண்டு நாய்கள் குரைத்துக் கொண்டு வந்தன. மாமா அவற்றை அடக்கி இழுத்துக் கொண்டு பின்னால் சென்றார்.

கீர்த்திவாசனுக்கு ஒரு கல்லூரியிலும் அட்மிஷன் கார்டு வராமல் போகவே அம்மாவுக்கு மறுபடியும் பயம் பிடித்துக் கொண்டுவிட்டது. அவள் வாழ்க்கையின் நம்பிக்கையே அவன்தான். சவூதி அரேபியாவில் சிவில் எஞ்சினியராக இருக்கும் அவள் தம்பி பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். ஒவ்வொரு கடிதத்திலும், கீர்த்தியை சிவில் எஞ்சினியராகவோ – பி.காமாகவோ அனுப்பி வை அக்கா. மற்றதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று எழுதிக் கொண்டே இருந்தான். அவள் தம்பியின் கடிதத்தை எடுத்து இவனிடம் கொடுத்தாள்.

"அதெல்லாம் அவரையே படிக்கச் சொல்லும்மா. நம்ப படிப்பெல்லாம் வேற" – என்று சொல்லிவிட்டு தலையை ஒரு சிலுப்பு சிலுப்பிக் கொண்டு போய் விட்டான்.

அவள் இரவு முழுவதும் யோசித்தாள். மனத்தில் இனந்தெரியாத கலவரமும் பயமும் மூண்டுவிட்டது. அவளால் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து உட்கார்ந்து கொண்டாள். பரண் மீது எலி உருட்டுவது மாதிரி இருந்தது. விளக்கைப் போட்டாள். கீர்த்தி கால்களை நீட்டி மல்லாக்கப் படுத்துக் குறட்டை விட்டுக் கொண்டு, இருந்தான். விளக்கைப் போட்டதும் புரண்டு படுத்தான். அவன் தூக்கம் கலைந்து விடுமோ என்ற பயத்தோடு அவசர அவசரமாக எழுந்து விளக்கை அணைத்துவிட்டு சுவரொடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

கூர்க்கா தரையில் தடியால் தட்டிக் கொண்டு சென்றான். வேப்ப மரத்தில் இருந்து பறவைகள் கூட்டமாகக் கத்திக் கொண்டு பறந்தன. பால் வண்டி சென்றது. அவள் எழுந்து குளித்துவிட்டு ரேடியோவில் சுப்ரபாதம் கேட்டுக் கொண்டு இருந்தாள்.

எட்டு மணிக்கு அவன் படுக்கையில் இருந்து எழுந்தான். அம்மாவைப் பார்த்ததும் அவனுக்குப் பயம் வந்துவிட்டது.

"என்னம்மா, ராத்திரி எல்லாம் தூங்கவே இல்லையா?" என்று கேட்டான்.

"வக்கீல் மாமா, உங்கிட்ட என்னமோ பேசணுமாம். கூட்டிக்கிட்டு வரச்சொன்னார்."

"நாய் மாமாவா, அம்மா."

"உம்."

"எதுக்கு அம்மா?"

"என்னக் கேட்டா."

அவன் அவசர அவசரமாகக் குளித்துவிட்டு ஒரு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வந்தான். இரண்டு பேரும் வக்கீல் மாமா வீட்டிற்குச் சென்றார்கள். நாய்களோடு கொஞ்சிக் கொண்டிருந்த மாமா இவர்களை உட்காரச் சொன்னார். அவள் கீர்த்திக்குப் பின்னால் வந்து நின்று திரிந்து கொண்டிருக்கும் நாய்களைப் பார்த்தபடி இருந்தாள்.

வக்கீல் மாமா ஒரு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "கீர்த்தி எந்தெந்த காலேஜ்க்கு அப்ளிகேஷன் போட்டிருக்க?" என்றார்.

"தேவராஜ் காலேஜிலே இங்கிலிஷ் லிட்."

"அப்புறம்..."

"செயின்ட் ஜார்ஜில பாட்டனி."

"சரி".

"கருப்பண்ணன் செட்டி கல்லூரியில ஹிஸ்டரி."

"சரித்திரமா?"

"... ... ..."

"கீர்த்தி படிச்சி மேல வந்துதான் குடும்பத்தைக் கரையேற்றணும்."

"நீ ஒண்ணும் கவலப் படாதேம்மா. நம்ப கீர்த்தி படிச்சி பெரிய ஆளா வந்துடப் போறான்."

அம்மா ஆச்சரியத்தோடும் இனங்கண்டு கொள்ள முடியாத ஆனந்தத்தோடும் மாமாவைப் பார்த்தபடி இருந்தாள்.

"காலேஜுக்கு அப்ளிகேஷன் போட்டு இருக்கற விவரத்தை எல்லாம் இங்க கொடு."

கீர்த்தி சட்டைப் பையில் மடித்து வைத்திருந்த பேப்பரை எடுத்து மாமாவிடம் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு, "சரி... நான் இன்னம பார்த்துக்கறேம்மா... நீ ஒண்ணுக்கும் கவலப்பட வேண்டாம்" என்றார்.

"மாமா, நான் உங்களத்தான் மலை போல நம்பி இருக்கேன் மாமா" என்று கரம் கூப்பினாள்.

"மலை மேல் இருக்கற ஏழுமலையான வேண்டிக்க அம்மா. அவர்தான் நம்ப எல்லோருக்கும் மேல... ஆனா ஒண்ணு... அவர் ரொம்ப வருஷத்துக்கு யாரையும் கஷ்டப்பட விடுறது இல்ல."

அவன் மெதுவாக தலையசைத்தபடி கீர்த்தி கையைப் பிடித்துக் கொண்டு மாமா வீட்டை விட்டு வெளியில் வந்தாள்.

கீர்த்திவாசன் கருப்பண்ணஞ் செட்டியார் கல்லூரியில் சேர்ந்து மூன்று மாதங்கள் சென்று விட்டன. அவன் கிராப்பை மாற்றிக் கொண்டு விட்டான். பேண்ட் ஜீன்ஸாக மாறிவிட்டது. மயிலைப் பிடிக்க நான்கு மணிக்கெல்லாம் மதில் மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். மயில் வலையில் விழுந்துவிட்டது என்று தான் சிநேகிதர்கள் சொன்னார்கள். ஆனால் அவளோ தலை குனிந்தபடி தான் போய்க் கொண்டு இருந்தாள்.

ஒரு நாள் வக்கீல் மாமா வரச் சொன்னதாக அம்மா சொன்னாள். இரண்டு நாட்கள் கழித்து காலைப் பொழுதில் சென்றான். மாமா முகச்சவரம் செய்து கொண்டிருந்தார். இரண்டு நாய்கள் இப்படியும் அப்படியுமாகத் திரிந்து கொண்டிருந்தன. கையைக் கட்டிக் கொண்டு தலையை நீட்டிப் பார்த்தான். பெரிய நாய் இவனைப் பார்த்து லொள் லொள் என்று குரைத்தது பயந்து போய் ஹாலுக்குள் சென்றான். ஹாலில் வரிசையாகக் கண்ணாடி வைத்த அலமாரிகள். ஒவ்வொரு அலமாரியிலும் தடித் தடியானப்



புத்தகங்கள். ஒவ்வொரு புத்தகத்தின் முதுகிலும் கொட்டை கொட்டையாகப் பெயர். குனிந்து படித்துப் பார்த்தான். சட்டம், சரித்திரம், பூகோளம், அரசியல், நாவல், கவிதை- படித்துக் கொண்டே ஒவ்வொரு அடியாகக் காலெடுத்து வைத்து முன்னே சென்றான். நாற்காலி நகர்த்தும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

"புஸ்தகம் பார்க்கிரியா பாரு... இங்க இருக்கற புஸ்தகத்தில பாதிக்கு மேல தாத்தா வாங்கினது... கொஞ்சம் அப்பா... ஒரு ஆயிரம் போலத்தான் நம்ப வாங்கினது" என்றபடி நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தார் வக்கீல் மாமா.

"பெரிய லைபரரி மாதிரியே இருக்கு மாமா ..."

"பார்க்கிறவங்க எல்லாம் இப்படித்தான் சொல்லுறாங்க ... நீ இப்படி உட்காரு" – மாமா தனக்கு நேர் எதிராக இருந்த நாற்காலியைக் காட்டினார்.

கீர்த்தி அமர்ந்தான். காபி வந்தது. மாமா தலையசைத்தார். தயங்கியபடியே வாங்கி ஒரு மிடறு குடித்தான். கமகமவென்று காபி மணத்தது. கண்களை மூடியபடி இன்னொரு மிடறு குடித்தான். காபியின் சுவையில் மனம் நிறைந்து போனது.

"கீர்த்தி, நம்ப கண் டாக்டர் ஒரு ஆறு மாசத்துக்கு ஒண்ணுமே படிக்கக் கூடாதுன்னுட்டார். புஸ்தகம் படிக்காம இருக்கறது ஒரு வாழ்க்கையா? அதுக்கு என்ன பண்ணலாம்னு யோசிச்சிப் பார்த்தேன் ... அப்பத்தான் உன் நினைப்பு வந்துச்சி..."

அவன் வக்கீல் மாமா முகத்தையே பார்த்தபடி இருந்தான். ஒரு சின்ன கருப்பு நாய் மாமா காலடியில் வந்து குந்தி இவனை நிமிர்ந்து பார்த்தது.

"வாரத்திலே மூணு நாள் ... திங்கள், புதன், வெள்ளி காலேஜ் விட்டதும் நேரா இங்க வர்ற... கைகால் அலம்பிட்டு ஒரு காபி சாப்பிட்டு விட்டு ஒரு புஸ்தகத்தை எடுத்து ஒரு பத்துப் பதினைந்து பக்கம் படிக்கற..."

கீர்த்தி அவர் முகத்தையே பார்த்தபடி இருந்தான்.

"புஸ்தகம் படிக்க நான். நீன்னு நிறைய பேரு வந்தாங்க ... எனக்கு அந்தக் குரல் எல்லாம் பிடிக்கல.... உன் குரல்ல ஒரு அழகு இருக்கு... அதான்."

அவன் சந்தோஷமாகத் தலையசைத்தான். மாலையில் சிநேகிதர்களைச் சந்தித்த போது மாமா வீட்டில் புஸ்தகம் படிக்கப் போகிற விஷயத்தைச் சொன்னான்.

"டேய் மாமாகிட்ட மாட்டிக்கிட்ட இல்ல. அவ்வளவுதான் ... உன் கழுத்தில ஒரு சங்கிலிய கட்டி பத்தோடு பதினொன்னா உன்னையும் ரோட்டுல இழுத்துக்கிட்டுப் போகப் போறார்..."

"ஐயோ... பாவண்டா."

"யாரு?"

"யாரு? எல்லாம் நாய் மாமா கிட்டமாட்டிக் கிட்ட நீதான்."

"போங்கடா" – அவன் கையை வீசிக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

அம்மா விளக்கேற்றி வைத்துவிட்டு ஐயப்பன் படத்தின் முன்னே விழுந்து கும்பிட்டுக் கொண்டு இருந்தாள். அவன் நின்று ஒரு பார்வை பார்த்துவிட்டு சப்தம் இல்லாமல் உள்ளே சென்றான்.

திங்கள்கிழமை, அவன் தயங்கியபடி வக்கீல் மாமா வீட்டிற்குள் சென்றான். சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்த மாமா, "வா... வா..." என்று தலையசைத்து வரவேற்றார். அவருக்குப் பின்னால் நின்று கொண்டு இருந்த மூன்று நாய்கள் ஒரே குரலில் குரைத்தன. கையை முன்னே நீட்டி, நாய்களை அடக்கி விட்டு அவனை உட்காரச் சொல்லி நாற்காலியைக் காட்டினார்.

காபி வந்தது. தயங்கியபடியே வாங்கிக் குடித்தான். ஒரு பெரிய நாய் மெது மெதுவாக இவன் பக்கமாக வந்தது.

"சொப்பனா" என்று மாமா நாயை அதட்டினார். அது நின்று நிமிர்ந்து பார்த்தது " உள்ள போ... உம்..." கையைப் பின்னால் நீட்டினார். அது பின்னால் சென்று சுவரோடு சுவராக ஒட்டிப் படுத்துக் கொண்டது. மாமாவையும் சொப்னாவையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தான்.

"கீர்த்தி, நீ நாய்களைப் பற்றி படிச்சி இருக்க?"

அவன் நின்று கொண்டும் படுத்துக் கொண்டும், இருக்கும் நாய்களையே பார்த்தபடி இருந்தான்.

".... அறுபது எழுபது வருஷத்துக்கு முன்னால அமெரிக்காவில ஒரு எழுத்தாளன் நாயை முன்னால வச்சி ஒரு நாவல் எழுதியிருக்கான். அவனுக்கு அமெரிக்காவை விட அந்தக் காலத்து சோவியத்தில நல்ல பேரு... மகா புத்திசாலி... ஆனா வாழ்க்கை ஒன்னும் சரியா இல்ல... ரொம்ப கஷ்டம் நஷ்டம் ... ஆனா எழுத்தில அதெல்லாம் இல்ல... ரொம்ப ஜோரா ஜொலிச்சிக்கிட்டு இருந்தான்... இன்னி வரைக்கும் அந்த ஜொலிப்பு அடங்கவே இல்ல... அதுதான் அவன் மகத்துவம்..."

ஒரு பழுப்பு நிற நாய் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு இவனுக்கு நேர் எதிராக கால்களை முன்னே நீட்டிக் கொண்டு உட்கார்ந்தது.

"கதை, ரொம்பச் சின்னக் கதை. ஒரு சீமான் வீட்டல ஒரு நாய் ரொம்ப சொகுசா இருந்துக்கிட்டு, இருக்கு. அதை ஒரு வேலைக்காரன் திருடி விற்று விடுகிறான். அது தங்கம் எடுக்க வடதுருவத்த நோக்கி நாய் வண்டி கட்டிக்கொண்டு நூற்றுக் கணக்கில் ஆட்கள் போய்க் கொண்டிருந்த காலம். சீமான் வீட்டு நாய் தங்கம் எடுக்கப் போற ஒரு வண்டியில கட்டி விடுறாங்க... பாவம் அதுக்குப் பழக்கம் இல்ல... ஓடவும் தெரியாம... வண்டி இழுக்கவும் தெரியாம ரொம்பக் கஷ்டப்படுது..."

அவன் மேல் சட்டையை இழுத்து விட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"வண்டியில கூட கட்டியிருந்த மற்ற நாய்கள் எல்லாம் சீமான் வீட்டு நாயைக் கடிக்க ஆரம்பித்து விட்டன. வண்டி ஓடலியேன்னு வண்டிக்காரன் சாட்டையை எடுத்து விளாச ஆரம்பிச்சிட்டான்... பாவம் சொகுசா இருந்த நாய்க்கு இப்பத்தான் உலகம் தெரிகிறது. அந்த மாற்றத்தை – இது புரிந்து கொள்வதை ஒரு ஞானி அறிந்து கொள்வது மாதிரியான ஒரு தொனியில் சொல்லி இருக்கிறான்..." வக்கீல் மாமா நெகிழ்ந்து குரல் உடைய சொன்னார்.

அவர் முகத்தையே பார்த்தபடி இருந்தான். மாமா பின்னால் தன் நாய்களை ஒரு முறை பார்த்துக் கொண்டார். படுத்துக்கிடந்த ஒரு புள்ளி நாய் எழுந்து உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு முன்னே வந்தது. மணி ஐந்து அடித்தது. மாமா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"கீர்த்தி ... நீ புதன்கிழமை வர்ற... அன்னிக்கி நான் ஒண்ணும் பேசல... நீ தான் படிக்கற...."

அவன் தலையசைத்துக் கொண்டு எழுந்தான். இரண்டு நாய்கள் வாலை அசைத்தபடி இவன் பக்கமாக வந்தன.

மறுபடியும் அவன் மாமா வீட்டிற்குச் சென்ற போது மேசை மீது ஐந்தாறு புத்தகங்கள் இருந்தன. ஏதாவது ஒன்றை எடுத்துப் படி என்பது மாதிரி கையைக் காட்டிவிட்டு மாமா கண்களை மூடிக்கொண்டு விட்டார். அவன் ஒரு சரித்திரப் புத்தகத்தை எடுத்தான். பக்கங்களைத் தள்ளிக்கொண்டே மாமாவைப் பார்த்தான். கண்களை மூடியபடி கேட்கத் தயாராகிக் கொண்டு இருந்தார். நடுவில் இருந்து அவன் படிக்க ஆரம்பித்தான். குரைத்துக் கொண்டிருந்த நாய்கள் வாயை மூடிக் கொண்டன. தலையை மெல்லமெல்ல அசைத்து மாமா அவன் படிப்பதை சந்தோஷமாக செவிமடுத்துக் கொண்டிருந்தார்.

நாட்கள் ஆக ஆக படிப்பதில் அவனுக்கே ஒரு விதமான சந்தோஷம் இருப்பது மாதிரி இருந்தது. அப்புறம் படிப்பதைக் கேட்கும் வக்கீல் மாமா, பரவசத்தோடு ஒரு சின்னப் பையன் மாதிரி ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்தார். இடையிடையே நிறுத்தி, "நல்லா படிக்கற... குரல் ரொம்ப வளமா இருக்கு" என்று பாராட்டிக் கொண்டு வந்தார். அவர் பாராட்டு மேலும் மேலும் அவனை ஆட்கொண்டது. சிநேகிதர்கள், மயில் – எல்லாவற்றையும் விட படிப்பை அவன் முக்கியமாக எடுத்துக் கொண்டான். அதிலும் சரித்திரம்; சரித்திர புத்தகமாகவே எடுத்து எடுத்துப் படித்தான். கல்லூரியில் பேராசிரியர் சொன்ன புத்தகங்களுக்கு மேலாக மாமாவிடம் புத்தகங்கள் இருந்தது அவனை ஆச்சரியமடைய வைத்தது. தன்னை அடக்க மாட்டாதவனாக, "மாமா எங்க நூலகத்தில கூட ஆனந்த குமாரசுவாமி புஸ்தகமெல்லாம் இல்ல மாமா!" என்றான்.

அவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். சந்தோஷத்தில் முகம் மலர்ந்தது.

"எல்லாம் எங்க தாத்தா வாங்கினது... கொஞ்சம் அப்பா வாங்கிச் சேர்த்தது. நம்ப பண்ணி இருக்கற காரியம் என்ன தெரியுமா?"

அவன் பதிலொன்றும் சொல்லாமல் மாமா முகத்தையே பார்த்தபடி இருந்தான்.

"அப்பா, தாத்தா வச்சிட்டுப்போயிருக்கிற புஸ்தகத்தை எல்லாம் விற்காம வச்சியிருக்கறது தான். உம்... நீ... படி..." அவர் ஆனந்தகுமாரசுவாமி புஸ்தகத்தை எடுத்துப் படிக்கச் சொன்னார்.

சிவதாண்டவத்தைப் படிக்கிற போது அவனுக்குச் சில இடங்களில் புரிவது போலவும் பல இடங்களில் புரியாதது போலவும், இருந்தது. ஆனாலும் படித்துக் கொண்டே போனான். மூன்று பக்கங்கள் முடிந்தன.

"போதும்... இது போதும்" என்றார் மாமா.

அவன் படிப்பதை நிறுத்தி விட்டு மாமாவை நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன?"

"நான் வீட்டுக்குப் புஸ்தகத்தை எடுத்துக்கிட்டுப் போய் கொஞ்சம் படிச்சிப்பாக்கறேன் மாமா."

"நீ நாளைக்கு வா... நம்ப ரெண்டு பேரும் முதல்ல இருந்து படிக்கலாம்."

அவன் புஸ்தகத்தை, எடுத்த அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டு சாவியை மாமாவிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்தான். டி.வி.பார்த்துக் கொண்டிருந்த அம்மாவுக்கு அவன் வருகை ஆச்சரியமாக இருந்தது. சாதாரணமாக அவன் பத்துப் பத்தரை மணிக்குத் தான் வீட்டிற்கு வருவான். வந்தாலும் சாப்பிட உட்கார்மாட்டான். டி.வி.பார்ப்பான். சாப்பிடக் கூப்பிட்டு கூப்பிட்டு அம்மா சோர்ந்து போய் உட்கார்ந்தபடியே தூங்கிப் போய் விடுவாள்.

சினிமா பார்த்துப் பார்த்து அப்பா மாதிரி ஆகிவிடுவானோ என்று ஒரோர் சமயம் அம்மாவுக்குப் பயம் வந்துவிடும். அந்தப்பயம் வந்துவிட்டால் கை காலெல்லாம் நடுங்க ஆரம்பித்துவிடும். நடுக்கத்தோடு மாங்காடு, திருவேற்காடு, திருமுல்லைவாயில் – என்று கோவில் கோவிலாகக் கிளம்பிப் போய்விடுவாள்.

"அம்மா, இந்த நாய் மாமா சுத்த மோசம் அம்மா" என்றபடி நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அம்மா பக்கத்தில் உட்கார்ந்தான்.

"ஏன்? எதுக்கு?"

"பின்ன என்னம்மா... படிக்க ஒரு புஸ்தகம் கேட்டா கொடுக்க மாட்டேங்கறார்."

"கொடுப்பார், எல்லாம் கொடுப்பார்."

"ஒரு நாளைக்கு புஸ்தகத்தை எல்லாம் சுட்டுக்கிட்டு வந்துடப் போறேன்."

"அது என்ன சுடுறது."

"அதுவா அம்மா, திருட்டு."


"அடப்பாவி, அப்படி எல்லாம் ஒண்ணும் பண்ணிடாதே" – அம்மா எட்டி அவன் கையைப் பிடித்தாள், அவன் தலையசைத்தான்.

திங்கள்கிழமை அவன் வக்கீல் மாமா வீட்டிற்குச் சென்ற போது அவர் ஊஞ்சலில் மெதுவாக ஆடிக் கொண்டிருந்தார். சுற்றிலும் சொர்ணரேகா, சொர்ணதாரா, சொர்ணசுந்தரி, சொர்ணலதா, இவனைப் பார்த்து சந்தோஷமாக தலையசைத்து வாலை ஆட்டின. மாமா கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தார். மணி நான்கு அடித்தது.

"நான் உன் வயசில இந்த மாதிரி ஒழுங்கா ஒரு காரியமும் செய்ததில்லை" என்றார் மாமா. பதிலொன்றும் சொல்லாமல் எதிர் நாற்காலியில் உட்கார்ந்தான். மாமா இடுப்பில் சொருகி இருந்த சாவிக்கொத்தை எடுத்து அவனிடம் நீட்டினார். சாவிக் கொத்தை வாங்கிக் கொண்டு புஸ்தகம் எடுத்து வரச்சென்றான்.

வக்கீல் மாமா எழுந்து போய் நாய்களை பின்னால் கட்டிவிட்டு வந்து ஊஞ்சலில் உட்கார்ந்து மெல்ல அசைத்தார். சங்கிலி கிரீச்சிட ஊஞ்சல் அசைந்தாடிக்

கொண்டிருந்தது. அவன் கையில் ஒரு புத்தகத்தோடு வந்து நாற்காலியில் உட்கார்ந்து நிமிர்ந்து பார்த்தான். 'படி' என்பது போல மாமா தலையசைத்தார். இரண்டு



பக்கங்களைத் தள்ளினான். பார்வை ஓரிடத்தில் நிலைகொண்டது.

அவன் படிக்க ஆரம்பித்தான்.

"நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள். ஒரு பொழுதும் உன்னை பலவீனன் என்று சொல்லாதே., எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் இரண்டு தோள்கள் மீது சுமந்து கொள். உன் விதியைத் தீர்மானிப்பவன் நீயே என்று அறிந்து கொள். உனக்குத் தேவையான வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன.'

படிக்கப் படிக்கச் சந்தோஷம் கூடிக்கொண்டு போவது மாதிரி இருந்தது. அவன் குரலை உயர்த்தி படித்துக் கொண்டே போனான். பின்னால் இருந்து குட்டிகளோடு சொர்ணசுந்தரி முன்னால் வந்தது. அவன் ஒரு பக்கத்தைத் தள்ளிவிட்டு விட்டு மாமாவைப் பார்த்தான். அவர் கண்கள் மூடியிருந்தன.

"மாமா"

"... ..."

"மாமா"

அவன் புத்தகத்தை மூடினான். மாமா திடீரென்று கண் விழித்தது மாதிரி தலையசைத்துக் கொண்டார்.

அவன் நாற்காலியில், இருந்து எழுந்து அவர் பக்கத்தில இருந்த புத்தக அலமாரி சாவியை எடுத்தான்.

"எதுக்கு எடுக்கற?"

"புஸ்தகத்தை வச்சி பூட்ட மாமா."

"வேணாம்... ஒண்ணும் வேணாம்."

"... ... ..."

"நீ வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போய்படி."

கீர்த்திவாசன் ஆச்சரியத்தோடு மாமாவை தலை நிமிர்ந்து பார்த்தான். அவர் முகத்தில் லேசாக சிரிப்பு மலர்ந்து கொண்டிருந்தது. பின்னால் இருந்து இரண்டு நாய்கள் ஆனந்தமாக விளையாடிக் கொண்டு வந்தன...

– 'இன்னொரு மனிதன்' தொகுப்பிலிருந்து

வெளியீடு : நர்மதா பதிப்பகம்,
தி.நகர், சென்னை—17.

# சிறுசேமிப்பும், வருமான வரிச் சலுகையும்

ஒவ்வொரு நிதியாண்டிலும், சனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில், பணியிலிருப்போர் தாம் வருமானவரி செலுத்தியும், வரி விலக்கு பெற்றும், தமது "வருமானவரி அறிக்கையை" சமர்பிக்க வேண்டியவர்களாக உள்ளனர். வணிகம் மற்றும் தொழில் புரிவோரும் தாம் வருமான வரி செலுத்துவதிலிருந்து விலக்குபெற எவ்வாறு முதலீடு செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடன் உள்ளனர். நல்ல குடிமகனாக இருந்திட "வருமான வரி செலுத்துவது அவசியம். வருமான வரி செலுத்தவில்லையெனில்" சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டிய நிலை உள்ளது.

இத்தருணத்தில் பாதுகாப்பான முதலீடாக அமைந்து மனநிறைவான வட்டியினைத் தந்து, வருமான வரிச்சலுகை அளித்திடும் கீழ்க்கண்ட அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களை ஒப்பு நோக்கினால், வருமான வரிச்சலுகையும் பெற்று எதிர்கால பாதுகாப்பிற்கு சேமித்து வைக்கும் மனநிறைவு அடைவோம் என்பதில் பெருமை கொள்ளலாம்.

**முதலீட்டிற்கு வருமான வரிச் சலுகை அளித்திடும் முத்தான மூன்று அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்கள்**

| வ. எண். | சிறுசேமிப்பு திட்டத்தின் பெயர் | குறைந்த பட்ச முதலீடு | அதிக பட்ச முதலீடு | வருமான வரிச் சலுகை பெற்றிடும் முதலீட்டு தொகை | வட்டி சதவீதம் | முதிர்வுகாலம் இதர பயன்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆவது வெளியீடு | ரூ.100 அனைத்து அஞ்சலகங்களிலும் ரூ.100, 500, 1000, 5000, 10,000 ஆகிய இனங்களிலும் கிடைக்கும் | உச்ச வரம் பில்லை | ரூ.60,000 வரையிலான முதலீடுக்கு 20% வரி விலக்கு (டாக்டர்கள் எஞ்சினியர்கள், கலைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் வருமானவரிச் சட்டம் பிரிவு 88—ன் படி ரூ.70,000 வரை முதலீடு செய்து 25% வருமான வரி விலக்கு பெறலாம்) | 11% கூட்டுவட்டி ரூ.100 முதலீடு ஆறாண்டுகளில் ரூ.190.12 ஆகிறது. | 6 ஆண்டுகள் வட்டிக்கு வருமான வரிச்சட்டம் பிரிவு—88 மற்றும் 80எல்—ன் கீழ் வரிவிலக்கு பெறலாம். |
| 2. | தேசிய சேமிப்புத் திட்டம்—1992 | ரூ.100 அனைத்து தலைமை அஞ்சலகங்கள் மற்றும் தேர்வுநிலை துணை அஞ்சலகங்களில் கணக்கு துவக்கலாம் | உச்ச வரம்பு இல்லை ஒரு மாதத்தில் எத்தனை முறை வேண்டுமானாலும் பணம் செலுத்தலாம் | ரூ.60,000 வரை முதலீடுக்கு 20% வரிவிலக்கு (டாக்டர்கள் கலைஞர்கள் எஞ்சினியர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் வருமான வரிச் சட்டம் பிரிவு—88ன் படி ரூ.70,000 வரை முதலீடு செய்து 25% வருமான வரிவிலக்கு பெறலாம்) | 10.5% கூட்டுவட்டி | நான்காண்டுகள்/ வட்டிக்கு வருமான வரிச்சட்டம் பிரிவு 80எல்—இன் படி ரூ.12,000 வரை வரி விலக்கு உண்டு |

| வ. எண். | சிறுசேமிப்பு திட்டத்தின் பெயர் | குறைந்த பட்ச முதலீடு | அதிக பட்ச முதலீடு | வருமான வரிச் சலுகை பெற்றிடும் முதலீட்டு தொகை | வட்டி சதவீதம் | முதிர்வுகாலம் இதர பயன்கள் |
|---|---|---|---|---|---|---|
| 3. | 15 வருட பொது வருங்கால வைப்பு நிதித்திட்டம் | ஒரு நிதியாண்டில் ரூ.100 | ரூ.60,000 ஒரு நிதியாண்டில் | ரூ.60,000 வரை முதலீட்டுக்கு சட்டம் பிரிவு—88ன்படி வருமான வரி விலக்கு (விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கு 25% வரி விலக்கு) | 11% கூட்டுவட்டி | 15 ஆண்டு கணக்கு ஆரம்பித்த 3ஆவது நிதியாண்டி—லிருந்து கடன்பெறவும் ஏழாவது நிதியாண்டி லிருந்து பணம் எடுக்கும் வசதியும் உண்டு. நீதிமன்ற ஜப்தி கிடையாது. வட்டிக்கு முழுவரி விலக்கு உண்டு. |

**தேசிய சேமிப்பு பத்திரங்களில் ரூ.10,000 முதலீடு செய்து வருடந்தோறும் வருமான வரிச்சட்டம் பிரிவு 88—ன் கீழ் வட்டிக்கு வரிச் சலுகை பெற்றிட கீழ்க்கண்ட அட்டவணை பயனுள்ளதாக அமையும்.**

| வ. எண். | ஆண்டு விவரம் | முதலீடு செய்யப்பட்ட காலம் (1.1.99க்கு முன்பு) | 1.1.99 முதல் 14.1.2000 வரை | 15.1.2000க்கு பின்னர் |
|---|---|---|---|---|
| 1. | முதலாண்டு | 1240 | 1183 | 1130 |
| 2. | இரண்டாமாண்டு | 1390 | 1323 | 1258 |
| 3. | மூன்றாமாண்டு | 1560 | 1480 | 1400 |
| 4. | நான்காமாண்டு | 1750 | 1654 | 1558 |
| 5. | ஐந்தாமாண்டு | 1970 | 1851 | 1735 |
| 6. | ஆறு ஆண்டு இறுதியில் | 2240 | 2069 | 1931 |



இதர திட்டங்களான, மாதாந்திர வருவாய்த்திட்டம், ஐந்தாண்டு தொடர் வைப்புத்தொகை திட்டம் ஆகிய திட்டங்களில் கிடைக்கும் வட்டி/போனசுக்கும் வருமான வரிச்சட்டம் பிரிவு 80எல்—ன்படி ரூ.12,000 வரை விலக்கு பெறலாம்.

வரியை வருமானமாக்கிட திரு. **X** என்ற நபர் எவ்வாறு செயல்படுகிறார் என்பதைகீழ்க்கண்டவற்றை கண்ணுற்று பார்த்து நீங்களும் பயன்பெறலாம்.

| | ரூ. |
|---|---|
| 1. திரு **X** என்பவரின் ஆண்டு நிகர வருமானம் | 1,25,000 |
| 2 வரிவிதிப்பு நிரந்தர கழிவு **(Std, deduction)** | 20,000 |
| 3 வரி கட்டுவதற்குரிய வருமானம் | 1,05,000 |
| 4 வரி விவரம் | |
| (i) ரூ.50,000 முதல் ரூ.60,000 வரை = 10 சதவீதம் | 1,000 |
| (ii) ரூ.60,000 முதல் ரூ.1,05,000 வரை = 20 சதவீதம் | 9,000 |
| மொத்த வருமானவரி=ரூ.1,000 + 9,000 | 10,000 |
| பொது வருங்கால வைப்பு நிதியில் **(GPF)** மாதந்தோறும் ரூ.3,000 செலுத்தியதால் வரி கழிவு(—) | 7,200 |
| மீதம் | 2,800 |
| இவர் ரூ.14,000ஐ தேசிய சேமிப்பு பத்திரங்களில் முதலீடு செய்வதால் பெறும் வரிவிலக்கு | 2,800 |
| கட்ட வேண்டிய வரி | இல்லை |

இவர் ரூ.2,800 வரி கட்டுவதால் ஆறு ஆண்டில் அத்தொகை ரூ.5,323 வரை இழப்பாகும்.

ஆனால் அவர் ரூ.14,000ஐ தேசிய சேமிப்பு பத்திரத்தில் முதலீடு செய்வதால், அத்தொகை ஆறாண்டுகளில் ரூ.26,617 ஆக வளர்வதுடன், ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் வட்டிக்கும் (ஐந்தாண்டுகள் வரை) வருமானவரி பிரிவு 88ன் படி வரிச்சலுகை உண்டு.

வருமான வரியும் அரசு நிதி ஆதாரமாக அமைகிறது. உங்களது சேமிப்போ உங்களுக்கு பாதுகாப்பான முதலீடாக அமைந்து அரசு திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட நிதி ஆதாரமாக அமைவதால், இத்தருணத்தில் செலவினை சுருக்கி சேமிப்பினை பெருக்கிடவும் "வரிச்சலுகை பெற" சிறந்த தேசிய திட்டங்களான தேசிய சேமிப்பு பத்திரம், தேசிய சேமிப்பு திட்டம் 1992 மற்றும் 15 ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதித் திட்டங்களில் முதலீடு செய்து பயன் பெறுங்கள்.

***"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை***
***போகா றகலாக் கடை"***

— என்ற வள்ளுவர் வாக்கின்படி நம் வாழ்வினை அமைத்துக் கொள்வோமாக!

**இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த வகுத்தலும் வல்ல தரசு.**

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

***— கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து.***

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

□ *வைகை செல்வி*

பெண் பிறரைச் சார்ந்து வாழ வேண்டியவள் அல்லது பெண்ணால் பிறரைச் சாராமல் வாழ முடியாது என்று காலங்காலமாகப் பெண்களை மூளைச்சலவை செய்து விட்டனர். பெண்களின் உலகம் வீடு மட்டுமே என்று இருந்த நிலைமை மலையேறி விட்டாலும், கிராமப்புறங்களிலும், சிறிய நகரங்களிலும் இன்னும் பெண்ணுக்கு வீடு மட்டுமே உலகமாக இருக்கிறது. இத்தகு சூழலில் பெண் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறாள். இவ்வாறு சார்ந்திருப்பதால் திடீரென ஏற்படும் கஷ்டங்களையோ, இழப்புகளையோ எதிர்கொள்ள முடிவதில்லை. எனவே, பெண்ணுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் ஏற்பட வழி காட்டப்பட்டால் பெண்களின் வாழ்க்கையில் ஒரு சன்னல் கதவு திறப்பது போலிருக்கும். இத்தகு சன்னலைத் தான் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் திறந்திருக்கிறது.

பல காரியங்களிலும் இன்றைய மகளிரின் நிலை பின்னுக்குத் தான் இருக்கிறது என்பதைச் சூசகமாக உணர்த்துவது போலத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அண்ணா சாலையின் மெயின் ரோட்டிலிருந்து உட்பக்கம் தள்ளியிருந்தாலும் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்காக முன்னணியில் நின்று பாடுபட்டு வருகிறது. பொதுவாகப் பெண்களுக்கு அரசின் திட்டங்கள் எல்லாமே நலப்பணி சம்பந்தப்பட்டதாகவே அதாவது கல்வி, குடிநீர், புகையில்லாத அடுப்பு வழங்கல், விதவை மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கான திட்டம் என்று இருக்கின்ற நிலையில், பெண்களுக்கான பொருளாதாரச் சுதந்திரத்தை அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த நிறுவனம். பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் என்பது, 'பெண்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல், ஏழ்மையை அகற்றல், நிர்வாகத் திறமையைக் கற்பித்தல் மற்றும் தொழில் முனைவோராக உருவாக்குதல்' போன்றவற்றை அளிப்பதாக இருக்க வேண்டியதன் அவசித்தைக் கருதி அத்தகுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்களிடையே குழுக்களை உருவாக்குவதும் அக்குழுக்களைப் பலப்படுத்துவதும் பெண்களை முன்னேற்றுவதற்கான ஒரு உத்தி என எட்டாவது திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இது பெண்களுக்குப் பல விதங்களில் உதவி புரியும். குழுவாக ஒன்று சேர்ந்து செயல்படுகையில் ஒற்றுமை, பரஸ்பரம் விட்டுக் கொடுத்தல், புரிந்து கொள்ளுதல், ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகிய பண்புகள் வளர்கின்றன. மேலும் தனித்து இயங்குவதை விட குழு உறுப்பினராகச் செயல்படுகையில் பலம் அதிகரிக்கும். கிராமப்புறங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அதன் மூலம் பெண்களுக்குத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உதவி புரிந்து வருகிறது. இதுவே இந்நிறுவனம் அமல்படுத்தும் மகளிர் திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவனத்திலிருந்து (International Fund for Agricultural Development) நிதியுதவிப் பெற்று, கிராமப் பகுதியிலுள்ள ஏழை மகளிரின் மேம்பாட்டிற்கான ஐஃபாட் திட்டம் 1989-ஆம் ஆண்டு மே திங்கள் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் அரசு சாரா அமைப்புகள், வணிக வங்கிகள் ஆகியவற்றிற்கிடையிலான தனித்தன்மை வாய்ந்த கூட்டமைப்பாகும். இத்திட்டத்தில் பங்கு பெற்றுப் பயனடைய பெண்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்ற அந்தந்தப் பகுதிகளில் உள்ள அரசு சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் (Non-Governmental Organisation) இணைந்து செயல்பட வேண்டும். இவையே வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 21 வயதிற்கு மேற்பட்ட தேவைமிக்க பெண்களைத் தெரிவு செய்து சுய நிதிக் குழுக்கள் அமைத்து, பெண்களுக்குப் பயிற்சிகளைத் திட்டமிட்டு நடத்துகின்றன. பயிற்சி நாட்களில் சுய உதவிக் குழுக்களின் நோக்கம், ஒற்றுமை, சமூக அந்தஸ்து, சேமிப்பு, சுகாதாரம் குழந்தைக் கல்வி, சேவை மனப்பான்மை, பெண்களின் சட்ட உரிமை, விழிப்புணர்வு, குடும்ப வருமானத்தைப் பெருக்க வழிவகை அறிதல், அரசின் நலத் திட்டங்களை அறியச் செய்தல், குழுக் கூட்டங்களை நடத்துவது எப்படி என்பன போன்ற பல வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு பயிற்சி பெற்ற பெண்கள் வங்கிகளில் கடன் பெற்று, பால் விநியோகம் செய்தல், கால்நடைகள் வளர்த்தல், மூலிகை சேகரித்தல், மாவு அரைத்தல் போன்ற பல சிறு தொழில்களை ஆரம்பித்து இலாபகரமாக நடத்துகின்றனர்.

தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள 75 வளர்ச்சி வட்டாரங்களில் 31.8.98 வரையில் 5207 குழுக்கள் இயங்கி 1,20,960 பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர். இதற்கு அடிப்படை 'சுயநிதிக்குழு' அமைப்பாகும். அதிகபட்சம் 20 பெண்கள் ஒன்று சேர்ந்து மகளிர் மன்றம் ஒன்றை ஆரம்பித்து, மாதம் ஒரு குறிப்பிட்டத் தொகையைப் போட்டுச் சேமிக்கத் தொடங்குகின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு ஊக்குநர் அதாவது தலைவி போன்று ஒருவர் இருப்பார். மகளிர் தங்களுடைய சேமிப்பை அது எவ்வளவு குறைவாக இருந்தாலும் பொது நிதியில் சேர்த்து வைக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். இதனால் பெண்களுக்குச் சேமிக்கும் பழக்கம் ஏற்படுகிறது. தொடர்ந்து இவ்வாறு சேமிக்கப்படும் சுயநிதியிலிருந்து, தேவைப்படுகிற உறுப்பினர்களுக்குச் சிறு கடன் உதவியும் வழங்கப் படுகிறது. தனிப்பட்ட முறையில் அதிக வட்டிக்குக் கடன் வாங்கிய பெண்கள் சேமிப்பின் மூலம் தங்களுடைய பணத்திலிருந்து தேவைப்படும் பெண்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கக்கூடிய அளவிற்கு மேம்பட்ட

நிலையை அடைவது கண்கூடாகத் தெரிகிறது. தனிநபர் சேமிப்பு மூலம் மட்டுமல்லாது குழு உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதன் மூலமாகவும் குழுவின் நிதி வளர்கிறது. இதனால் பெண்கள் வட்டியைக் கணக்கிடும் முறையையும், கடனைத் திருப்பிச் செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் கற்றுக் கொள்வதுடன் நிதி மேலாண்மையில் ஒரு ஒழுங்கையும் கடைப்பிடிக்கின்றனர். முறையான அடிப்படையில் இச்சுயநிதி உதவிக் குழுக்கள் செயல்பட ஆரம்பித்த பின்னரே வங்கிக் கடன் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. பெண்ணுக்குச் சிறு கடன் வழங்குதல் என்பது வாழ்வதற்கான நம்பிக்கையை அவளுக்கு வழங்குவதற்குச் சமம். இச்சிறுகடன் மூலம் ஒரு தொழிலை உருவாக்குகிறாள். இதுவரை வெளிப்படாமல் இருந்த தன் திறமைகள் மூலம் அவளின் குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்க அவளால் இயலுகிறது. ஐஃபாட் திட்டம் தமிழ்நாட்டில் நல்ல முறையில் செயல்பட்டதை அடுத்து இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு மகளிர் திட்டம் என மறுமலர்ச்சி பெற்று, தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களிலும் செயலாக்கப்பட்டுள்ளது. விரைவில் எல்லா மாவட்டங்களிலும் செயலாக்கப்படவுள்ளது.

இந்த மகளிர் மன்றங்கள் ஆரம்பித்தப் பிறகு பெண்களின் வாழ்க்கையில் பொருளாதார மாற்றம் மட்டுமின்றி வேறு பல மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. வீணாக வெட்டிக் கதைப் பேசிப் பொழுதைப் போக்காமல் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் முன்னேற்றுவதற்காகக் கூடிப் பேசும் வழக்கம் உண்டாகியுள்ளது. கிருஷ்ணகிரியைச் சேர்ந்த பி.சரஸ்வதி என்ற பெண்மணி, 'பெண்களின் முன்னேற்றத்திற்காக எத்தனையோ திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் அவை பெண்களைப் போய்ச் சேராததற்குக் காரணம் பெண்களுக்குக் கூடிப்பேசி ஆலோசிக்கும் பழக்கம் இல்லாததே. ஏனெனில் அதற்கான வாய்ப்பும் தரப்படவில்லை. இந்தச் சுயநிதிக் குழுக்கள் மூலம் பெண்கள் அத்தகைய வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்று உணர்ந்து கூறுகிறார். மேலும் இதனால் வெளி உலகத் தொடர்பு ஏற்பட்டுள்ளது. பொதுப் பிரச்சினைகளில் ஈடுபட ஆர்வம் எழுகிறது. குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கின்றனர். குடும்ப வரவு - செலவுகளை எழுதி வைக்கின்றனர். எதிர்காலத்தில் எப்படிச் செயல்பட வேண்டும் என்று திட்டமிடும் பக்குவமும் தன்னம்பிக்கையும் இப்பெண்களிடையே ஏற்பட்டுள்ளது.

நாளடைவில் இச்சுயநிதிக் குழுக்களைச் சுயசார்புத் தன்மை அடையச் செய்து சுயமாகச் செயல்பட வைப்பதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். பெண்கள் பொருளாதாரச் சுதந்திரத்தை அல்லது மேம்பாட்டைச் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் அடைவதனால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. பெண்களிடம் அதிக வேலை வாங்கிக் குறைந்த ஊதியம் கொடுக்கின்ற முதலாளிகளின் தொல்லை இருக்காது. உடல் நலக் குறைவாயிருந்தாலும் கட்டாயமாக நீண்ட மணி நேரங்கள் வேலைப் பார்க்க வேண்டிய சூழலிலிருந்து பெண்கள் விடுபடலாம். கொத்தடிமை போன்ற கொடிய பழக்கங்கள் குறையும். பாலியல் வன்முறை, அநாகரிகமாகப் பெண்களை நடத்துதல் போன்ற தொல்லைகளிலிருந்து பெண்கள் தப்பலாம். திருமணமானப் பெண்களுக்கு வீட்டில் இருந்து கொண்டு குடும்பத்தையும் கவனித்தபடி குடும்ப வருமானத்தைப் பெருக்கவும் முடிகிறது.

'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதி பெண் குழந்தைகளுக்குச் சொல்லியிருந்தாலும் கூட வளர்ந்த பிறகு பெண்ணின் வாழ்க்கையில் பொழுது போக்கு, விளையாட்டு, முதலிய அம்சங்களுக்கு இடம் தரப்படுவதில்லை. நேரமும் கிடைப்பதில்லை. இத்தேவையைக் கண்டறிந்து 1997-98-ஆம் ஆண்டில் தருமபுரி, சேலம், விழுப்புரம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றுக்குப் பத்து வீதம் ஐம்பது மகளிர் நல மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையத்தில் செய்தித் தாள்கள், விளையாட்டுச் சாதனங்கள், ஒலி நாடாப்பதிவு இணைந்த சிறிய வானொலிப் பெட்டி ஆகியவை உண்டு.

மேலும் இந்நிறுவனத்தின் சார்பில் நடத்தப்படும் 'முற்றம்' என்ற மாத இதழில் பெண்களுக்கான பல்வேறு துறைகளின் திட்டங்கள், செயல்பாடுகள், பெண் தொழிலாளர்களுக்கான சட்டங்கள் பற்றியெல்லாம் செய்திகளைக் காணலாம். இந்த இதழ் மூலம் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளைப் பற்றியும் அறிய முடிகிறது.

பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தின் மூலம் சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தை ஏற்படுத்துவதும், அவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்து பெண்களிடம் தன்னம்பிக்கை, நிர்வகிக்கும் திறமை ஏற்படுத்துவதுமே இக்கழகத்தின் நோக்கம் என்று ஒரு உயரதிகாரி கூறினார். அவரிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வெளியேறுகையில் கையில் கிடைத்த 'முற்றம்' இதழைப் புரட்டியபோது கூத்தம்பாக்கம், அன்னை தெரஸா குழுவைச் சேர்ந்த எழிலரசி என்பவர், 'முன்பு எங்களால் முடியாது என்று ஒதுக்கப்பட்ட காரியங்கள் யாவும் இப்போது பெண்களாலும் செய்ய முடியும் என்று நிரூபணமாகி வருகிறது' என்று கூறியிருந்ததை வாசிக்கையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தனது நோக்கத்தை விரைவில் எட்டிப்பிடிப்பதற்கான சரியான பாதையில் போய்க் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

பிறர் கைகளையே எதிர்பார்த்துக் கொண்டிராமல் தன்னாலேயே தனக்குப் பொருளாதார மேம்பாட்டைத் தேடிக்கொள்ள முடிகிறது என்பதில் உள்ள மனநிறைவு எதிலுமே இல்லை. அது மட்டுமல்ல, தன் கையால் தனக்கு மட்டுமல்ல, 'தன் கையே தனக்குதவி' என்ற நிலையிலிருந்து உயர்ந்து, பிறருக்கும் உதவப் பிற பெண்களுடன் கையோடு கை கோர்த்துக் கொண்டு, எத்தனையோ காரியங்களைப் பெண்கள் சாதிக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

- முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவித்து
செயல்படுத்தப்படும் 'மகளிர் திட்டம்' குறித்து
20-2-2000 நாளிட்ட தினமணி கதிரில்
இடம் பெற்ற கட்டுரை.

நன்றி : தினமணி கதிர்

# தொலைதூர வனப்பகுதியில் மனுநீதி நாள் முகாம்


தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தளி ஊராட்சி ஒன்றியம் எல்லைக்குட்பட்ட வனப்பகுதியில் அமைந்துள்ள பிலிகுண்டு என்ற கிராமத்தில் இதுவரை தருமபுரி மாவட்ட வரலாற்றில் மனுநீதி நாள் முகாம் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். அங்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என்ற குறை அப்பகுதி மக்களிடம் இருந்து வந்தது. இதனைக் கேள்வியுற்ற மாவட்ட ஆட்சித்தலைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப., அவர்கள். **16—2—2000** அன்று ஒக்கேனக்கல் வனப்பகுதி பிலிகுண்டு கிராமத்தில் சிறப்பு மனுநீதி நாள் முகாமிற்கு ஏற்பாடு செய்தார். கார் செல்லக்கூடிய அளவுக்கு வசதி இல்லாத சாலையில் ஜீப் மூலம் அதிகாரிகளுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பிலிகுண்டு கிராமத்தில் அனைத்துப் பகுதிகளையும் சுற்றிப்பார்த்து நிலைமைகளைக் கண்டறிந்தார். அங்குள்ள பள்ளியில் பயிலும் மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து, ஆசிரியர் சரியாக பணிக்கு வருகிறாரா, சீருடைகள் வழங்கப்படுகிறதா என்பதைக் கேட்டறிந்தார். குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவையும் பரிசோதித்துப் பார்த்தார். அப்பகுதியில் வாழும் இருளர்கள், செம்படவர்கள், தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டினையும், காலிமனைகளையும் கண்ணுற்ற அவர், பட்டா கோரிய பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றதோடு, பட்டா பெற்றுள்ள நபர்களின் பட்டியலையும் கண்டு அவ்விடத்திலேயே 22 தொகுப்பு வீடுகளை உடனடியாக கட்ட தளி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உத்தரவிட்டார்.



அதில் 12 வீடுகள் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும், 10 வீடுகள் மலைவாழ் மக்களுக்குமாக மாவட்ட ஆட்சியர் ஒதுக்கீடு செய்தார். மொத்தம் 80 குடும்பங்களும் சுமார் 400 பேரும் கொண்ட தொட்டமச்சி ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட பிலிகுண்டு கிராமத்தில் 22 வீடுகளை ஒதுக்கீடு செய்துள்ளதை ஒரு சிறப்பு ஒதுக்கீடு என்று கூறினால் அதுவே பொருந்தும். மீதம் பட்டா பெறும் நபர்களுக்கு அடுத்த ஆண்டில் தொகுப்பு வீடுகள் வழங்கப்படும்.

பின்னர் அங்குள்ள ஆழ்துளை குழாய்க் கிணறுகளை பார்வையிட்டு அத்தண்ணீர் உப்புத் தண்ணீராக இருப்பதை சுவைத்து கண்டறிந்து உடனடியாக ஆற்றுப்படுகை ஓரத்தில் 2 ஆழ்குழாய் கிணறுகளை அமைக்க ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உத்தரவிட்டார். அப்பகுதி பொதுமக்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக்கொடுக்க கேட்டுக்கொண்டார்கள். இன்னும் ஆறு மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உத்தரவாதமளித்தார்.

ஏற்கெனவே இக்கிராமத்தில் 10 தெருவிளக்கு எரிவதை கண்ணுற்று தொகுப்பு வீடு பணி முடியும் தருவாயில் கூடுதலாக தெருவிளக்கு அமைக்கவும் உத்தரவிட்டார்.



இக்கிராமத்தில் 65 குடும்ப அட்டைகள் உள்ளதாகவும், இன்னும் 40 குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அத்தோடு பகுதிநேர நியாயவிலைக் கடை வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்கள். இதற்கு உடனடியாக தகுதியுடைய நபர்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்படும் என்றும், அரசிற்கு சிறப்பு இனமாக இப்பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க பரிந்துரை செய்து இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அமைக்கப்படும் என உத்திர வாதமளித்தார். இப்பகுதியில் தொடங்கப் படவுள்ள பகுதிநேர நியாயவிலைக் கடை இங்கு செயல்பட்டு வரும் மகளிர் குழுவினரால் நடத்தப்படும்.

பின்னர் 18 நபர்கள் முதியோர் உதவித்தொகையும், உடல் ஊனமுற்றோர் உதவித்தொகையும் கோரி, மனுக்கள் வழங்கினார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்கள் துணை இயக்குநர் (மருத்துவம்), மாவட்ட மறுவாழ்வு அலுவலர், சம்பந்தப்பட்ட துயர்துடைப்பு வட்டாட்சியர் ஆகியோரை ஸ்தலத்திலேயே ஆய்வு செய்ய உத்தரவிட்டு தகுதிபெற்ற 18 நபர்களுக்கும் உதவித் தொகைக்கான ஆணைகளையும் வழங்கினார். வனப்பகுதியில் அமைந்துள்ள சாலைப்பணியினை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீட்டில் இருந்து செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வனத் துறையினரின் அனுமதி கிடைக் காததால் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது என்றும். விரைவில் அனுமதி பெற்று சாலைப்பணி முடித்துத் தரப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார்.

மத்திய அரசின் நீர் ஆணையம் சார்பில் செயல் பட்டு வரும் காவிரி நதி நீர் அளவு மையத்தை நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் பொது மக்களிடம் கூறுகையில், விரைவில் வனப் பகுதியில் அமைந்துள்ள இக்கிராமம் மிகவும் வளர்ச்சியடைந்த கிராமமாக மாற்றப்படும் என்ற உத்திரவாதத்தையும் அளித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவரை வழியனுப்பிவைத்த கிராம பொது மக்கள், இதுவரை வாக்குறுதிகளை மட்டுமே பெற்றுவந்த நாங்கள் இன்று உங்களின் வருகையினால் பல்வேறு அரசின் உதவிகளையும், குறிப்பாக குடியிருக்க வீடு, குடிதண்ணீர், பகுதிநேர நியாயவிலைக் கடை, இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் ஸ்தலத்திலேயே உதவித் தொகைகளுக்கான ஆணைகளைப் பெற்றுள்ளோம். **1974**ஆம் ஆண்டு கலைஞர் அரசால் மின் விளக்குகளைப் பெற்ற நாங்கள் இன்று அவரது ஆட்சியிலே அனைத்து வசதிகளையும் பெற்றுள்ளோம் என்ற மனநிறைவோடும் மனநெகிழ்வோடும் உங்களை வழியனுப்புகிறோம்.

**– மு. பழனிசாமி**

செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,

தருமபுரி

★

# வேளாண்மை வளர்ச்சியில் சாதனைகளும் சவால்களும்

☐ டாக்டர் க. அருள்மொழி, இ.ஆ.ப.,
இயக்குநர், வேளாண்மைத்துறை

நம் மாநிலத்தின் மக்கட் தொகையில் மூன்றில் இருபங்கினர் கிராமப்புற பொருளாதாரம் சார்ந்துள்ளனர். கிராமப்புற பொருளாதாரமோ வேளாண்மை சார்ந்த வளர்ச்சியை மையமாக உள்ளது. எனவே வேளாண்மையும் அது சார்ந்த தொழில், வணிக வளர்ச்சியும் மாநில பெருவாரி மக்களின் வளமைக்கு தளமாக உள்ளன. இயற்கை வளங்களையும், உடல் உழைப்பையும் பெருமளவு சார்ந்த வேளாண்மைத் தொழில், நகர்ப்புற ஆலை, இயந்திரத் தொழில்களைவிட குறைந்த வருமானம் ஈட்டுவதாலும், மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) பகுதி நேர வேலையின்மை (Partial Unemployment) உள்ளிட்ட காரணங்களாலும், வறியவர்களின் களமாகத் திகழ்கிறது. சவால்கள் நிறைந்த வேளாண் மக்களின் வாழ்வில் மலர்ச்சி தோன்றிட தமிழக அரசின் வேளாண்மைத்துறை ஆற்றி வரும் பணி மற்றும் தொலைத் திட்டங்கள் பற்றிய விவரங்களை இக்கட்டுரை மூலம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

வேளாண்மைத் துறையின் முக்கிய முதன்மை குறிக்கோளானது உணவு தானிய உற்பத்தியில் முதற்படியாக தற்சார்பு நிலையும், படிப்படியாக உபரி உற்பத்தி நிலையும் எட்டுவதாகும். அண்மையில் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் மக்கட் தொகை மதிப்பீட்டின்படி நம் மாநில மக்கள் எண்ணிக்கை 6.36 கோடியை (2000 ஆண்டு) எட்டியுள்ளது. ஆடவர் (32.6%), மகளிர் (31%), சிறுவர் (24.3%), குழந்தைகள் (12.1%) ஆகியோரின் குறைந்தபட்ச அரிசித் தேவை அடிப்படையில் கணக்கிட்டால் (முறையே நபர்க்கு/நாளுக்கு 365, 310, 296, 190 கிராம் விகிதத்தில் கணக்கிடப்பட்டது) 71.0 இலட்சம் டன் அரிசித் தேவையுள்ளது. நமது அண்மைக் கால அரிசி உற்பத்தி முன் எப்பொழுதும் இல்லாத சாதனை அளவை எட்டியுள்ளதை கீழே குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்களின் மூலம் காணலாம்.

| ஆண்டு | உற்பத்தி (இலட்சம் டன்) |
|---|---|
| *1996–97* | *58.05* |
| *1997–98* | *68.94* |
| *1998–99* | *81.41* |

எனவே, அரிசி உற்பத்தியில் சுயசார்பு நிலையைக் கடந்து உபரி நிலை நோக்கி நம் மாநிலம் நடைபோட்டு வருவது கண்கூடு. இந்த உபரி உற்பத்தியை வரும் ஆண்டுகளில் நிலைப்படுத்தி, ஏற்றுமதி வாய்ப்புகள் மூலம் உயர் வருவாய்களுக்கு முனையவேண்டும்.

உணவு தானியங்களில் அரிசிக்கு அடுத்தபடியாக சிறுதானியங்கள், பயறுவகைத் தானியங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆயினும் புஞ்சைப் பயிர்களான சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு ஆண்டுதோறும் குறைந்து வருகிறது. பாசனவசதி பெருக்கத்தாலும், இலாபகரமான இதரப் பயிர்கள் விவசாயிகளை ஈர்ப்பதாலும், ராகி, கம்பு போன்ற தானியங்கள் உண்பது குறைந்து வருவதாலும் இந்த வகையில் உற்பத்தி குறைவு தவிர்க்க முடியாமல் உள்ளது. இவற்றின் உற்பத்தியில் பெரும்பங்கு கால்நடைத் தீவனம், மாவு (Starch) மருத்துவ சர்க்கரை (குளுகோஸ்/டெக்ஸ்ட்ரோஸ்) போன்றன தயாரிக்கப் பயன்படுகின்றன. கூடுதல் அரிசி உற்பத்தி வாய்ப்புகளால் மொத்த உணவு தானிய இலக்கு பெரும்பாலும் எட்டப்பட்டாலும், சத்துள்ள சிறு தானியங்களாக இவற்றைக் (Nutritive Grains) கருதுவதால், அவற்றின் சாகுபடியில் தொடர்ந்து விரிவாக்க முயற்சிகளை முடுக்கிவிட்டு, சாகுபடி சரிவைத் தடுத்து வருகிறது.

| ஆண்டு | மொத்த உணவு தானிய உற்பத்தி (இலட்சம் டன்) | |
|---|---|---|
| | இலக்கு | சாதனை |
| *1996–97* | *95.00* | *69.30* |
| *1997–98* | *95.00* | *81.04* |
| *1998–99* | *97.75* | *94.12* |

நடப்பு ஆண்டில் (1999–2000) 100 இலட்சம் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிறுதானியங்களான சோளம், கம்பு சராசரி உற்பத்தித் திறனில் அகில இந்திய அளவில் நம்



மாநிலம் முக்கிய இடம் வகிக்கிறது. பயறு உற்பத்தியில் கடும் குறைபாடுள்ளதாக மதிப்பிடப்பட்டாலும், இந்த மதிப்பீட்டு முறையிலேயே கடும் குறைபாடுகள் உள்ளதால் சரியான நிலை நிர்ணயிக்க இயலவில்லை. பொதுவாக புஞ்சைப்பயிர்களில் இரண்டாம் பயிர், கோடைப்பயிர், கலப்புப் பயிர் / இடைப் பயிர்கள் பதிவு செய்வதில் விடுபாடுகள் மலிந்துள்ளதால் இறுதி முன்மதிப்பீடுக்கும், இறுதி மதிப்பீடுக்கும் கடும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் சரியான உற்பத்திநிலையை முன்மதிப்பீட்டு அடிப்படையில் ஈடுசெய்ய திட்டமிடுவதே சாத்தியமாக உள்ளது. பொதுவாக பயறு வகையில் உயர் விளைச்சல் ரகங்கள் உருவாக்குவதில் தேக்க நிலையிருப்பினும் உழவியல் நுட்பங்களான இலை வழியாக டி.ஏ.பி. தெளிப்பு போன்ற முறைகளைப் பிரபலப்படுத்தி விளைச்சல் உயர்த்த விரிவாக்க முயற்சிகள் முடுக்கப்பட்டுள்ளன.

கரும்பு விளைச்சலில் உலகளவில் பெறப்படும் உயர் சராசரி மகசூலைவிட (எகிப்து 110 டன்) தமிழ்நாட்டில் கூடுதலாக (118 டன்/எக்டேர்) விளைகிறது. மொத்த எண்ணெய்வித்துப் பயிர்களில் தமிழ்நாடு இந்தியாவிலேயே அதிகபட்ச சராசரி மகசூல் விளைவித்து முதலிடத்தில் உள்ளது. (Agricultural Statistics at a glance - GOI, 1999).

எக்டர் மகசூல் (9 எண்ணெய்வித்து பயிர்கள்)

| | கிலோ | இடம் |
|---|---|---|
| இந்தியா | 840 | — |
| தமிழ்நாடு | 1432 | 1 |
| குஜராத் | 1312 | 2 |
| பஞ்சாப் | 1131 | 3 |

அதிகம் பயிராகும் மணிலாவில் நம் மாநிலம் முதல் நிலையில் (1630 கிலோ/எக்டர்) உள்ளது இதற்குக் காரணமாகும். பருத்தியில் நம் மாநில உற்பத்தியில் ஒரு தேக்க நிலை தொடர்கிறது.

| ஆண்டு | பஞ்சு உற்பத்தி (இலட்சம் பேல்) | பரப்பு (இலட்சம் பேல்) | சராசரி மகசூல் (இலட்சம் பேல்) |
|---|---|---|---|
| 1996–97 | 3.28 | 2.58 | 221 |
| 1997–98 | 4.02 | 2.48 | 276 |
| 1998–99 | 4.06 | 2.19 | 316 |

பயிர் பாதுகாப்பு செலவினங்கள் கூடுதலாகவும், பஞ்சுவிலை நிலையற்றதாக உள்ளதாலும் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. எனினும் சராசரி மகசூல் உயர்வால் மொத்த உற்பத்தியில் சரிவு தடுக்கப்படுகிறது. எனினும் உள்ளூர் ஆலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யவும், விவசாயிகளுக்குக்

கட்டுப்படியான விலைகள் உறுதி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக "பருத்தி மன்றம்" (Cotton Council) அமைத்து, வரும் ஐந்தாண்டுகளில் பஞ்சு உற்பத்தியை மும்மடங்கு உயர்த்த உத்திகள் வகுக்கப்பட்டுள்ளன.

**சவால்களை எதிர் கொள்ள நடவடிக்கைகள்:**

பசுமைப்புரட்சியின் விளைவாக உணவுப் பஞ்சம் தவிர்க்கப்பட்டு, தற்சார்பு நிலை அடைந்தாலும், உயர் விளைச்சல் உத்திகளான இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் பயன்பாட்டு மூலம் அடையப்பட்ட உயர் விளைச்சல்கள் சுற்றுச்சூழல் எதிர் விளைவுகளைத் தோற்றுவித்துள்ளன. இவற்றை தவிர்த்து மண், பாசனநீர், பயிர் தூய்மைகளைப் பேணும் வகையில் இயற்கை வேளாண்மை (Organic Farming) முறைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. நெற்பயரில் நீலப்பச்சைப் பாசி, அசோலா, அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் போன்றவைகள், பசுந்தாள் எருக்கள் மூலமும் மண் வளமையைக் கூட்டி உயர் விளைச்சல் பெற முடியும்.

இதுபோன்று ஏனைய பயிர்களிலும் இயற்கை எருககள், நுண்ணுயிர்கள் (அசடோபாக்டர், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா) போன்றவை பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவைகளை அளவோடு வழங்கும் இரசாயன உரங்களுடன் ஒருங்கிணைந்து உயர் மகசூல் பெற வழிவகை செய்யப்படுகின்றன.

இராசயன பூச்சிக் கொல்லிகளைக் குறைத்து இயற்கை முறைப்பயிர் பாதுகாப்பு வழிகளும் கண்டுபிடித்து விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கப் படுகிறது. *1983–84இல் 10,367* டன்னாக இருந்த இராசயன பூச்சி மருந்து விற்பனையை (தொழில்நுட்பத்தரம்) படிப்படியாக குறைத்து தற்போது *1730* டன்னாக *(1998–99)* உள்ளது. தாவர பூச்சிக் கொல்லிகள் சுற்றுச்சூழல் நச்சுத்தன்மை மிகாமல் காப்பதால் இவையே பெரும்பாலும் பரிந்துரைககப்படுகின்றன. உதாரணமாக *1994–95*இல் *30,000* லிட்டர் வேம்பு அடிப்படை பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தப்பட்ட நிலை மிகுந்து, இப்போது *3,60,000* லிட்டர் வரை உயர்ந்துள்ளது. தவிரவும் அனுகூலப்பூச்சிகள் பாக்டீரியா, வைரஸ் மூலம் நாசகாரப் பூச்சிநோய்களைக் கட்டுப்படுத்தியும் பயிர் சேதங்கள் தடுக்கப்படுகிறது. உதாரணமாக *1994–95*இல் *60,000* டன் பயன்படுத்திய பாசில்லஸ் துரிஞ்சன்சிஸ் இப்போது 10 மடங்கு உயர்ந்து 6 டன் அளவு பயன்படுத்தப்படுகிறது. என்.பி.வி. உபயோகமும் 4 மடங்கு உயர்ந்துள்ளது.



பாசனத் தேவைகள் மிகுந்து, சேமிப்பு வாய்ப்புகள் குறைந்து வருவதால் பாசன மேலாண்மை முறைகள், பயிர் மாற்று உத்திகள் (Crop Diversification) செயல் விளக்கங்கள் மற்றும் பயிற்சி முகாம்கள் மூலம் பிரபலப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக பொதுப்பணித்துறை சீரமைத்த பாசன ஏரி ஆயக்கட்டுகளில் *(1998–99இல் 83 ஏரிகள்)* பயிர் மாற்று செயல் விளக்கங்கள் மூலம் பயிர் சாகுபடித்திறன் (Cropping Intensity) உயர்த்தி, கூடுதல் பண்ணை வருவாய் பெற பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. தவிர பருத்தி, கரும்பு, எண்ணெய்வித்து வளர்ச்சி திட்டங்களில் தெளிப்பு / சொட்டு நீர்பாசன அமைப்புகள் பொருத்தி குறைந்த நீர்த்தேவையில் மிகுந்த பரப்பில் சாகுபடி செய்ய சலுகைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையும் இணைந்து செயல்படுகிறது.

புதுயுகத்தின் சமத்துவக் கருத்தையொட்டி பண்ணை மகளிர்க்கு பெண் அலுவலர்கள் மூலமே பயிற்சிகள் அளித்து புதிய தொழில் திறமைகளை வழங்கி மகளிர் மேம்பாட்டுக்கும் (Gender Equity) டான்வா திட்டத்தின் மூலம் இத்துறை பணியாற்றி வருகிறது. மகளிர் வருவாய் அவர்களது

பொருளாதார சமத்துவத்தை ஈட்ட உறுதுணையாக அமைவது, இத்திட்டத்தில் மாநிலம் முழுவதும் கண்கூடாக தெரிவதை விவசாயக் குடும்பத்தினர் அறிவர்.

பயன்படாமல் உள்ள தரிசு நிலங்களைப் படிப்படியாக பயன்படுத்தும் நோக்கில் நடப்பு ஆண்டில் 10 மாவட்டங்களில் தலா 1,000 எக்டர் வீதம் 10,000 எக்டர் மரச்சாகுபடிக்கு கொண்டு வரப்படுகிறது. இதைத்தவிர நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வேளாண்மை வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டத்திலும் 84 ஊராட்சி ஒன்றியங்களில் இவ்வாண்டு ரூ.1,700 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

பல்வேறு வேளாண்மை சார்ந்த துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் வட்டாரந்தோறும் 50 எக்டர் பரப்பில் பல்துறை செயல் விளக்கத் திடல்கள் அமைத்து எண்ணற்ற வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை உள்ளூர் வளம் மற்றும் தேவைக்கேற்ப செயல்படுத்தி விவசாயிகள் பயன்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**உழவர் சந்தை**

வேளாண்மை விற்பனைத்துறை மூலம் செயல்படும் மாண்புமிகு முதல்வரின் "உழவர் சந்தை" திட்டத்திலும் வேளாண்மைத்துறைப் பணியாளர்கள் தீவிர பங்கேற்றுப் பணியாற்றுகிறார்கள். உற்பத்தியாளர் களையும், நுகர்வோர்களையும் ஒருங்கிணைத்து இருசாராரும் பயன்பெறும் வண்ணம் தீட்டப்பட்டுள்ள இத்திட்டம் வேளாண் வளர்ச்சியில் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

**எதிர்காலத் திட்டங்கள்**

வேளாண்மை போன்ற பரந்து விரிந்த துறையின் தேவைகள், சவால்கள் எண்ணில் அடங்கா. தென்னையில் அண்மை யாண்டுகளில் சவாலாக உருவாகியுள்ள "ஈரியோபிட்" சிலந்தி தாக்குதல், கரும்பு பயிரில் பல பிரபலமான இரகங்களையும் தாக்கிவரும் செவ்வழுகல் (Red Rot) நோய் போன்ற சவால்கள், பாசன / எரிசக்தி தேவைகளில் எழுந்துள்ள பற்றாக்குறைகள், புதிய பொருளாதார சூழ்நிலைகளால் தோன்றியுள்ள வாய்ப்பு ஆகியவைகளை எதிர்கொள்ள இத்துறை தயாராகி வருகிறது.

பல சிறுவிவசாயிகள் இணைந்து உயர் வேளாண் முதலீட்டில், அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் (Co-operative/Corporate farming) வாய்ப்புகளை ஊக்குவித்தல், இலாபகரமான ஒட்டு நெல் இரகங்களை தெரிவு செய்து உபரி உற்பத்தி மூலம் ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாக்குதல், விவசாயிகள் பலவகைப்பயிர்களையும் காப்பீடு செய்யும் வசதிகளை உருவாக்கி விரிவுபடுத்துதல் போன்ற பல தொலைநோக்கு திட்டங்கள் தயாராகி வருகின்றன.

மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்பில்லாத சாகுபடிப்பரப்பு மற்றும் நீர்ப்பாசன ஆதாரங்கள், பெருகிவரும் மக்கள் தொகை, வாங்கும் திறன் (Purchase Power) பெருக்கத்தால் உயர்ந்து வரும் நுகர்வு (Percapita Consumption) உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக அறிஞர்கள், தன்னார்வ ஆய்வு நிறுவனங்கள், சகோதரத்துறையினர் மற்றும் விவசாயிகளுடன் இணைந்து ஆக்கபூர்வமாக பணியாற்றி சாதனை புரிய தமிழக வேளாண்மைத்துறை ஆயத்த நிலையில் உள்ளது. ★

---

# தன்னார்வப் பயிலும் வட்டம்

வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் இளைஞர்கள், போட்டித் தேர்வுகளில் கலந்துக் கொண்டு பணி நியமனம் பெறுகின்ற அளவுக்குத் தங்களின் திறமைகளை அதிகரித்துக் கொள்ள ஏதுவாக தமிழ்நாட்டிலுள்ள 24 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை நாடுவோர்களின் தன்னார்வப் பயிலும் வட்டம் (Study Circles) ஏற்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டது.

1. காஞ்சிபுரம்; 2. திருவள்ளூர்; 3. வேலூர்;
4. திருவண்ணாமலை; 5. கடலூர்; 6. திருவாரூர்;
7. தஞ்சாவூர்; 8. நாகப்பட்டினம்; 9. நீலகிரி;
10. பெரம்பலூர்; 11. கிருஷ்ணகிரி; 12.கரூர்;
13. ஈரோடு; 14. திண்டுக்கல்; 15. சிவகங்கை;
16. இராமநாதபுரம்; 17. விருதுநகர்; 18.திருநெல்வேலி;
19. தூத்துக்குடி; 20. நாகர்கோவில்; 21. புதுக்கோட்டை;
22. விழுப்புரம்; 23. நாமக்கல்; 24. தேனி ஆகிய
24 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேலை நாடுவோர்கள், தன்னார்வப் பயிலும் வட்டங்களில் உறுப்பினர்களாக இணைந்து, போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு தங்களின் போட்டியிடும் திறனை அதிகரித்து வெற்றியைத் தேடிக்கொள்ள, இந்தத் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் உதவும். தன்னார்வப் பயிலும் வட்டங்களில், போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மனுதாரர்களுக்கு இலவசச் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும். போட்டித் தேர்வுகளுக்குப் பயன்படும் புத்தகங்கள், மாதாந்திர மற்றும் வாராந்திர இதழ்கள் வாங்கப்பட்டு, தற்போது இந்தத் தன்னார்வ பயிலும் வட்டங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புத்தகங்கள்/ நாளிதழ்கள்/ வாரஇதழ்கள்/ இருவார இதழ்கள் ஆகியவற்றைப் போட்டித் தேர்வுக்காகத் தங்களைத் தயார் செய்பவர்கள் வேலைவாய்ப் பகங்களுக்குச் சென்று இவற்றைப் பயன்படுத்தலாம். இந்தத் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாரத்தில் ஏழு நாட்களும் செயல்படும். ★

தமிழ்நாடு அரசு 1982—ஆம் வருடத்திய தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி வரன்முறை மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தினை இச்சட்டத்தில் கண்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 55 தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தும் நோக்கத்தோடு இயற்றியுள்ளது. அவை



- ☐ சுமை ஏற்றுதல், இறக்குதல், அடுக்குதல், பேக்கிங் செய்தல், தூக்கிச் செல்லுதல், எடைபோடுதல், அளத்தல் ஆகிய தொழிலில் ஈடுபடுவோர், இத்தொழில் தொடர்பாகக் கீழ்க்கண்ட இடங்களில் பணிபுரிவோர்
  - ❖ மார்க்கெட், கடைகள், டிப்போ, தொழிற்சாலை, வேர்ஹவுஸ், கிடங்கு உள்ளிட்ட நிறுவனங்கள்.
  - ❖ துறைமுகங்களில் மேற்கண்ட சுமைப்பணிகளில் ஈடுபடுகிற துறைமுகத் தொழிலாளர்கள் அல்லாத ஏனையத் தொழிலாளர்கள்
  - ❖ ரயில்வே யார்டுகள், குட்ஷெட்டுகளில் சுமைப்பணிச் செய்யும் ரயில்வே தொழிலாளர்கள் அல்லாத ஏனையத் தொழிலாளர்கள்
  - ❖ தமிழக வேளாண் பொருட்கள் சந்தைக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள சந்தைகளில் சுமைப்பணி புரிவோர்.
- ☐ பப்ளிக் டிரான்ஸ்போர்ட் வாகனங்களில் சுமை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் அது தொடர்பான பணிகளில் ஈடுபடுவோர்
- ☐ கிடங்குகளில் (Godown) தானியங்களை ஏற்றுதல், இறக்குதல், எடுத்துச் செல்லுதல், பிரித்தல், தானியங்களைச் சுத்தம் செய்தல், கோணிகளில் நிரப்புதல், மூட்டைகளைத் தைத்தல் மற்றும் இவை தொடர்பான வேலைகளில் ஈடுபடுவோர்.
- ☐ உப்பளம் (Salt pans)
- ☐ மீன் பிடிக்கும் தொழில் (Fishing Industry)
- ☐ படகு சம்பந்தமான தொழில்கள் (Boat Working)

# உடல் உழைப்புத் தொழிலாளர் நலத் திட்டம்

- ☐ மரம் சம்பந்தப்பட்ட தொழில் (Timber Industry)
- ☐ கயிறு தொழில் (Coir Industry)
- ☐ அணைகள், பாலங்கள், சாலைகள் மற்றும் கட்டடம் சம்பந்தப்பட்ட பணிகள்
- ☐ கல் வெட்டுதல் மற்றும் கல் உடைத்தல் சம்பந்தப்பட்ட தொழில்
- ☐ தோல் பதனிடுதல் மற்றும் தோல் உற்பத்தி
- ☐ தானியங்கி பணிமனை (Automobile workshop)
- ☐ அப்பளம் தயாரிப்பு
- ☐ வெளுத்தல் மற்றும் சாயம் இடல்
- ☐ மாட்டு வண்டி ஓட்டுதல்
- ☐ செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிப்பு
- ☐ பந்தல் அமைத்தல்
- ☐ உணவு தயாரித்தல்
- ☐ தேங்காய் உரித்தல்
- ☐ வனப்பொருட்கள் சேகரித்தல்
- ☐ உணவு நிறுவனங்கள்
- ☐ முந்திரிக் கொட்டை தொழிற்சாலை (Cashewnut Industry)



- ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுதல்
- சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம்
- சைக்கிள் ரிக்ஷா ஓட்டுதல்
- பொறியியல் பணிகள்
- தீப்பெட்டி, பட்டாசு தயாரித்தல்
- துணி பொருட்கள் மடித்தல்
- காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல்
- கோணி/சாக்கு தொழில்
- தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் தயாரித்தல்
- கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெய்தல்
- அகர்பத்தி தயாரித்தல்
- சலவையகங்கள் மற்றும் துணி துவைத்தல்
- பதநீர் இறக்குதல்
- நிப் தயாரித்தல்
- மாவு ஆலை, எண்ணெய் ஆலை, பருப்பு ஆலை, ரைஸ் மில் தொழில்
- அச்சகத் தொழில்
- விசைத்தறித் தொழில்
- தனியார் பாதுகாப்புப் பணிகள்
- பிளாஸ்டிக் தொழில்
- மண்பாண்டத் தொழில்
- குப்பை சேகரித்தல்
- முடி திருத்துதல் மற்றும் அழகு நிலையங்கள்
- சாலையோர வியாபாரம்
- ஜவ்வரிசித் தொழில்
- செயற்கை வைரம் அறுத்தல்
- பட்டுப்பூச்சி வளர்ப்பு
- கடைகள் மற்றும் நிறுவனங்கள்
- தையல் தொழில்
- மரம் ஏறுதல்
- தகர கொள்கலன் தயாரித்தல்
- பாத்திரங்கள் தயாரித்தல்
- மரப்பொருட்கள் செய்தல்

அணைகள், பாலங்கள் சாலைகள் ஆகியவற்றை கட்டுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழில் இந்தப் பட்டியலில் 10-வது பொருளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொழிலில் இடம் பெற்றுள்ள பணிப் பிரிவுகள்

- கல்வெட்டுபவர் (அ) கல் உடைப்பவர்
- கொத்து வேலை செய்பவர் மற்றும் கொத்தனார்
- தச்சர்
- வர்ணம் பூசுபவர் (அ) வார்னிஷ் அடிப்பவர்
- பிட்டர் மற்றும் கம்பி வளைப்பவர், கம்பி கட்டுபவர்
- பிளம்பர்
- எலக்ட்ரிஷியன்
- மெக்கானிக்
- கிணறு வெட்டும் வேலை செய்பவர்
- வெல்டர்
- கூலியாள்
- தெளிப்பவர் மற்றும் கலப்பவர் (தார் ஜல்லி)
- மரத்தால் கட்டுபவர், கல் கட்டுபவர்

☐ கிணற்றில் தூர் எடுப்பவர்

☐ சுத்தியல் அடிப்பவர்

☐ கூரை வேய்பவர்

☐ மேஸ்திரி

☐ கருமான், கொல்லன்

☐ மரம் அறுப்பவர்

☐ சந்துகள் அடைத்து நீர் உட்புகாமல் செய்பவர்

☐ கான்க்ரீட் கலப்பவர்

☐ பம்ப் ஆபரேட்டர்

☐ மிக்ஸர்

☐ ரோலர் டிரைவர்

☐ கலாசி

☐ காவலாளி

☐ மொஸைக் தொழிலாளி

☐ சுரங்க வழி தோண்டுபவர்

☐ பாறை உடைப்பவர் மற்றும் கற்குடைய தொழிலாளி

☐ சலவைக்கல் தொழில் செய்பவர்

☐ கட்டுமானத் தொடர்புடைய மண் வேலை செய்பவர்

☐ சாலைத் தொழிலாளி

☐ சுண்ணாம்பு தயாரிப்பு பணியில் இருப்பவர்

☐ கடல் அரிப்புத் தடுப்புப் பணியில் ஈடுபடும் வேலையாள்

☐ அணைகள், பாலங்கள், சாலைகள் ஆகியவற்றைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் இதர கட்டுமான பணியில் ஈடுபட்டுள்ளவர்.

1.11.94 முதல் மேற்படிச் சட்டம் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்படிச் சட்டத்தின் பிரிவு 3ல் உடல் உழைப்புத் தொழிலாளர்களின் பொது நலனுக்காகத் திட்டங்கள் மற்றும் நிதிகள் உருவாக்கப்படலாம் என்றும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின் அடிப்படையில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக1994 ஆம் வருடத்திய தமிழ் நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டம், அரசால் உருவாக்கப்பட்டது. 1.11.94 முதல் இத்திட்டம் சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி மற்றும் கோவை மாநகராட்சி ஆகிய மூன்று மாநகராட்சியின் எல்லைகளுக்கு மட்டும் பொருந்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குக் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம், வருங்கால வைப்புநிதித் திட்டம், தொழிலாளர் மாநில காப்பீடுத் திட்டம், ஓய்வூதியம் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள் ஆகிய நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட வேண்டும்.

இந்நலத் திட்டங்களை அமல் செய்வதற்குத் தேவையான நிதிக்காக அரசு ஒரு நல நிதியை அமைத்துள்ளது. இந்நல நிதியின் பெயர் "தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொது நல நிதி" ஆகும். 1982–ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை சீரமைப்பு மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பிரிவு 8–ஏ–ன்படி தமிழ்நாட்டின் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினை அந்நிதிக்குச் சந்தாவாகச் செலுத்த வேண்டும். 1.11.94 முதல் இந்த சதவிகிதம் கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டின் 0.1% ஆக இருந்தது. 1.7.97 முதல் இந்த சதவிகிதம் கட்டுமானப் பணியின் மதிப்பீட்டில் 0.3% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



இத்திட்டத்தினை அமல் செய்வதற்காக அரசு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை உருவாக்கியுள்ளது. அவ்வாரியத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 21. இவர்களில் 5 பேர் அரசு தரப்பு உறுப்பினர்கள். 8 பேர் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் 8 பேர் வேலை அளிப்பவர்களின் பிரதிநிதிகள். அரசு பிரதிநிதியான தொழிலாளர் ஆணையர் இவ்வாரியத்தின் தலைவர் ஆவார்.

தமிழ்நாட்டின் எல்லைக்குள் பணிபுரியும் எந்த ஒரு கட்டுமானத் தொழிலாளியும் ரூ.25/–ஐ செலுத்தி இவ்வாரியத்தில் பதிவு செய்து கொள்ளலாம். கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு கட்டுமானத் தொழிலாளிக்கும் ஒரு அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குத் தற்போது கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட்டு வருகின்றன.

- ☐ விபத்துக் காப்பீட்டுத் திட்டம்
- ☐ ஈமச்சடங்கு உதவித் திட்டம்
- ☐ இயற்கை மரணம் உதவித் திட்டம்
- ☐ கல்வி உதவித் தொகைத் திட்டம்
- ☐ திருமண உதவித் தொகைத் திட்டம்
- ☐ மகப்பேறு / கருச்சிதைவு உதவித் தொகைத் திட்டம்

### விபத்துக் காப்பீட்டுத் திட்டம்

வாரியத்தில் பதிவு செய்து கொண்ட அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வாறு காப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்கள் விபத்தில் காயம் அடைந்தாலோ அல்லது உயிரிழந்தாலோ, காப்பீடு தொகை பெறுவார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி விபத்தில் உயிரிழந்தால் ரூ.1,00,000, 10.5.98 முதல் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு முன்னர் இக்காப்பீட்டுத் தொகை ரூ.50,000–ஆக இருந்தது. விபத்தில் காயம் அடைந்தால் அக்காயத்தால் தொழிலாளிக்கு ஏற்படும் நிரந்தர ஊனத்தின் தன்மையைப் பொறுத்து அவருக்குக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

### ஈமச்சடங்கு உதவித் தொகைத் திட்டம்


வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இறந்தால் அவருடைய நியமனதாரருக்கு 28.2.99 முடிய உள்ள காலத்தில் ரூ.500 ஈமச்சடங்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. 1.3.99 முதல் இத்தொகை ரூ.2000–ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

### இயற்கை மரணம் உதவித் தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கை மரணம் அடைந்தால் அவரது நியமனதாரருக்கு ரூ.5000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது

### கல்வி உதவித் தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் 10ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றால் ரூ.750–ம், 12ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றால் ரூ.1000–ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.



### திருமண உதவித் தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் திருமணத்திற்குத் திருமண உதவித் தொகையாக ரூ.1000 வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

### மகப்பேறு / கருக்கலைப்பு உதவித் தொகைத் திட்டம்

பதிவுபெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளிக்கு மகப்பேறு / கருக்கலைப்புக்கு உதவித் தொகையாக ரூ.2000 வழங்கப்படுகிறது. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906



ஓட்டல் தமிழ்நாடு
HOTEL TAMILNADU
KANCHEEPURAM

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

